பக்கங்கள்: 20
விலை: 30.00

# தீம்புனல்
THEEMPUNAL
வாராந்தப் பத்திரிகை


தீ : 01 புனல்:38 15.01.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



ஈழத்தமிழரின் அரசியலுக்கு
சீமானின் அரசியல் ஆபத்தானதா?

ஊர்மிளா

பக்கம்
03



வெளிநாட்டுப் பணமும் உள்நாட்டு ஆடம்பரமும்

பொலிகை ஜெயா

பக்கம்
11

வர்மா



# இலங்கையைச் சுற்றி பின்னப்படும் அரசியல்வலை

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மேற்கொண்ட ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் கடைசி இடமாக இலங்கை இருந்தது.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ செஜ் கொங் கடந்த டிசம்பரில் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட சூறாவளிச் சுற்றுப் பயண அதிர்வலைகள் அடங்கு முன்பே சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வரப்போகிறார் என்ற செய்தியால் அரசியல் அரங்கு சுறுசுறுப்படைந்தது.

இலங்கையின் உள்நாட்டு அரசியல் சதிராடிக் கொண்டிருக்கிறது. அமைச்சரவைக்குள் கருத்து வேற்றுமை, ஆட்சியைக் கைப்பற்றப் போவதாக எதிரணிகள் முழக்கம், தமிழ்க் கட்சித் தலைவர்கள் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம், பொருளாதாரச் சரிவு, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, தட்டுப்பாடு என்பனவற்றால் மக்கள் அல்லல்படுகிறார்கள். இத்தனை பிரச்சினைகளுக்கு மத்தியில் சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் நடைபெற்றது.

பருத்தித்துறைக்குச் சென்ற இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ செஜ் , இங்கிருந்து இந்தியா எவ்வளவு தூரம் எனக் கேட்டார். மன்னாருக்குச் சென்ற அவர் இந்திய எல்லைக்கு மிக நெருக்கமான இராமர் பால மணல் மேட்டுக்குச் சென்றார். சீன வெளிவிவகார அமைச்சரும் தன் பங்குக்கு "யாழ்ப்பாணம், இலங்கையின் வடக்குப் பக்கத்தில் உள்ளது.இன்னொரு நாட்டின் தெற்கில் அல்ல" என மறைமுக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவு தொடங்கி, 65 ஆண்டுகள்

▶17



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீம்புனல் இன்
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



'பேசாப் பொருளையும் பேசும் குரல்'

# விளாடிமிர் புட்டின் தலைமையில் சோவியத் யூனியனாக மீளமைக்கப்படுகிறதா ரஷ்யா?

ஐ.வி.மகாசேனன்


கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில், சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட 30 ஆவது ஆண்டு நிறைவை அண்டிய காலப்பகுதியில், ரஷ்யா உக்ரைனுடனான தனது எல்லையில் துருப்புக்களை குவித்து, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அதன் படைகளை சோவியத் குடியரசுகளுக்குள் விரிவுபடுத்துவதைத் தடுக்கும் வகையில் வரைவு ஒப்பந்தங்களை வெளியிட்டது. இதன் தொடர்ச்சியாக, அமெரிக்கா மற்றும் அதன் ஐரோப்பிய நட்பு நாடுகள் மாஸ்கோவுடன் ஜெனீவாவில் ஜனவரி-9(2022) முதல் முக்கிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில், 2022 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் கஜகஸ்தானில் ஏற்பட்டுள்ள வெகுஜன எதிர்ப்பினை கட்டுப்படுத்த கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவின் வேண்டுகோளின் பேரில் ரஷ்யா தலைமையிலான கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு (CSTO) இராணுவ ரீதியாகத் தலையிட்டது. இக்கட்டுரை மத்திய ஆசியாக்குடியரசுகளில் ஏற்பட்டுவரும் நெருக்கடிகளுக்குப் பின்னாலுள்ள ரஷ்யா-அமெரிக்க அதிகார மோதுகையைத் தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய மாதங்களில், ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ரஷ்ய துருப்புக்கள் உக்ரேனிய எல்லைக்கு அருகில் குவிக்கப்பட்டுள்ளன. மேலும், சமீபத்திய நாட்களில், ஆயிரக்கணக்கான ரஷ்ய துருப்புக்கள் கஜகஸ்தானுக்குள் ஏற்பட்டுவரும் எழுச்சியை நசுக்கும் முயற்சியில் எல்லையைக் கடந்துள்ளன. இந்த இரண்டு முன்னாள் சோவியத் குடியரசுகளுக்கும் ரஷ்யாவின் அணுகுமுறையில் வேறுபாடுகள் உள்ளன.

ஒன்று, 2014 இல், ரஷ்யா கிரிமியாவைக் கைப்பற்றி உக்ரைனின் டான்பாஸ் பகுதிக்கு நகர்ந்தது. இதன் தொடர்ச்சி தன்மை தற்போது வரை நீள்கிறது. தற்போதும் ரஷ்யா உக்ரைன் எல்லைகளில் துருப்புக்களை குவித்து உள்ளது. இதன் முழுமையான சர்வதேச அரசியல் பக்கம் கடந்த இதழ்களில் இப்பகுதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் மூலோபாய நோக்கம் வெளிப்படையானது. ரஷ்யா உக்ரைனின் அமெரிக்கா தலைமையிலான மேற்குசார்பு நிலைப்பாட்டுக்கு எதிராகவே இந்த ஆக்கிரமிப்பு முனைப்புக்களை முன்னெடுக்கிறது.



இரண்டு, 2022 ஆம் ஆண்டின் முதல் வாரத்தில் சோவியத் குடியரசான கஜகஸ்தானில் அரசியல் நெருக்கடியொன்று உருவாகியுள்ளது. கஜகஸ்தானின் மேற்குநகரமான ஜானோசென்னில் எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்கள் அணிதிரண்ட சிலநாட்களுக்குள் பல்வேறு சமூகப் பொருளாதாரக் குறைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டு பிறநகரங்களுக்கு ஆர்ப்பாட்டங்கள் வேகமாகச் சென்றன. இறுதியாக, எதிர்ப்பாளர்கள் கஜகஸ்தான் அரசியல் அமைப்பு ஊழல் நிறைந்துள்ளதாகவும் அதனை நிறுத்தக்கோரி போராட்டத்தை நகர்த்தினார்கள். கஜகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயே ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை ஏற்று சில முன்னகர்வுகள் மேற்கொண்ட போதிலும், எதிர்ப்புகள் விரைவில் வன்முறையாக மாறியது. கலவரக்காரர்கள் கடைகள், காவல் நிலையங்கள் உள்ளூர் நிர்வாகக் கட்டடங்களைத் தாக்கினார்கள். சீர்குலைவை சீர்செய்ய எச்சரிக்கை இல்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்த பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிட்டார் டோக்காயேவ். அத்துடன் கஜகஸ்தான் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில், கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பானது (CSTO) ரஷ்யா தலைமையிலான இராணுவக் கூட்டணியை மூலோபாய பொருட்களைப் பாதுகாக்க கஜகஸ்தானுக்கு அனுப்பியது. ரஷ்யா சர்வதேச படையின் ஒரு பகுதியாகப் படையெடுத்து, வசதியான மறைப்பை வழங்கியது. ஆனால், மீண்டும் ரஷ்யாவின் மூலோபாய நோக்கம் வெளிப்படையானது. சோவியத் குடியரசான கஜகஸ்தானை நட்புகரங்களில் வைத்திருக்க வேண்டும் என்பதன் மூலம் நிலையான எதிர்காலத்தை நோக்கி நகர திட்டமிடுவதைக் காணமுடிகிறது.



இவற்றினடிப்படையில், ரஷ்ய ஜனாதிபதி புடின் பனிப்போருக்குப் பிந்தைய இயல்பை மாற்றி, தனது சுற்றுப்புறத்தை மீளவும் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்ச்சியை மேற்கொண்டு வருகின்றார் என்பதே தெளிவாகிறது. மேலும், ரஷ்யப் படைகள் 1989 களுக்கு முற்பட்ட பனிப்போர் காலத்தில் யூரேசிய நிலப்பரப்பில் செயற்பட்டமை போல சமகாலத்திலும் செயற்பட முனைகின்றமையின் வெளிப்பாடுகளாகவே உக்ரைன் மற்றும் கஜகஸ்தான் விவகாரங்களில் ரஷ்ய இராணுவ துருப்புக்களின் செயற்பாடுகளினை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அது அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோவின் யுரேசியா மீதான பனிப்போருக்குப் பின்னான ஆதிக்கத்திற்கு கடுமையான நெருக்கடியை ஏற்படுத்துவதாகக் காணப்படுகிறது. இது நிச்சயமாக நேட்டோவிற்கு அவசர கேள்விகளை எழுப்புகிறது. இது கிழக்கையும் மேற்கையும் மற்றொரு மோதல் போக்கில் வைப்பதாகத் தெரிகிறது. இப்போக்கை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகிறது.

கஜகஸ்தானின் உள்ளக பாதுகாப்பிற்கு ரஷ்யாவின் ஆதரவை கோரியமையை அமெரிக்க வெளியுறவுச் செயலகம் கடுமையாகச் சாடியுள்ளது. அமெரிக்க வெளியுறவுச்செயலளார் அண்டனி பிளிங்டன் ஜனவரி-07 (அன்று) செய்தியாளர்களிடம் கஜகஸ்தானில் நிலவும் சமீபத்திய அமைதியின்மை பற்றி கூறினார். அதாவது, “கஜகஸ்தானில் இப்போது என்ன நடக்கிறது என்பதற்கு மிகவும் குறிப்பிட்ட இயக்கிகள் உள்ளனர். அங்கு என்ன நடக்கிறது என்பது உக்ரைனின் எல்லையில் நடப்பதிலிருந்து வேறுபட்டது. சமீபத்திய வரலாற்றில் ஒரு பாடம் என்று நான் நினைக்கிறேன். ரஷ்யர்கள் உங்கள் வீட்டில் இருந்தால் அவர்களை வெளியேற வைப்பது சில நேரங்களில் மிகவும் கடினம்” எனக்குறிப்பிட்டார். இக்கருத்துக்கு எதிர்வினையாற்றி உள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சகம் தமது டெலிகிராம் தளத்தில், “ஆன்டனி பிளிங்கன் வரலாற்றுப் பாடங்களை மிகவும் நேசிக்கிறார் என்றால், அவர் பின்வருவனவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அமெரிக்கர்கள் உங்கள் வீட்டில் இருக்கும் போது, உயிருடன் இருப்பது கடினம் மற்றும் கொள்ளையடிக்கப்படவோ அல்லது கற்பழிக்கப்படவோ கூடாது” என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், “இது அமெரிக்காவின் சமீபத்திய கடந்த காலத்தால் கற்பிக்கப்பட்டது அல்ல. மாறாக, அமெரிக்காவின் 300 ஆண்டுகால அரசால் இது கற்பிக்கப்பட்டது” என்று தெரிவித்துள்ளது. அமெரிக்க மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தின் கருத்து மோதல்க்ள மத்திய ஆசியா சார்ந்து இரு நாடுகளுக்கும் எழுந்துள்ள நெருக்கீட்டையே வெளிப்படுத்துகிறது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு முனைப்புக்கள், அமெரிக்கா மத்திய ஆசியாவில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு எண்ணங்கள் சார்ந்து பரந்த அளவில் எதிர்வினையான பிரச்சாரத்தை மேற்கொள்ள ஏதுவாகியது. எனினும் கஜகஸ்தானில் அவ்அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ரஷ்யா பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை மத்திய ஆசியாவில் ரஷ்யா தொடர்பான அமெரிக்காவின் எதிர்வினையான பிரச்சாரங்களை தவிடு பொடியாக்கி உள்ளது. ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்மஸ் தினத்தன்று திடீரென கலவரம் நிறைந்த கஜகஸ்தானில் விரைவான தலையீட்டின் மூலம் ரஷ்யா தனது உடனடி சுற்றுப்புறத்தில் பாதுகாப்பு வழங்குநராகவும், ஒழுங்குமுறையை செயற்படுத்துபவராகவும் செயற்பட முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. கூட்டுப் பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பின் சார்பு ஏற்பாட்டின் கீழ் சுமார் 2,000 பராட்ரூப்பர்கள் மட்டுமே விமானத்தில் அனுப்பப்பட்டனர். ஆனால், ரஷ்ய வான்வழி துருப்புக்களின் அனுபவமிக்க தளபதியான ஜெனரல் ஆண்ட்ரி செர்டியுகோவ், நடவடிக்கையின் கட்டளை அதிகாரியாக வியத்தகு வலுவூட்டல்களைச் செய்துள்ளார். இதன்விளைவாக, எதிர்ப்பு அதிகமான அல்மாட்டியில் பதட்டமான ஸ்திரத்தன்மை ரஷ்யா இராணுவ துருப்புக்களால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

சீனாவின் எழுச்சி ஒருவகையில் ரஷ்யாவுக்கும் அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்ற நிலையிலும் மத்திய ஆசியாவில் இரு நாடுகளின் தேசிய நலன்களும் பொதுமைப்படுவதனை அவதானிக்க முடிகிறது. பாதுகாப்பு அடிப்படையில், மத்திய ஆசியாவில் ரஷ்சியாவின் மேலாதிக்கத்தை ஏற்க சீனா தயாராக உள்ளது. ரஷ்யா துருப்புக்களை அனுப்புவது மாஸ்கோ மற்றும் பெய்ஜிங்கின் பொதுவான நலனில் உள்ளது. மேற்கத்திய நாடுகள், ஆப்கானிஸ்தானில் இருந்து பின்வாங்கி அப்பிராந்தியத்தை ஒதுக்கிவிட்டதால், தங்களின் மூலோபாய இலக்குகளுக்கு ஏற்றவாறு சூழ்நிலையை கையாளும் திறன் மத்திய ஆசிய அரசுகளுக்கு குறைவாகவே உள்ளது. ரஷ்யா, சீனா மற்றும் மத்திய ஆசிய அரசாங்கங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு முதன்மையாக பாதுகாப்பு சார்ந்தது. மூவரும் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுதல், வன்முறை மதத்தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஜனநாயகமயமாக்கல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு போன்ற வடிவங்களில் மேற்கத்திய தலையீட்டை எதிர்ப்பதில் ஆர்வமாக உள்ளனர். பங்காளிகளுக்கிடையேயான நோக்கங்கள் வேறுபடுகின்றன. ஆனால், மேற்கத்தைய தலையீட்டை எதிர்த்தல் என்ற நோக்கத்தில் அதிக அளவு ஒத்துழைப்பு உள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு முனைப்புக்கள், அமெரிக்கா மத்திய ஆசியாவில் ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு எண்ணங்கள் சார்ந்து பரந்த அளவில் எதிர்வினையான பிரச்சாரத்தை மேற்கொள்ள ஏதுவாகியது. எனினும் கஜகஸ்தானில் அவ் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் ரஷ்யா பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை மத்திய ஆசியாவில் ரஷ்யா தொடர்பான அமெரிக்காவின் எதிர்வினையான பிரச்சாரங்களை தவிடு பொடியாக்கி உள்ளது.

நான்காவது, கஜகஸ்தானுக்கு ரஷ்யா நட்புகரம் வழங்கியுள்ள போதிலும் ஆதிக்க மனப்பாங்கும் ஒருங்கே காணப்படவே செய்கின்றது. கஜகஸ்தானுடன் எல்லைகளை மறுசீரமைக்க ரஷ்யா இப்போது தனது இராணுவ இருப்பை சுரண்டிக்கொள்ளுமா என்பது நிச்சயமற்றதாயினும், சாத்தியப்பாடுகள் காணப்படவே செய்கின்றது. கஜகஸ்தான் மத்திய ஆசியாவில் மிகப்பெரியது மற்றும் உலகளாவிய எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதியாளராக உள்ளது. இது உலகில் பன்னிரண்டாவது பெரிய நிரூபிக்கப்பட்ட கச்சா எண்ணெய் இருப்புக்களைக் கொண்டுள்ளது. மேலும், அதன் பொருளாதாரம் ஐரோப்பா மற்றும் ஆசியா ஆகிய இரண்டிற்கும் ஹைட்ரோகார்பன்களை விற்பதை பெரிதும் சார்ந்துள்ளது. இப்பொருளாதார நன்மைகள் மற்றும் சோவியத் குடியரசு என்ற அடிப்படையில் ரஷ்யாவின் நாட்டம் தவிர்க்க இயலாததாகவே காணப்படுகிறது. ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின், கஜகஸ்தானுடனான தனது எல்லைகளை மாற்றுவதற்கு ரஷ்யாவிற்கு உரிமை உள்ளது என்று எச்சரித்துள்ளார். மேலும், “எப்படியும் சோவியத் வீழ்ச்சிக்கு முன்னர் கசாக்கியர்களுக்கு ஒருபோதும் அரசு அந்தஸ்து இல்லை” என்று புடின் கூறுகிறார். இவ்வாறான கருத்துக்கள் கஜகஸ்தான் மீதான ரஷ்யாவின் நாட்டத்துக்கு சான்றுபயிர்ப்பதாகவே அமைகிறது.

எனவே, மத்திய ஆசியாவின் சமீபத்திய அரசியல்களில் புடின் மீள சோவியத் ஒன்றியத்தைக் கட்டியெழுப்புவதில் முழுவீச்சாக உள்ளார் என்பதையே உறுதி செய்கிறது. 2021 இன் இறுதிப்பகுதிக்கு முன்னர் ரஷ்யாவின் ஆட்சியில் தனது இருப்பை பலப்படுத்துவதற்கான நகர்வுகளை புடின் முன்னெடுத்திருந்தார். அதனை உறுதிப்படுத்தியதற்கு பின்னர், சோவியத் ஒன்றியம் பிளவுற்ற முப்பதாண்டு நினைவு காலத்தில் மீள சோவியத் ஒன்றித்தை கட்டமைக்கும் நகர்வுகளுக்கான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அமெரிக்கா மத்திய ஆசியாவில் ரஷ்யாவுடன் கருத்துக்களில் மோதல் களத்தை உருவாக்குகின்ற போதிலும், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவினால் ஏற்பட்டுள்ள நெருக்கீடுகளை சீர்செய்வதில் முழுமையாக ஈடுபட்டுள்ளமையால், மத்திய ஆசியாவில் ரஷ்யாவின் வளர்ச்சியை கட்டுப்படுத்த இயலாத நிலையில் உள்ளமையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com
தீம்புனல் THEEMPUNAL

# மெல்ல சீன மொழி இனி மேலே ஓங்குமா?

இலங்கை அரசியலில் பௌத்த மதமும், சிங்கள மொழியும் பின்னிப் பிணைந்துள்ளன. கடும் தீவிரவாதப் போக்குடைய வாக்கு வங்கியே இலங்கையில் அரசியலைத் தீர்மானிக்கிறது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை, சிங்கள மொழிக்கு முன்னுரிமை. தவிர இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக வணக்கத்துக்குரிய தேரர்கள் இருக்கிறார்கள். இலங்கை அரசியலமைப்பில் தமிழ் அரச மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அதற்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதில்லை. எழுத்துப் பிழையுடனும் கருத்துப்பிழையுடனும் காட்சிப்படுத்துவார்கள்.

சீனா, இலங்கையில் முதலீடு செய்து அபிவிருத்தி செய்யத் தொடங்கியபோது ஆங்கிலமும் சீன மொழியும் மட்டும் உள்ள விளம்பரப் பலகைகளும், ஆங்கிலம், சிங்களம், சீன மொழி உள்ள விளம்பரப் பலகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன. தமிழுக்கு இடம் வழங்கப்படவில்லை. அப்போது அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. தமிழ் புறக்கணிக்கப்பட்டதால் பொங்கி எழுந்த மனோகணேசன் காரசாரமான கடிதம் அனுப்பினார். சீனத் தொழிலாளிகள் அதிகளவில் இருப்பதால் சீன மொழி இருப்பதாகவும் எதிர்காலத்தில் தமிழுக்கு உரிய இடம் கொடுப்பதாகவும் பதிலளிக்கப்பட்டது.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்ட பின்னர் உடனடியாக அவரது தாயகத்துக்குத் திரும்பிவிட்டார். அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் அனைத்திலும் சீன மொழி மட்டுமே விளம்பரப்படுத்தப்பட்டது. சிங்களத்துக்கே இடம் இல்லாதபோது தமிழையும், ஆங்கிலத்தையும் எப்படி எதிர்பார்க்க முடியும்.

சீன வெளி விவகார அமைச்சர் வாங் யி இலங்கைக்கு மேற்கொண்ட அரசமுறை பயணத்தின் போது ஜனாதிபதி கோட்டபாய ராஜ பக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் பங்கேற்ற அரச நிகழ்ச்சியில் இலங்கையின் ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றில் எந்தக் குறிப்போ விளம்பரங்களோ இடம்பெறவில்லை. சீன மொழி மட்டும் என்பதை தீர்மானித்தது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. இதன் மூலம் இலங்கையில் சீன மொழியின் ஆதிக்கம் மேலோங்குகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சீனாவின் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரின் சில திட்டங்களையும் உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகு பிரிவு ஆகியனவற்றையும் சீன வெளிவிவகார அமைச்சர் வங் யி திறந்து வைத்தார்.இந்த விழாவில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்த உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகு பிரிவு ஆகியன திறந்து வைக்கும் நிகழ்வின் போது, காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை பற்றியே சமூக வலைத்தளங்களில் தற்போது அதிகளவில் பேசப்படுகின்றது.

இந்த சர்ச்சை தொடர்பில் முன்னாள் அரச கரும மொழிகள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன், தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

“எங்கே எங்கள் இரண்டு ஆட்சி தேசிய மொழிகள்? அல்லது துறைமுக நகர் முழுமையாக சீனாவின் சொத்தா? எமது 65 வருட நட்புறவை இப்படிதான் கொண்டாடுவதா? யாருக்குப் பொறுப்பு, அக்கறை..? ஒருவருக்கும் வெட்கமில்லை..! தேசத்திடம் மன்னிப்பு கோருங்கள்..!” என மனோகணேசன் தனது டுவிட்டரில் பதிந்துள்ளார்.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகம், ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோருக்கும் இதனை பகிர்ந்துள்ளார். சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை முன்னெடுத்த நல்லாட்சி அரசு அமைச்சு ஒன்றை உருவாக்கி பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது.

சிங்களம் அவமானப்படுத்தப்பட்டால் சிங்கம் போல் கர்ஜிப்பவர்கள் மௌனமாக இருக்கின்றனர். தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கும்போதும், தமிழில் தேசிய கீதம் பாடும்போதும் பொங்கி எழுந்தவர்கள் சிங்களம் புறக்கணிக்கப்படுவதைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருக்கிறார்கள். பலாலி விமான நிலையத்திலும், மன்னாரிலும் தமிழை முதலில் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தியதற்கு பதறியடித்துக் குரல் கொடுத்தவர்கள் சீன மொழி மட்டும் இருப்பதைப் பார்த்தபின் பம்முகிறார்கள்.

சீனாவின் உதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் தமிழ் மொழி கடந்த காலங்களிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ள போதிலும், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, அந்த இடத்திற்கு சீன மொழி உள்வாங்கப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் பதிவாகியிருந்தன. சீனாவினால் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகர் மற்றும் சீனாவின் உதவியில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிர்மாணிக்கப்பட்ட பெயர்ப் பலகைகளில் சீன மொழி உள்வாங்கப்பட்டு, தமிழ் மொழி கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டிருந்தன. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு உயரிய இடத்திலேயே, தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை குறித்து, எழுந்த சர்ச்சையை அடுத்து, அந்தப் பெயர்ப்பலகை மாற்றப்பட்டது. தமிழ் மொழிக்கு இலங்கையில் உரிய அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. சீனாவும் அதையே பின்பற்றுகிறது.

சீன முதலீடுகளும், சீனா கொடுக்கும் கடன்களும் அரசியல்வாதிகளின் கண்களை மறைத்துள்ளன. அடுத்து முன்னெடுக்கப்படும் சீனாவின் திட்டங்களில் மும்மொழிக் கொள்கைக்குப் பதிலாகச் சீன மொழியும் கட்டாயமாக உள்வாங்கப்படும். ■

# ஈழத்தமிழரின் அரசியலுக்கு சீமானின் அரசியல் ஆபத்தானதா?

ஊர்மிளா

இலங்கைத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் இருந்து பலர் குரல் கொடுத்தார்கள். இப்போது சீமானின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. காங்கிரஸ் குடும்பத்தைச் சேர்ந்த சீமான் திராவிட முன்னேற்றக் கழகத்தால் ஈர்க்கப்பட்டார். சினிமா மூலம் அறிமுகம் பெற்ற சீமான் இப்போது முழு நேர அரசியல்வாதியாக மாறிவிட்டார்.

இன்றைய அரசியல்வாதிகளில் நரம்பு புடைக்க உணர்ச்சிவசமாகப் பேசும் சீமானின் பேச்சில் இளைஞர்கள் மயங்கிக் கிடக்கின்றனர். வரம்பு மீறிய சீமானின் பேச்சு இளம் வயதினரைக் கவர்ந்துள்ளது. தொண்டை கிழியப் பேசும் சீமான் காத்திரமான பணி எதனையும் செய்யவில்லை. சீமானின் பேச்சைக் கேட்டு கைதட்டி கலைந்துபோகும் கூட்டம் தான் சீமானின் பின்னால் உள்ளது.

வைகோ, பழநெடுமாறன்,கருணாநிதி,எம்.ஜி.ஆர் போன்ற தமிழக அரசியல்வாதிகள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்கள். அவர்கள் தமது பணத்தை இலங்கைத் தமிழர்களுக்காக செலவு செய்தார்கள். சீமானும் இலங்கைத் தமிழ் மக்கலுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார். அவர் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்களின் காசில்தான் கட்சியை நடத்துகிறார்.

தமிழகத்தில் செல்வாக்கு இல்லாத சீமானால் அங்கிருந்து எந்த விதமான அழுத்தத்தையும் கொடுக்க முடியாது. சீமானை எதிர்ப்பவர்கள் மீது “ துரோகி” பட்டத்தை எம்மவர்கள் சூட்டுகிறார்கள்.

அஹிம்சைப் போராட்டம், அறவழிப்போராட்டம், சட்டமறுப்புப் போராட்டம், ஆயுதப் போராட்டம், சமாதானப் பேச்சு வார்த்தை போன்றவற்றால் தீர்க்க முடியாத பிரச்சினையை சீமானின் உணர்ச்சிகரமான பேச்சு தீர்த்து விடும் என சிலர் கனவு காண்கிறார்கள்.

இலங்கையில் தலைவருடன் ஆமைக் கறி சாப்பிட்டேன் என்ற சீமானின் வாக்கு மூலத்தை வன்னியில் இருந்தவர்கள் நம்பத் தயாராக இல்லை.



பழிக்குப்பழி, இரத்தத்துக்கு இரத்தம் என்ற சீமானின் பேச்சால் எதுவும் நடைபெறப்போவதில்லை. முகப் புத்தகம், டுவிட்டர், வட்ஸ் அப் போன்ற சமூக வலைத்தள அரசியல் மூலம் தீர்வை எட்ட முடியாது. தமிழக கவுன்சிலர் தேர்தலில் கூட வெற்றி பெறமுடியாத சீமானை நம்பி புலம் பெயர் தமிழர்கள் பணத்தை வாரி இறைக்கிறார்கள். தமிழகத்தில் இருந்து சீமான் உரத்து கத்தினாலும் அது இலங்கையில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளின் காதில் விழப்போவதில்லை.

விரல்களை மடக்கி ஒரு கையை உயர்த்தி உணர்ச்சிகரமாகப் சீமான் பேசும்போது கவர்ச்சியாக இருக்கும். நெஞ்சுக்கு நேரே ஒருகையை நீட்டி சீமானின், நாம் தமிழர்கட்சி அங்கத்தவர்கள் சபதம் எடுப்பார்கள். இவை இரண்டு சம்பவங்களும் ஹிட்லரை நினைவூட்டுவதாக உள்ளன.

தமிழகத்தில் சினிமா மாயையால் அரசியல் தலைவர்கள் உருவாகுவதுபோல் இலங்கையில் நடைபெறுவதில்லை. இலங்கைத் தமிழர்களுக்குத் தலைமை வகிக் கும் தகுதி சீமானுக்கு இல்லை.

2006 தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவாக சீமான் பிரச்சாரம் செய்தார். இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போர் முடிவுக்கு வந்த நேரத்தில், தமிழ்நாட்டில் இளைஞர்கள் மத்தியில் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு எதிராக அதிருப்தி நிலவியது. அந்த நேரத்தில் 2009 ஆம் ஆண்டு நாம் தமிழர் இயக்கத்தை மதுரையில் தொடங்கினார் சீமான். அடுத்த ஆண்டே மே மாதம் இந்த அமைப்பு அரசியல் கட்சியாக உருமாற்றம் அடைந்தது. சிவப்பு நிறத்தில் நடுவே பெரிதும் சிறிதுமான கோடுகளுக்கு மத்தியில் புலித்தலை நாம் தமிழரின் கொடி. இது புலிகளின் கொடியை ஞாபகப்படுத்துகிறது.

2011 தமிழக சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழக் கூட்டணியை எதிர்த்த பிரசாரம் செய்தார். 2011 சட்டமன்றத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகத்தையும் மிக மோசமாக திட்டும் சீமான் முன்பொரு காலத்தில் இரண்டு கட்சித்தலைவர்களுடனும் ஒட்டி உறவாடியவர்.

மேற்கத்திய நாடுகளில் வாழும் தமிழர்கள் சீமானுக்கு ஆதரவளிக்கின்றனர். பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து என்று பல நாடுகளில் வாழும் தமிழர்களில் பலர் சீமானை தமது இனத்தின் மீட்பராகப் பார்க்கின்றார்கள். அதனால் நிறையப் பணம் அனுப்புகிறார்கள். சீமானின் அரசியல் வண்டி, தடம் பிரண்டபின்னர்தான் உண்மைத்தன்மை வெளிவரும். ■

# யாரிடமிருந்து அறைகூவல் வருமெனக் காத்திருக்கின்றோம்?

செல்வின்

இலங்கைத் தீவின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கி விரைவாகச் சறுக்கிக் கொண்டிருக்கின்றது. வெதுப்பகங்கள் நாளாந்தம் நாளாந்தம் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேநீர்ச் சாலைகள் உணவு தயாரிப்புக்கான கோதுமை மா, சீனி, பால்மா, எரிவாயு போன்றவற்றைக் கட்டுபடியான விலையிலும் உரிய நேரத்திலும் பெற முடியாத நிலை உள்ளது.

வீதியோரத்து வியாபாரம் நாளாந்தம் பல நூறாகப் பெருகி கிராமங்களின் குச்சு ஒழுங்கைகளும் வர்த்தக மையங்களாக மாறியுள்ளன. சிறுகடைப் பொருளாதாரத்தில் தங்கியுள்ள பலநூற்றுக் கணக்கான, போருக்குப் பின்னான குடும்பங்கள் திடீரென பெருகி வரும் பல்பொருள் அங்காடிகளுடனும் வீதியோரத்து வியாபாரிகளுடனும் போட்டியிட முடியாத இருதலைக் கொள்ளி எறும்புகளாக மாட்டுப்பட்டுப் போயுள்ளனர்.

வன்னியில் மாற்றுப்பயிராக மரவள்ளித்தடி நட்டவர்கள் விளைந்த கிழங்கினைப் பிடுங்கி எடுப்பதற்கு வேலையாட்களைப் பிடிக்க முடியாதுள்ளது. அதிகூடிய கூலியைக் கொடுப்பதால் இலாபத்தின் அளவு குறைந்துள்ளது.

மட்டக்களப்பில் நெல் விதைத்தவர்களில் வசதிபடைத்தவர்களாகவும் முன்பே சிறிதளவு உரங்கள் கிருமிநாசினிகளைக் கொள்வனவு செய்து வைக்கும் வசதி கொண்டவர்களாக இருப்பவர்கள் பங்கீட்டு முறையில் உரங்களையும் கிருமிநாசினிகளையும் பயிர்களுக்குக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். அவர்களது கூற்றுப்படி இம்முறை 30 வீதம் தொடக்கம் 40 வீதம் வரைதான் விளைச்சலினை எதிர்பார்க்க முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கடலில் இறால் மடி இழுப்பவர்கள் தங்களது வாழ்வாதாரமும் இறால் பிடித்தல் அளவும் மிகவும் குறைந்து போயுள்ளதாகக் கவலைகொண்டுள்ளனர். திட்டமிடப்படாத கடல் அட்டைப் பண்ணைகள் குடாக்கடலின் கரையோரங்களை ஆக்கிரமித்திருப்பதும் வளர்ந்துவரும் அட்டைகள் திருட்டுப்போகாமல் இருப்பதற்காக இரவினில் கடலைப் பகலாக்கியுள்ள காவல் மின்விளக்குகளின் பிரகாசமான ஒளியின் காரணமாக இயற்கையான இறாலின் அறுவடை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என பரம்பரை பரம்பரையாகக் கடற்றொழிலில் தங்கள் ஆழ்ந்த அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் கூறுகின்றனர்.

மறுபுறத்தில் கருவளம் பெருக்குவதற்காக இருண்ட கரையோரங்களைத் தேடும் மீன்களினதும் ஏனைய கடல்வாழ் உயிரினங்களினதும் வருகையும் இனப்பெருக்கம் செய்வதற்கான வாய்ப்பும் கடலட்டைக்கான காவலரண்களின் பிரகாச வெளிச்சங்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் யாழ்ப்பாணக் குடாக்கடல் மீள்வளமற்ற பகுதியாக வளமற்றுபோவதற்கும் அதில் தங்கியுள்ள பல ஆயிரக்கணக்கான மீனவக்குடும்பங்களின் வாழ்வாதாரம் வேரறுந்து போகவும் சாத்தியங்கள் உள்ளன. இது எமது பிராந்தியப் பொருளாதாரத்தின் முதன்மைக்கூறுகளில் ஒன்றான கடல்வளப் பொருளாதாரத்தை வலுவிழக்க வைப்பதற்கான ஆரம்ப முயற்சிகளோ என அறிய வேண்டியுள்ளது.

விதைக்கப்பட்ட நெல் வயல்களில் எதிர்வரும் மாதங்களில் எஞ்சியதாக அறுவடைசெய்யக்கூடிய நெல்லினைக் கொள்வனவு செய்து வைப்பதற்கும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதனை உறுதி செய்ய வேண்டும். அறுவடை செய்யப்பட்ட நெல்லை உள்ளூரிலேயே களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் அதனை அரிசியாக்கி மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்குமான ஆயத்த வேலைகள் எதனையும் வெளிப்படையாகக் காணமுடியவில்லை.

> “நாளாந்தம் இலட்சம் லீற்றர் சுத்தமான பசுப்பாலினை பல்தேசிய கம்பனிகளுக்கு அனுப்பிவிட்டு செயற்கை உள்ளீடுகள் கலந்த பால் மாவினைக் கூடிய விலையில் வாங்குவதற்காகக் காத்துக்கொண்டு இருக்கும் அதிமேதாவித்தனமான சமூகமாக நாங்கள் மாறிவிட்டோம்.”

இந்தச் சந்தர்ப்பங்களில் நெல் கொள்வனவு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இடைத்தரகு வர்த்தகர்கள் “எரிகின்ற வீட்டில் பிடுங்குவது இலாபம்” என்ற கோதாவில் விவசாயிகளிடமிருந்து நெல்லை மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு (கொள்ளை) செய்வர். இதனால் மூன்று அபாயங்கள் ஏற்படுகின்றன.

மிகக்குறைந்த விலையில் நெல்லைக் கொள்வனவு செய்வதனால் விவசாயி மிக மோசமான நஷ்டத்தை எதிர்கொள்கின்றான். இரண்டாவது, தற்போதைய உணவு நெருக்கடியின் கீழ் எமது பிரதேச மக்களுக்கான உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் அளவுக்கு உள்ளூரிலேயே எமது விளைச்சலைக் களஞ்சியப்படுத்தி வைக்க முடியாமல் போகின்றது. மூன்றாவது, எமது விவசாயிகளின் நெல்லை மிகக்குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் இடைத்தரகர்கள் மூலம் நெல்லைக் களஞ்சியப்படுத்தி பின்பு அரிசியாகக் குற்றி விற்கும் இலங்கையின் பெரும் அரிசி வியாபாரிகள் கூடிய இலாபத்தைப் பெற்றிருக்கிறார்கள். பாலினை பல்தேசிய கம்பனிகளுக்கு அனுப்பிவிட்டு செயற்கை உள்ளீடுகள் கலந்த பால்மாவினை கூடிய விலையில் வாங்குவதற்காகக் காத்துக்கொண்டு இருக்கும் அதிமேதாவித்தனமான சமூகமாக நாங்கள் மாறிவிட்டோம்.

மாவட்டத்தின் அரசாங்க அதிபர்கள் மற்றும் மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் ஒரு குறிப்பிட்டளவு மில்லியன் ரூபாய்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு முற்பணக் கடனாக வழங்கி நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்த ஊக்குவிப்பார்கள். பின்பு கூட்டுறவுச்சங்கங்கள் அந்த நெல்லை அரிசியாக மாற்றி விற்பனை செய்தபின்பு தாம் பெற்ற முற்பணக்கடனைத் தீர்க்கவேண்டும் ஆனால் நடைமுறையில் முற்பணக் கடனை சங்கங்கள் கையாளுவதில் காணப்படும் பலவிதமான குறைபாடுகள் நேர்மையற்ற செயற்பாடுகள் காரணமாக நன்மதிப்பினை இழந்துள்ளன.

இத்தகைய நிலைமையில் மாகாணக் கூட்டுறவுத் துறைக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. எமது சமூகத்தின், நிறுவனப்படுத்தப்பட்டதும் சமூகக் கூட்டாண்மை கொண்டதுமான துறையாகக் கூட்டுறவுத் துறை வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இருந்தும் அளவுக்கு மீறிய அரசியல் தலையீடுகள் காரணமாகவும் அரசாங்கத்தின் நிவாரண விநியோகப் பொறிமுறையாக மாற்றப்பட்டதனால் கிடைக்கும் குறைந்த பட்ச இலாபத்தில் தங்கிவாழும் நிறுவனங்களாகக் கூட்டுறவுச்சங்கங்கள் இன்று மாற்றப்பட்டுள்ளன. பலவிதமான ஊழல்கள் மோசடிகள் நிதித் துஸ்பிரயோகம் போன்றவற்றின் காரணமாகவும் பலகூட்டுறவுச்சங்கங்கள் சிதைந்து போயுள்ளன. பல மோசடியாளர்களின் கூடாரமாக மாற்றப்பட்டுள்ளன.

இந்நிலைமையினை மாற்றுவதற்கான தொலைநோக்கும் தலைமைத்துவ ஆற்றலும் ஆளணிப்பலமும் சட்டவலுவும் மாகாணக் கூட்டுறவுத்துறைக்கு எந்தளவிற்கு உள்ளது என்பது கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டியுள்ளது, மறுபக்கத்தில் மோசடியாளர்களினாலும் அரசியல் மாபியாக்களினாலும் வினைத்திறனற்ற பணியாட்கள் தொகுதியினாலும் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள கூட்டுறவுச்சங்கங்களை மீட்டெடுப்பதற்குச் சமூகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்தவர்கள் எந்தளவிற்கு முன்வருவார்கள் என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயங்களாக உள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளில் விரைந்து ஈடுபடுவதற்கான கலந்துரையாடல்களைச் சமூகத்திலுள்ள முதியோரும் கற்றறிந்தவர்களும் இளையோரும் முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களாகவும் கூட்டுறவுக் கொள்கையிலும் அதன் பொருண்மிய முனைப்புகளிலும் நம்பிக்கை கொண்டவர்களாகவும் தங்களை மாற்றவேண்டும்.

இவ்விடத்தில் கிராம அபிவிருத்தி சங்கங்கள் பற்றிய தவறான புரிதல் பற்றிய தெளிவு படுத்தல் அவசியமாக உள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பது ஒட்டுமொத்த கிராமத்தின் அபிவிருத்திக்கான கிராமிய மட்ட சமூக அமைப்பாகும். பல கிராமங்களில் கிராம அபிவிருத்தி சங்கங்களில் ஆண்கள் மட்டும் தான் இருக்கமுடியும் என்ற தவறான சிந்தனை காணப்படுவதுடன் பெண்களுக்கான அங்கத்துவ உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. இது முற்றாக தவறான செயற்பாடாகும். இது தொடர்பாக திணைக்கள மட்டத்திலும் கடந்த காலத்தில் புரிதல் குறைபாடு காணப்பட்டிருந்தது. தற்போது அது சீர் செய்யப்பட்டிருந்தும் உரிய முறையில் அந்த தீர்மானம் சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்படவில்லை. ஒரு ஊரின் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அங்கத்தவராக சேர்வதற்கும் பதவிநிலைப் பொறுப்புக்களை வகிப்பதற்கும் கிராமத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் தலைமை தாங்குவதற்கும் கிராமத்தின் ஆண்கள் போன்று பெண்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையும் கடமையும் உண்டு. அதனை யாரும் மறுக்கமுடியாது.

அதே சமயம் கிராமத்து பெண்கள் சார்ந்த அபிவிருத்தி முன்னுரிமைகளை சிறப்பாக அணுகி அவற்றை முன்னிலைப்படுத்தி திட்டங்களைத் தீட்டுவதற்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஏதுவாகவே மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. அவை மாதர்கள் (பெண்கள்) தொடர்பான விடயங்கள் புறந்தள்ளப்பட்டுப் போகும் அபாயத்தை இல்லாமல் செய்யும் நோக்குடனேயே உருவாக்கப்பட்டன.

(18 ஆம் பக்கம் பார்க்க...)





# மக்களுக்கு மறதியா…? மக்களை ஆட்டிப்படைக்கும் தலைவர்களுக்கு மறதியா?

அவதானி

தென்னிலங்கை அரசியலில் மாற்றம் வரப்போகிறது என்று ஊடகங்களும் கட்சித் தலைவர்களும் பேசிக்கொண்டிருக்கும் இக்காலப் பகுதியில், பெருந்தொற்றிற்கான கண்ணுக்குத் தெரியாத கிருமி பற்றியும் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம்.

கொரோனோ வைரஸ், டெல்டா, ஒமிக்ரோன் எனத் திரிபடைந்து கொண்டிருப்பதுபோன்று தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அவற்றின் உத்தியோகபூர்வ பேச்சாளர்களும் உத்தியோகப்பற்றற்ற பேச்சாளர்களும் அண்மைக் காலங்களில் அறிக்கை விடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

கண்ணுக்குத் தெரியாத கிருமி திரிபடைந்து கொண்டு வேறு வேறு பெயர்களில் உலாவத் தொடங்கியிருப்பது போன்று இந்த அரசியல் தலைவர்களும் தற்போது தமது எண்ணங்களை, கருத்துக்களை நாளுக்கு நாள் மாற்றி, திரிபுபடுத்தி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

பெருந்தொற்றின் தாக்கம்தான் இவர்களை இவ்வாறெல்லாம் பேசவைக்கின்றதோ தெரியவில்லை. ஆனால், இவர்கள் தமக்கு மறதிக்குணம் வந்துவிட்டதா, அல்லது காலங்காலமாகத் தமது தேர்தல் மேடைப்பேச்சுக்களையும் கேட்டுக்கொண்டு, ஊடகங்களில் தாம் விடுக்கும் அறிக்கைகளையும் படித்துக் கொண்டிருக்கும் மக்களுக்குத்தான் மறதிக்குணம் வந்துவிட்டதோ என நினைக்கின்றார்களா..?

பொதுஜன பெரமுனவில் அங்கம் வகித்தவரும் இந்தக் கட்சியின் அரசில் இராஜாங்க அமைச்சராக இருந்தவருமான சுசில் பிரேம் ஜயந்தவின் பதவி பறிக்கப்பட்ட செய்தியை அண்மையில் படித்திருப்போம்.

அமைச்சினால் தனக்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் மீள ஒப்படைத்துவிட்டு, ஒரு ஓட்டோவில் ஏறி வீடுபோய்ச்சேர்ந்தார் சுசில் பிரேம் ஜயந்த. ஒருவகையில் அவர் நேர்மையான அரசியல்வாதிதான். ஏனென்றால், கடந்த காலங்களில் பதவி இழந்த பின்னரும் தங்களுக்கு வழங்கப்பட்ட வீடு, குளிரூட்டப்பட்ட கார் மற்றும் வசதிகளை துறக்கவிரும்பாத அரசியல்வாதிகளை எமது சமூகம் பார்த்திருக்கிறது.

பதவி பறிக்கப்பட்டபின்னர், சுசில் பிரேம் ஜயந்த சென்ற முதலாவது பொது நிகழ்வு அமரர் பண்டாரநாயக்காவின் 123 ஆவது சிரார்த்த தின வைபவம்.

சந்திரிகா தனது தந்தை, தாய் மற்றும் தனது கணவர் விஜயகுமாரணதுங்கவிற்குப் பின்னரும் கட்டி வளர்த்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக விளங்கிய மைத்திரிபால சிறிசேன 2015 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களம் இறக்கப்பட்டு வெற்றி பெற்றார்.

> "அமைச்சினால் தனக்கு வழங்கப்பட்ட வாகனத்தையும் மீள ஒப்படைத்துவிட்டு, ஒரு ஓட்டோவில் ஏறி வீடுபோய்ச்சேர்ந்தார் சுசில் பிரேம் ஜயந்த . ஒருவகையில் அவர் நேர்மையான அரசியல்வாதிதான். ஏனென்றால், கடந்த காலங்களில் பதவி இழந்த பின்னரும் தங்களுக்கு வழங்கப்பட்ட வீடு, குளிரூட்டப்பட்ட கார் மற்றும் வசதிகளை துறக்கவிரும்பாத அரசியல்வாதிகளை எமது சமூகம் பார்த்திருக்கிறது."

இவரது வெற்றிக்குப் பக்கபலமாக ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, சந்திரிக்கா, ஃபீல்ட் மார்ஷல் சரத்ஃபொன்சேக்கா மாத்திரம் அல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் விளங்கின.

2015 ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கு சில நாட்களுக்கு முன்னர் யார் எதிரணியினரின் பொதுவேட்பாளர் என்பதும் தெரியாதிருந்த வேளையில், அப்பொழுது அந்த ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடவிருந்த மகிந்த ராஜபக்ஷவுடன் ஒரு இராப்போசன விருந்தில் முட்டை அப்பம் சாப்பிட்டுவிட்டுச் சென்றவர்தான் இந்த மைத்திரி.

2015 இல் இதே மைத்திரியின் தலைமையிலான நல்லாட்சிக்காலத்தில் (?) நடந்த சம்பவங்களை அறிவோம். அன்று ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்போம் என்று கிளர்ந்தெழுந்தவர்கள் பின்னர் என்னவாகிப்போனார்கள்…? என்பதை மக்கள் மறந்திருக்கமாட்டார்கள். அவ்வாறு மறக்க நேர்ந்தாலும் பழைய ஊடகங்களை எடுத்துப்பார்த்தால் அனைத்தும் தெரியவரும்.

இது ஒருபுறமிருக்கட்டும், சமகாலத்தில் பதவியிலிருக்கும் பொதுஜன பெரமுனவின் ராஜபக்ஷ குடும்பத்தினரின் ஆட்சியைப் பதவியில் அமர்த்துவதற்காக அவர்களுடன் இணைந்திருந்த பங்காளிகளான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, நிமால் லாண்சா முதலான அரசியல்வாதிகள், அன்று என்ன பேசினார்கள், இன்று என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மக்கள் மறந்துவிடத்தயாரில்லை.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் அங்கத்துவத்தையும் பறித்துத் தேசியப் பட்டியல் ஊடாக வந்து நிதியமைச்சராகியிருக்கும் பஸில் ராஜபக்ஷ , " அரசுடன் இருப்பவர்கள் இருக்கலாம். விலகிச்செல்ல விருப்பவர்கள் விலகிவிடலாம்" என்று பேசத்தொடங்கியுள்ளார்.

இதேவேளை விரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சி உதயமாகும் என்று மைத்திரிபால சிறிசேன ஆரூடம் கூறத்தொடங்கிவிட்டார்.

அதற்கு அவர் கூறும் விளக்கம்: 1977 பொதுத்தேர்தலில் தமது கட்சி எட்டு ஆசனங்களைப் பெற்றதாம். தற்போது 14 ஆசனங்களுடன் பாராளுமன்றில் இருக்கிறதாம். இந்த முன்னேற்றத்தை உதாரணமாக தமது கட்சி ஆதரவாளர்கள் ஏற்கவேண்டுமாம்.



இவர் இப்படியெல்லாம் பேசுவார் என்று தெரிந்துதானோ என்னவோ ராஜபக்ஷ குடும்பத்தினர் மீண்டும் பதவிக்கு வந்தபின்னர், இவருக்கு குறைந்த பட்சம் ஒரு இராஜாங்க அமைச்சர் பதவிகூட வழங்கவில்லை.

இந்த அமளிகளுக்கு மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, " இந்த அரசுக்கு முடிவு கட்டி, புதுயுகம் நோக்கி பயணிப்போம்" என்று சூளுரைக்கத் தொடங்கியுள்ளார்.

கடந்த தேர்தலில் தனது ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொள்ள முடியாமல் படுதோல்விகண்ட ரணில் விக்கிரமசிங்காவும் தனது பங்கிற்கு ஏதாவது சொல்லத் தொடங்கியுள்ளார்.

இவரும் மைத்திரியும், இணைந்து உருவாக்கிய நல்லாட்சி அரசு முறையாக இயங்கியிருந்தால், இன்று இவ்வாறெல்லாம் இவர்கள் பேசநேர்ந்திருக்குமா..?

அந்த நல்லாட்சியின் சூத்திரதாரிகளான ரணில், மைத்திரி, சஜித், சந்திரிக்கா ஆகியோர் இன்று தனித் தனியாக ஒவ்வொரு முனையிலும் நிற்கின்றனர்.

ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். அதுதான் இப்போது நடக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் நாம் சுமார் 39 வருடங்களுக்கு முன்னர் ஜே.ஆர். ஜெயவர்தனாவின் நிறைவேற்று ஜனாதிபதி பதவிக்காலத்தில் நடந்த சம்பவங்களைத் திரும்பிப் பார்க்கலாம்.

1983 கலவரத்தையடுத்து அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, தனது சார்பில் இராஜதந்திரி ஜி. பார்த்தசாரதியை இலங்கை அரசுடன் பேசுவதற்கு அனுப்பினார்.

அவர், நெருக்கடிகளை தணிப்பதற்காக ஒரு தீர்வு யோசனையை முன்வைத்தார். அதனை இணைப்பு சி (Annex C) என்பார்கள். இந்த யோசனை பாராளுமன்றில் விவாதிக்கப்படும்போது அரசு சார்பு யூ. என். பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகப் பேசலாம், வாக்களிக்கலாம் என்று கட்சியின் மத்திய குழு தீர்மானித்திருந்தது. அதற்கு ஜே.ஆரும் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

விவாதம் வந்தபோது, சிங்கள கடும்போக்காளரும் களனித் தொகுதி எம். பி. யும் விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சருமான சிறில் மத்தியூ அந்த இணைப்பையும் அரசையும் கடுமையாக விமர்சித்தார்.

மறுநாள் அவரது பதவியை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜே. ஆர். பறித்தார். துணை அமைச்சர் டென்ஸில் பெர்ணான்டோ அந்தப் பதவிக்கு நியமனமானார்.

அதுபோன்று இராஜங்க அமைச்சர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்தை இன்றைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கோத்தபாய, தினேஷ் குணவர்த்தனா மூலம் நிரப்பிவிட்டார்.

நாட்டில் எதிர்நோக்கப்படும் பாரிய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாதிருக்கும் அரசு, அடிக்கடி அமைச்சர்களை மாற்றிக்கொண்டிருக்கும். அதன் மூலம் அரசைத் தக்கவைத்துக்கொள்ளப் பார்க்கிறது.

தலையணை, தலையணையாகத்தான் இருக்கும் அதன் உறைகள்தான் மாறிக்கொண்டிருக்கும்.

இந்தப்பின்னணிகளுடன், மைத்திரி, சஜித், ரணில் ஆகியோரின் அண்மைக்கால பேச்சுக்களை அவதானிக்கலாம்.

இவற்றைக் கவனிக்கும் மக்களுக்கு மறதிக்குணம் இல்லை என்பதை இந்த அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்வார்களா..? ■

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

# சரிந்துகொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 04

# பார்வையில் மாற்றம்

அத்தியாயம் - 04

**பகுதி - 01**

தமிழ் பேசும் பிரதேசங்களின் கல்விச் சரித்திரங்கள் மீது திணிக்கப்பட்ட அரசியலும் தொடர்ந்து வந்த போரும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி விட்டிருந்ததைக் கடந்த அத்தியாயத்தில் பார்த்தோம். அந்தப் பலவருட பாதிப்பில் எங்கள் சாதனைகளோடு எங்கள் பார்வைகளும் சிந்தனைகளும் கூட மாறிப்போயிருந்தன.

போர் முடிந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டது!

யானைப் பலம் கொண்ட எங்கள் சமூகம், எங்கள் சொந்தப் பலத்தை சில நேரங்களில் மறந்து எங்கள் சொந்தக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் அதிக அக்கறை காட்டாமல் சிறிய வெற்றிகளில் மட்டும் தன்னை ஆசுவாசப்படுத்தவும் ஆரம்பித்திருந்தது.

எங்களால் நிவர்த்தி செய்யக்கூடிய அல்லது நாங்களே காரணிகளாக இருக்கக்கூடிய பல்வேறு காரணிகளை, போரின் விளைவுகள் என்ற பொதுப் போர்வைக்குள் ஒளித்துவைக்கவும் சில நேரங்களில் ஆரம்பித்து இருந்தது.

காரணிகள் பொதுவாக உள்ள பாடசாலைகளின் முடிவுகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு, சமூகப் பொருளாதாரக் காரணிகள் தாண்டி, ஒவ்வொரு பாடசாலையின் கல்வி முகாமைத்துவம், ஆசிரியத்துவம் என்ற இரண்டு விடயங்கள் எவ்வாறு எங்கள் மாணவர்களின் பெறுபேறுகளில் ஆதிக்கம் செலுத்தி உள்ளன என நிறுவியுள்ளேன்.

இந்த இடத்தில் இன்னுமொரு முக்கிய உண்மையையும் பேசவேண்டும்.

இலங்கையில் அனைத்து அரச துறையினரும் மதியபோசன இடைவேளை உள்ளிட்டு 9 மணித்தியாலங்கள் பணியாற்றவேண்டி இருக்க, ஆசிரியத்துறை சார்ந்தவர்கள் மட்டும் 6 மணித்தியாலங்கள் மட் டும் பணியாற்றுவதன் அடிப்படை என்ன? எனப் பல ஆசிரியர்களிடம்/ அதிபர்களிடம் நான் கேட்டிருக்கிறேன். இதுவரை பலருக்கு அந்த சூட்சுமம் தெரியாது.

6 மணி நேரத்துடன் பாடசாலை முடிவதற்கு இரண்டு முக்கிய காரணங்கள்.

1) நீண்ட நேரத்திற்கு மாணவர்களின் கிரகித்தல் தன்மை உச்சநிலையில் இருக்காது.

2) ஆசிரியர்கள் தங்கள் 5 மணி நேர கற்பித்தலுக்காக தினமும் மூன்று மணி நேரம் தயார்ப்படுத்தல்களில் ஈடுபட வேண்டிய தேவை இருக்கும் என்பது.

இதில் இரண்டாவது காரணி மிக முக்கியமானது. சிலர் இந்தக் கருத்துடன் முரண்படவும் கூடும். ஆனால், அதுதான் அடிப்படையான உண்மை. உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் நடைமுறைகளை ஆராய்ந்து பாருங்கள். பல நாடுகளில் பாடசாலை இரண்டு மணிக்கு முடிந்து மாணவர்கள் வீடு சென்றுவிட்டாலும் எல்லா ஆசிரியர்களும் பாடசாலையில் மாலை 5 மணிவரை தங்கி, அடுத்தநாள் பாடத்துக்கான தயார்ப்படுத்தல்கள், மாணவர்களின் கல்வி முன்னேற்ற ஆய்வறிக்கைகள், பரீட்சை முடிவுகளின் ஆய்வறிக்கைகள் உள்ளிட்ட பல வேலைகளில் தினமும் தம்மை உட்படுத்தி இருப்பர். தாங்கள் எப்படியான முறையில் கற்பித்தலை முன்னெடுக்க வேண்டும், தங்கள் வகுப்பின் ஒவ்வொரு மாணவரையும் எப்படி அணுகவேண்டும் என்ற தெளிவு அப்படியான ஆசிரியர்களுக்கு நிச்சயம் இருக்கும். ஆனால் இலங்கையில் சில ஆசிரியர்கள் மட்டுமே பாடசாலை நேரம் கடந்து பல்வேறுபட்ட தயார்ப்படுத்தல்களில் ஈடுபடுகின்றனர். பெரும்பாலானவர்கள் அப்படி நடப்பதாகத் தெரியவில்லை. சற்று அதிக நேரம் செலவிடுமாறு கேட்கப்பட்ட ஆசிரியர்கள் அதிபர்களுடன் முரண்படும் சம்பவங்களும் அதிகம்.

**இலங்கையில் அனைத்து அரச துறையினரும் மதியபோசன இடைவேளை உள்ளிட்டு 9 மணித்தியாலங்கள் பணியாற்றவேண்டி இருக்க, ஆசிரியத்துறை சார்ந்தவர்கள் மட்டும் ஏன் 6 மணித்தியாலங்கள் மட்டும் பணியாற்றுவதன் அடிப்படை என்ன? என் பல ஆசிரியர்களிடம் / அதிபர்களிடம் நான் கேட்டிருக்கிறேன். இதுவரை பலருக்கு அந்த சூட்சுமம் தெரியாது.**

யுங்கள். பல உண்மைகள் புலப்பட ஆரம்பிக்கும்.

யாழ்ப்பாணத்தின் சில முக்கிய பாடசாலைகளின் மொத்தப் பெறுபேறுகளைக் கிட்டத்தட்ட Quantitative முறை சார்ந்து ஆராய்ச்சிக்கு பாட ரீதியாக உட்படுத்தினேன். பல அதிர்ச்சியூட்டும் முடிவுகள் வெளிவந்தன.

சமூகப் பொருளாதாரக் காரணிகள் கிட்டத்தட்ட ஒன்றாக இருக்குமாறு ஒப்பீட்டை செய்தேன்.

ஒவ்வொரு பாடசாலையின் பாடரீதியான அடைவு மட்டங்கள் A, B, C, S, W உள்ளிட்ட அடைவு மட்டங்களோடு தனித்தனியே இணைத்துள்ளேன். இவை அடைவு மட்டங்களை எவ்வாறு அணுகவேண்டும் என்ற அணுகுமுறையை விபரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட உதாரணங்களே அன்றி, இங்கு தெரிவு செய்யப்பட்ட பல பாடசாலைகள் குறிப்பாக, கிராமப்புறப் பாடசாலைகள் கடந்த காலங்களில் இருந்து கணிசமாக முன்னேறி வந்துள்ளன. ஆயினும், புதிய அணுகுமுறைகள் பின்பற்றப்படும் போது மேலும் கணிசமான முன்னேற்றம் அவதானிக்கப்படலாம்.

அதாவது,

ஆனால், எங்கள் கல்விப் பாரம்பரியங்கள் பல பீனிக்ஸ் பறவைகளை உருவாக்க வல்லன என்பதே உண்மை! நாங்கள் மனது வைத்தால் பல்வேறு மாற்றங்கள் உருவாக்கலாம் என்பதே உண்மை!

அதற்கு, பரீட்சை முடிவுகளைப் பாடசாலைகளும் சமூகமும் எவ்வாறு அணுகவேண்டும்? எவ்வாறான கண்ணாடிகளை அணிந்து கொண்டு அவதானிக்க வேண்டும்? என்பதை இந்த அத்தியாயம் சில புள்ளி விபரங்களுடன் அலசும்!

2019- O/L முடிவுகளில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பிரபல பாடசாலைகள் சிலவற்றின், பொதுவாக சமூக வெளியில் வெளிப்படுத்தப்படாத மொத்த முடிவுகளை பாடரீதியாக அலசி பெறப்பட்ட பல அதிர்ச்சியூட்டும் அவதானிப்புகளைக் கோடிகாட்டி, கல்வித்துறை மற்றும் பாடசாலை முகாமைத்துவம் சார்ந்து எவ்வாறு புள்ளிவிபரங்களை அலச வேண்டும் என்பதை விபரிப்பதோடு எந்த எந்தப் பாடங்களில் உடனடி நடவடிக்கைகள் தேவை, அவை எதிர்காலத்தில் எங்கள் பிள்ளைகளின் பெறுபேறுகளை மேன்மைப்படுத்த உதவும் என்பவை பற்றி சற்று ஆழமாக அலசுகிறது இந்த அத்தியாயம் 04.

இந்தக் கட்டுரை எங்கள் கல்வித்துறை வளர்ச்சி சார்ந்த அக்கறையுடன் எழுதப்படுவதால், இதுவரை வெளிக்காட்டப்படாத புள்ளிவிபரங்களைக் கொண்டு உடைக்கப்பட்ட உண்மைகள் சற்று கசப்பானவையாக இருக்கக் கூடும் என்றாலும், வாசகர்கள் தங்கள் தனிப்பட்ட பாடசாலைகளின் சுய விருப்பு வெறுப்புகளைக் கடந்து, ஒரு வளமான கல்விச்சமூகத்தை உருவாக்குவதற்கான முயற்சி அல்லது சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒரு நேர்மறையான சமூக அழுத்தத்தைப் பிரயோகித்து மேம்பட்ட இயங்கு நிலைக்கு அவர்களைக் கொண்டுவரவேண்டும் என்ற அக்கறையுடனும் வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்துறையில் கணிசமான சரிவு அவதானிக்கப்படுவதை நான் உட்பட வேறு பல சமூக ஆர்வலர்களும் சமூகவெளியில் கருத்தாடி வந்தாலும், இன்னுமொரு சாரார், இல்லை நாங்கள் வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். போரின் வடுக்கள் உள்ளிட்ட சமூக பொருளாதாரக் காரணிகளே எங்கள் மெதுவான வளர்ச்சிக்குக் காரணம் என்று வாதிட்டு வருகின்றனர்.

இந்தக் கட்டுரையில் சமூகப் பொருளாதாரக்

சரி இந்த நிலைக்கும், 2019 பாடசாலை முடிவுகளுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கக் கூடும். அந்த விடயத்துக்கு வருகிறேன்.

2019 O/L முடிவுகளில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சரிவுகள், பேசுபொருளாகி இருந்த நிலையில் எனது முதலாவது கட்டுரையில் பொதுக்காரணிகளை ஆராய்ந்து இருந்தேன்.

ஆராய்ச்சிகளைப் பொதுவாக இரண்டு விதமாக செய்யவார்கள்

1) Qualitative Analysis

2) Quantitative Analysis.

இதில் Qualitative Analysis என்பது, சம்பந்தப்பட்ட துறையினரின் கருத்துகளைத் திரட்டி அதன் மூலம் ஒரு முடிவுக்கு வருவது.

Quantitative Analysis என்பது புள்ளிவிபரவியலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது.

எங்கள் பிரதேசங்களின் பெறுபேறுகளின் வீழ்ச்சிக்கு, இவ்வளவு காலமும் நாங்கள் எங்கள் பெறுபேறுகளை எழுந்தமானமாகப் பொதுவான Qualitative முறையில் அணுகியதும் ஒரு தவறு என்பது என் வாதம். ஏனெனில் இவ்வளவு காலமும், எங்கள் பாடசாலைகளின் முடிவுகள் எத்தனை பேர் 9A, 8A அதாவது எத்தனை பேர் 5A யை விட அதிகம் என்பதோடு முடிந்து போயிருந்தது. அதற்கு மேல் ஆராய்ச்சிகள் நடப்பதில்லை. அப்படியே சில விடயங்கள் தெரிந்திருந்தாலும் அவை சமூக வெளிக்குக் கொண்டு வரப்படுவதில்லை.

இந்த முறையில் இருந்து அவற்றை உடைக்க முயல்கிறேன். இந்தத் தடவையில் இருந்து பரீட்சை முடிவுகளை நாங்கள் பார்க்கும் பார்வையைச் சற்று மாற்றிப் பாருங்கள். உச்ச பட்ச முடிவுகளை மட்டும் பார்த்துவிட்டு கடந்துவிடும் மனநிலையை மாற்றி அடிமட்டப் பெறுபேறுகளை, பாட ரீதியாக எப்படியான அடைவு மட்டங்களைப் பெறுகிறோம் எனவும் சற்று அவதானி

1) புலமைப்பரிசில் பரீட்சையில் அதிஉச்ச புள்ளிகளைப் பெற்ற பந்தயக் குதிரைகளை மட்டும் உள்வாங்கும் யாழ் இந்துக் கல்லூரியினையும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் ஒப்பிடப்படலாம்.

அதேபோல் யாழ் வலயத்தின் யாழ் இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகியன ஒப்பிடப்படலாம்.

2) வலிகாமம் வலயத்தில் பல்வேறுபட்ட மாணவர்களைக் கொண்ட கலவன் பாடசாலைகளான மகாஜனக் கல்லூரியையும் அளவெட்டி அருணோதயா கல்லூரியும் ஒப்பிடப்படலாம்.

4) தென்மராட்சியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியுடன் றிபேட்ஜ் கல்லூரியை ஒப்பிட முனைந்தேன். ஆனால், வேறுபாடுகளை ஒப்புநோக்கும் போது றிபேட்ஜ் கல்லூரியின் மாணவர்களின் சமூகப் பொருளாதாரக் காரணிகளும் தாக்கம் செலுத்துவதை உணரமுடிகிறது.

5) வடமராட்சி வலயத்தில், ஹாட்லி கல்லூரியையும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையையும் ஒப்பிடலாம், கிளிநொச்சியில் கிளி/ மத்திய மகா வித்தியாலயத்தையும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியையும் ஒப்பிட்டு ஆராய்ந்தேன்.

இங்கு பெறப்பட்ட முடிவுகள் கல்லூரி நிர்வாகமும் ஆசிரியர்களும் முயன்றால் மாற்றியமைக்கப்படக் கூடியது என்பது என் வாதம்.

சில அவதானிப்புகள் பின்வருமாறு:

School: J/Vembady Girls High School

Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| No | Subject No | Subject | Number of Applied | Number of set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 12 | Saivanery | 224 | 223 | 203 | 91.0% | 10 | 4.5% | 9 | 4.0% | 1 | 0.4% | 0 | 0.0% | 1 | 223 | 100% |
| | 14 | Catholiciam | 24 | 24 | 23 | 95.8% | 1 | 4.2% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 24 | 100% |
| | 15 | Chritianity | 4 | 4 | 0 | 0.0% | 2 | 50.0% | 2 | 50.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 4 | 100% |
| 2 | 22 | Tamil Language & Lit | 252 | 251 | 109 | 43.4% | 106 | 42.2% | 35 | 13.9% | 1 | 0.4% | 0 | 0.0% | 1 | 251 | 100% |
| 3 | 31 | English | 252 | 251 | 148 | 59.0% | 60 | 23.9% | 34 | 13.5% | 9 | 3.6% | 0 | 0.0% | 1 | 251 | 100% |
| 4 | 32 | Mathematics | 252 | 251 | 212 | 84.5% | 19 | 7.6% | 20 | 8.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 251 | 100% |
| 5 | 33 | History | 252 | 251 | 192 | 76.5% | 23 | 9.2% | 34 | 13.5% | 2 | 0.8% | 0 | 0.0% | 1 | 251 | 100% |
| 6 | 34 | Science | 252 | 251 | 104 | 41.4% | 52 | 20.7% | 73 | 29.1% | 18 | 7.2% | 4 | 1.6% | 1 | 247 | 98% |
| 7 | 60 | Business & Acc | 228 | 226 | 141 | 62.4% | 51 | 22.6% | 26 | 11.5% | 6 | 2.7% | 2 | 0.9% | 2 | 224 | 99% |
| | 61 | Geography | 21 | 21 | 16 | 76.2% | 2 | 9.5% | 3 | 14.3% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 21 | 100% |
| | 62 | Citizenship Education & Governance | 2 | 2 | 1 | 50.0% | 1 | 50.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 2 | 100% |
| 8 | 64 | Second language (Sinhala) | 1 | 1 | 1 | 100.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 1 | 100% |
| | 42 | Music (Carnatic) | 57 | 57 | 50 | 87.7% | 4 | 7.0% | 3 | 5.3% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 57 | 100% |
| | 43 | Art | 6 | 6 | 2 | 33.3% | 4 | 66.7% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 6 | 100% |
| | 45 | Dancing (Bharatha) | 22 | 22 | 20 | 90.9% | 0 | 0.0% | 2 | 9.1% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 22 | 100% |
| | 46 | Appreciation Of English Literary texts | 57 | 55 | 21 | 38.2% | 15 | 27.3% | 18 | 32.7% | 1 | 1.8% | 0 | 0.0% | 2 | 55 | 100% |
| | 48 | Appreciation Of Tamil Literary texts | 105 | 105 | 86 | 81.9% | 16 | 15.2% | 1 | 1.0% | 2 | 1.9% | 0 | 0.0% | 0 | 105 | 100% |
| 9 | 51 | Drama & Theater (Tamil) | 5 | 5 | 5 | 100.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 5 | 100% |
| | 80 | Information & Communication Tecnology | 229 | 228 | 183 | 80.3% | 25 | 11.0% | 16 | 7.0% | 4 | 1.8% | 0 | 0.0% | 1 | 228 | 100% |
| | 86 | Health & Physical Education | 23 | 23 | 18 | 78.3% | 5 | 21.7% | 0 | | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 23 | 100% |

School: J/Jaffna Hindu College

Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt

| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | Saivanery | 242 | 242 | 180 | 74% | 42 | 17% | 16 | 7% | 4 | 2% | 0 | 0% | 0 | 242 | 100% |
| 14 | Catholiciam | 7 | 7 | 4 | 57% | 0 | 0% | 2 | 29% | 1 | 14% | 0 | 0% | 0 | 7 | 100% |
| 15 | Chritianity | 1 | 1 | 0 | 0% | 0 | 0% | 0 | 0% | 1 | 100% | 0 | 0% | 0 | 1 | 100% |
| 22 | Tamil Language & Lit | 250 | 250 | 61 | 24% | 109 | 44% | 77 | 31% | 3 | 1% | 0 | 0% | 0 | 250 | 100% |
| 31 | English | 250 | 250 | 111 | 44% | 51 | 20% | 71 | 28% | 14 | 6% | 3 | 1% | 0 | 247 | 99% |
| 32 | Mathematics | 250 | 250 | 183 | 73% | 48 | 19% | 17 | 7% | 1 | 0% | 1 | 0% | 0 | 249 | 100% |
| 33 | History | 250 | 250 | 165 | 66% | 45 | 18% | 36 | 14% | 3 | 1% | 1 | 0% | 0 | 249 | 100% |
| 34 | Science | 250 | 250 | 75 | 30% | 66 | 26% | 67 | 27% | 34 | 14% | 8 | 3% | 0 | 242 | 97% |
| 60 | Business & Acc | 211 | 211 | 97 | 46% | 67 | 32% | 30 | 14% | 14 | 7% | 3 | 1% | 0 | 208 | 99% |
| 61 | Geography | 33 | 33 | 17 | 52% | 7 | 21% | 8 | 24% | 1 | 3% | 0 | 0% | 0 | 33 | 100% |
| 62 | Citizenship Education & Governance | 6 | 6 | 3 | 50% | 0 | 0% | 3 | 50% | 0 | 0% | 0 | 0% | 0 | 6 | 100% |
| 42 | Music (Carnatic) | 37 | 37 | 32 | 86% | 2 | 5% | 3 | 8% | 0 | 0% | 0 | 0% | 0 | 37 | 100% |
| 43 | Art | 27 | 27 | 10 | 37% | 10 | 37% | 5 | 19% | 2 | 7% | 0 | 0% | 0 | 27 | 100% |
| 46 | Appreciation Of English Literary texts | 51 | 51 | 9 | 18% | 12 | 24% | 14 | 27% | 12 | 24% | 4 | 8% | 0 | 47 | 92% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 93 | 93 | 69 | 74% | 19 | 20% | 5 | 5% | 0 | 0% | 0 | 0% | 0 | 93 | 100% |
| 51 | Drama & Theater (Tamil) | 42 | 42 | 20 | 48% | 14 | 33% | 7 | 17% | 1 | 2% | 0 | 0% | 0 | 42 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 223 | 223 | 168 | 75% | 33 | 15% | 20 | 9% | 1 | 0% | 1 | 0% | 0 | 222 | 100% |
| 81 | Agriculture & Food Technology | 2 | 2 | 1 | 50% | 0 | 0% | 0 | 0% | 1 | 50% | 0 | 0% | 0 | 2 | 100% |
| 86 | Health & Physical Education | 18 | 18 | 12 | 67% | 4 | 22% | 2 | 11% | 0 | 0% | 0 | 0% | 0 | 18 | 100% |
| 89 | | 6 | 6 | 0 | 0% | 1 | 17% | 5 | 83% | | 0% | | 0% | | 6 | 100% |
| 90 | | 1 | 1 | 0 | 0% | 1 | 100% | 0 | 0% | 0 | 0% | 0 | 0% | 0 | 1 | 100% |

1)வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மற்றும் யாழ் இந்துக் கல்லூரி ஆகியன

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# பவளவிழாக்காணும் நாட்டிய நர்த்தகி

## கலாநிதி கார்த்திகா கணேசர்

முருகபூபதி

இலங்கையின் மூத்த பரத நாட்டிய நர்த்தகியும், தமிழ்க்கலை உலகப்புகழ்பெற்ற நடனக் கலைஞர் (அமரர்) பத்மபூஷன் வழுவூர் இராமையா பிள்ளையின் சிரேஷ்ட மாணவியுமான கலாநிதி கார்த்திகா கணேசர் இந்த ஆண்டு பவளவிழா காணுகிறார்.

அவுஸ்திரேலியா சிட்னியில் வதியும் இவர், இங்கும் தனது ஆற்றல்களை அடுத்த தலைமுறையினரிடம் கடத்தியவாறு நடனம் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிவருகிறார்.

அத்துடன் சிட்னியிலிருந்து தினமும் 24 மணி நேரம் ஒலிபரப்பாகும் தமிழ் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சியிலும் பகுதி நேர நிகழ்ச்சித்தயாரிப்பாளராகவும் ஒலிபரப்பாளராகவும் இயங்கிவருகிறார்.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், சிட்னி உயர்திணை இலக்கிய வட்டம் ஆகியனவற்றிலும் இணைந்திருக்கும் கார்த்திகாவின் வாழ்வும் பணிகளும் நடனக்கலையுடன் பின்னியிருக்கின்றன.

இவரது கவிஞன் கனவு நாட்டிய நாடகம் 1982 இல் பாரதி நூற்றாண்டு காலத்தில் இலங்கைத்தலைநகரில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேறிய போது, அமைச்சர்கள் செல்லையா இராசதுரை, சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர்.

இந்நாட்டிய நாடகத்திற்கு இந்தியப் பிரபல இசையமைப்பாளர் எம்.பி. ஸ்ரீநிவாசன் இசையமைத்திருந்தார். அத்துடன் அவரும் குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது இலங்கைக்கு வருகைதந்து கலந்து சிறப்பித்தார்.

இலங்கை எழுத்தாளர்களான பேராசிரியர் இந்திரபாலா, நீர்வை பொன்னையன், செ. கணேசலிங்கன் ஆகியோரின் புதல்விகளும் கார்த்திகாவின் நடனப்பள்ளி மாணவிகள் என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

கொழும்பில் கலை இலக்கிய நண்பர்கள் கழகம் என்ற அமைப்பு 1970 களில் இயங்கியது. இதில் எழுத்தாளர்கள் சாந்தன், மாவை நித்தியானந்தன், குப்பிழான் சண்முகன், யேசுராசா, இமையவன், கே. எஸ். சிவகுமாரன், அமரர் நெல்லை.க.பேரன் உட்பட சிலர் அங்கம்வகித்து அடிக்கடி கலை, இலக்கிய சந்திப்புகளை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

சில நிகழ்ச்சிகளை வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடு செய்து மூத்த எழுத்தாளர்களை அழைத்து அவர்களின் இலக்கிய அனுபவங்களைப் பேசவைத்தார்கள்.

நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், விமர்சனம் என்று அந்தக் கலந்துரையாடல்கள் அமைந்திருக்கும். மிகவும் தரமான கருத்துப் பரிமாறல்களுக்கு களம் அமைத்திருந்த அச்சந்திப்பில் ஒரு நாள் நாட்டியம் பற்றிய கலந்துரையாடல் நடந்தது.

நடன நர்த்தகி கார்த்திகா கணேசர் எழுதி தமிழ் நாடு தமிழ்ப்புத்தகாலயம் 1969 இல் வெளியிட்டிருந்த தமிழர் வளர்த்த ஆடற்கலை என்ற நூலையே அன்று பேசுபொருளாக எடுத்திருந்தார்கள். இத்தனைக்கும் நான் கார்த்திகா கணேசரை அதுவரையில் பார்த்ததும் இல்லை. அவர் பற்றி அறிந்ததும் இல்லை. அன்றைய சந்திப்பு அவர் பற்றியும் நாட்டியக்கலை பற்றியும் எனக்கு புதிய வெளிச்சம் தந்தது.

பல ஆண்டுகள் கழித்து அவுஸ்திரேலியாவில் அறிமுகமான கார்த்திகா கணேசர், அந்த நூலின் இரண்டாவது பதிப்பினையும் காலம்தோறும் நாட்டியக்கலை என்ற தமது மற்றுமொரு நூலையும் எனக்கு அனுப்பியிருந்தார்.

கார்த்திகாவின் எல்லார காமினி என்ற நாட்டிய நாடகத்தை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பார்த்த பின்னர், அவர் மீது எனக்கிருந்த வியப்பு மேலும் அதிகரித்தது.

காலங்காலமாக எல்லாளன் - துட்டகைமுனு பற்றிய சரித்திரம் எமக்குச் சொல்லப்பட்டதிலிருந்து, அந்த நாட்டிய நாடகம் முற்றிலும் வேறுபட்டிருந்தது. இதில் கெமுனுவின் தாயாக - விஹாரமா தேவியாக நடித்தவர் ஆனந்தராணி ராஜரட்ணம். இவர்தான் தற்பொழுது ஆனந்தராணி பாலேந்திரா. லண்டனில் இருக்கிறார்.

கார்த்திகா ஏனைய நடன நர்த்தகிகளிடமிருந்து வேறுபட்டிருப்பதற்கு அவரிடமிருக்கும் ஆற்றலும், தேடலும் மாத்திரம் காரணம் அல்ல. நாட்டியக்கலை தொடர்பாக அவர் நீண்டகாலம் ஆய்வுசெய்து நூல்களும் எழுதியிருக்கும் எழுத்தாளரும் ஆவார். நடன நர்த்தகியாக மாத்திரமன்றி தமது ஆய்வின் வெளிப்பாடாக நாட்டியக் கலாநிதியாகவும் மிளிர்கிறார்.

இவர் இதுவரையில் தமிழர் வளர்த்த ஆடற்கலைகள், காலம்தோறும் நாட்டியக்கலை, இந்திய நாட்டியத்தின் திராவிட மரபு, நாட்டியக்கடலில் புதிய அலைகள் முதலான நூல்களையும் வரவாக்கியிருப்பவர்.

இவற்றில் இந்திய நாட்டியத்தின் திராவிட மரபு நூல் தஞ்சை பல்கலைக்கழகத்தின் விருதினைப்பெற்றுள்ளது.

நாட்டியக்கலைக்கு கற்பனைத் திறனும் அவசியமானது என்பதை தமது முதல் குருவான இயல், இசை வாருதி ஸ்ரீ வீரமணி அய்யரிடம் கற்றிருப்பவர். பரதநாட்டியக்கலையில் பெருவிருட்சம் என்று போற்றப்படும் பத்மபூஷன் - நாட்டியகலாகேசரி வழுவூர் இராமையா பிள்ளையின் வீட்டிலேயே தங்கியிருந்து பரத நாட்டிய பயிற்சியைத் தொடர்ந்த பாக்கியசாலி.

வழுவூராரின் மாணவிகள்தான் கமலா லக்‌ஷ்மணன், பத்மா சுப்பிரமணியம், சித்திரா விஸ்வேஸ்வரன், வைஜயந்திமாலா, பத்மினி, லலிதா, ஈ.வி. சரோஜா, எல். விஜயலட்சுமி, ரமணதிலகம் (கவிஞர் வாலியின் மனைவி) உட்பட பலர். இவர்களில் சிலர் திரையுலகில் நட்சத்திரமானார்கள்.

ஆனால், கார்த்திகா ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் மாறினார். இவரது நூல்கள் பரதம் பயிலும் மாணவர்களுக்கும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும் பாட நூல்களாக விளங்குகின்றன.

கார்த்திகா, இராமாயண நாட்டிய நாடகத்தைத் தயாரித்தபொழுது, இராமன், இராவணன், அனுமான் போன்ற பாத்திரங்கள் பரதம் ஆடினால் சோபிக்காது என்று எண்ணியிருக்கிறார். தமது நண்பரும் கூத்துக் கலைஞருமான பேராசிரியர் மௌனகுருவை நாடி ஆலோசனை பெற்றுள்ளார்.

அவரும் கார்த்திகாவுக்கும் அந்தக்குழுவில் பங்கேற்ற மாணவியருக்கும் வடமோடிக் கூத்து மரபை பயிற்றுவித்து அதற்கேற்ப பாடல்களையும் எழுதிக் கொடுத்து ஊக்குவித்திருக்கிறார்.

தமிழர் வளர்த்த ஆடற்கலைகள் நூலை "நீங்களின்றி நானில்லை" - என்று குறிப்பிட்டு, தமது அருமைக்கணவர் அமரர் தியாகராஜா கணேசருக்கு சமர்ப்பித்துள்ளார்.

இந்நூலின் மூன்றாவது பதிப்பினை கொழும்பில் ஞானம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

காலம்தோறும் நாட்டியக்கலை நூலின் மூன்றாம் பதிப்பை கொழும்பில் பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியிட்டுள்ளது. இதன் இரண்டாவது பதிப்பு சென்னையில் பிரபல தமிழ்ப்புத்தகாலயத்தினால் வெளியான பொழுது, 1982 ஆம் ஆண்டு தமிழக முதல்வர் எம். ஜி. ஆரிடமிருந்து தமிழக அரசின் விருதைப் பெற்றுக்கொண்டார் கார்த்திகா கணேசர்.

வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டிருக்கும் நாட்டியக் கலையின் தோற்றம், வளர்ச்சி, அழகூட்டும் ஆடல் உத்திகள், அறிவுக்கு விருந்தாகும் அபிநயம், உட்பட நாட்டியக்கலை விருத்திக்குத் தத்துவமும் கோட்பாடும் - பார்வையாளரும் விமர்சகர்களும் முதலான அத்தியாயங்களை எளிமையாகப் பதிவு செய்து அவர் எழுதியிருக்கும் நூல்தான் காலம்தோறும் நாட்டியக்கலை. அவர் தமது ஆய்வுக்கு மனித குலத்தின் கற்காலத்திலிருந்தும் பழங்குடி மக்களிடமிருந்தும் சங்க இலக்கியங்களிலிருந்தும் சிலப்பதிகாரத்திலிருந்தும் விளக்கமளிக்கிறார்.

கார்த்திகா, அரங்கேற்றத்திற்காகவே தயாரிக்கப்படுபவர்களின் கோலங்களையும் தமது நூலில் நயமுடன் எடுத்துரைக்கிறார்.

நாட்டியக்கலையின் விருத்திக்கு என்ன தேவை..? என்பதையும் பல அங்கங்களில் விபரிக்கும்பொழுது, பார்வையாளர்களையும் விமர்சகர்களையும் அழைக்கிறார்.

"ஆக்கப்படைப்பில் ஈடுபடும் ஒவ்வொரு கலைஞனின் படைப்புக்களுக்கு ஆதார சுருதியாக முதற் சிந்தனையோட்டமாக விளங்குவது அவன் சொல்லாமல் செய்யும் விமர்சனமே. இதனால் ஒவ்வொரு கலைஞனுமே தனக்குள் விமர்சகனாக விளங்குகிறான். ஆனால், மற்றவர்களுக்கும் கலைஞருக்கும் எடுத்து விளக்குவதையே விசேட பணியாகக் கொள்பவரையே நாம் விமர்சகர் என்கிறோம்." என்ற கூற்றை மூத்த கலை, இலக்கிய விமர்சகர் கா. நா. சுப்பிரமணியம் (கா.நா.சு) சொல்லியிருப்பதன் ஊடாக எமக்கு நினைவுபடுத்துகிறார்.

பவளவிழாக்காணும் கலைஞர் நடன நர்த்தகி திருமதி காரத்திகா கணேசர், தொடர்ந்தும் தமது ஆற்றல்களை எமது சமூகத்திற்கு அடுத்த தலைமுறையினர் ஊடாக வெளிப்படுத்த வேண்டும் என வாழ்த்துகின்றோம். ■





**"கார்த்திகாவின் எல்லார காமினி என்ற நாட்டிய நாடகத்தை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பார்த்த பின்னர், அவர் மீது எனக்கிருந்த வியப்பு மேலும் அதிகரித்தது. காலம் காலமாக எல்லாளன் - துட்டகைமுனு பற்றிய சரித்திரம் எமக்கு சொல்லப்பட்டதிலிருந்து, அந்த நாட்டிய நாடகம் முற்றிலும் வேறுபட்டிருந்தது."**





வேதநாயகம் தபேந்திரன்

# வளர்ப்பும் வளைவும்...

“வளர்ந்த பிள்ளைகளுக்கு வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்வது எப்படி?”

இப்படி ஒரு தலைப்பில் புத்தகம் உள்ளதா? எனத் தேடிப் பார்த்தேன். ஒரு இடமும் அகப்படவே இல்லை.

இன்று வீட்டுக்கு வீடு வாசல்படியாக உள்ள பெரும் பிரச்சினைகளில் இது பிரதானமானது.

எனது தலைமுறைதான் பெற்றோருக்கும் வேலைகள் செய்து கொடுத்த இறுதித் தலைமுறையாகவும் பிள்ளைகளுக்கும் வேலை செய்து கொடுக்கும் முதலாவது தலைமுறையாகவும் இருக்கப் போகிறது.

இரு வருடங்களுக்கு முன்பாக ஒரு பிரபல கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவுக்குப் போயிருந்தேன்.

பரிசு பெறும் மாணவர்களை அவதானித்தேன். பல மாணவர்கள் தமது பெருத்த தேகத்துடன் கஸ்டப்பட்டு மேடையேறிப் பரிசுகள் பெற்றார்கள். அதிலும் பல பரிசுகளைப் பெற்ற ஒரு மாணவனின் பெற்றோர் பற்றிய விபரத்தை எனக்கு அருகிலிருந்த நண்பர் கூறினார்.

மாதாந்தம் பல இலட்ச ரூபா உழைக்கும் ஒரு பிரபல மானவரின் மகனாம் அந்தப் பையன். அந்த மாணவனுக்கு நாளாந்தம் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொரு ஆசிரியர்கள் வீட்டிற்கு வந்து பிரத்தியேகமாகக் கற்பிப்பார்களாம். ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாதாந்தம் 6000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றதாம்.

இயல்பாகவே திறமைசாலியான அந்த மாணவன் பிரத்தியேக வகுப்பு மூலமாக எல்லாப் பாடங்களிலும் உச்சப் புள்ளி எடுக்க முடிகின்றதாம்.

அந்த மாணவனது உடல் திணிவுச் சுட்டெண் ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்க மாட்டாது.

இது போன்ற புறொய்லர் வளர்ப்புகள் இன்று எல்லாத் திசைகளிலும் உள்ளன. இலங்கையரின் சராசரி ஆயுள் 75.5 வருடங்கள் எனப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றது. ஆனால், தொற்றா நோய்களுடன் மருந்துக் குளிசைகளைச் சுமந்து வரும் நீண்ட ஆயுள் நாட்டுக்கு நன்மை பயக்காது.

முன்னைய காலத்தில் நகரப் புறங்களிலும் கிராமப் புறங்களிலும் பிள்ளைகள் வீட்டு வேலைகள் செய்து வளர்ந்தார்கள். மின்சாரம் இருந்தால் அது பணக்கார வீடாகப் பார்க்கப்பட்டது.

அதனால் மின்சாரம் இல்லாத வீடுகளில் கைகளால் அதாவது மனித வலுக் கொண்டே தமது தேவைகளை நிறைவேற்றி முடிக்க வேண்டியிருந்தது.

வேலி அடைத்தல், வீடு மேய்தல், வளவிலுள்ள குப்பை கூளங்களைக் கிடங்கு வெட்டி மூடுதல், அரிசி மா இடித்தல், விறகு கொத்துதல், வயல் தோட்ட வேலைகள் செய்தல், சைக்கிள் ஓடுதல் என வேலைகள் ஏராளம்.

செய்யும் வேலைகள் மிகச் சிறந்த உடற் பயிற்சியை வழங்கியது. கூலி கொடுக்காமலே எல்லா வேலைகளும் முடிந்தது. ஆரோக்கியமுள்ள ஒரு சமூகம் உருவாகியது. இரத்த அழுத்தம், நீரிழிவு போன்றவற்றைப் பணக்கார நோய் என்றார்கள்.

இன்று இலங்கையில் அதிக வீடுகளுக்குமான மின்சாரம் வந்து விட்டது. கூடவே தொலைக் காட்சி, டிவிடி பிளேயர், குளிர்சாதனப் பெட்டி, ஸ்மார்ட் தொலைபேசிகள், கணனி என ஏராளமான நவீன இலத்திரனியல் சாதனங்கள் உட்புகுந்து விட்டது.

அதனால் பிள்ளைகள் மட்டுமல்ல பெரியவர்கள் கூட பொழுது போக்கு அம்சங்களில் கவனம் செலுத்துகின்றனர். வளைவு வேலைகள் செய்வதற்கு ஆட்களைப் பிடித்தல் அல்லது இயந்திரங்கள் மூலமாகச் செய்வித்தல் போன்றவை நடைபெறுகின்றன. அது மட்டுமல்ல பலருக்குச் சகல வகையான உணவுகளும் தாராளமாகக் கிடைக்கின்றது. இருந்த இடத்திலேயே எல்லாம் பெறக் கூடிய நிலைமை மனிதனைச் சோம்பேறியாக்கி விடுகின்றது.



பிள்ளைகளும் பாடசாலை, ரியூசன் என்ற வேகமான சுற்றோட்டத்தினுள் அகப்பட்டு ஓய்வு நேரம் கிடைத்தாலும் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்யாமல் கள்ளமடிக்கப் பழகி விடுகின்றனர்.

வீடுகளில் இன்னொரு அரசியல் ஓடுகின்றது. ஆண் பிள்ளைகள் அம்மாவின் செல்லங்கள். அதனால் அம்மாமார் “என்ர அருமையான ஆம்பிளைப் பிள்ளைகள்” எனச் சொல்லி வேலை செய்ய விட மாட்டார்கள்.

> **முன்னைய காலத்தில் நகரப் புறங்களிலும் கிராமப் புறங்களிலும் பிள்ளைகள் வீட்டு வேலைகள் செய்து வளர்ந்தார்கள். மின்சாரம் இருந்தால் அது பணக்கார வீடாகப் பார்க்கப் பட்டது. அதனால் மின்சாரம் இல்லாத வீடுகளில் கைகளால் அதாவது மனித வலுக் கொண்டே தமது தேவைகளை நிறைவேற்றி முடிக்க வேண்டியிருந்தது. வேலி அடைத்தல், வீடு மேய்தல், வளவிலுள்ள குப்பை கூளங்களைக் கிடங்கு வெட்டி மூடுதல், அரிசி மா இடித்தல், விறகு கொத்துதல், வயல் தோட்ட வேலைகள் செய்தல், சைக்கிள் ஓடுதல் என வேலைகள் ஏராளம்.**

அதே வேளை பெண் பிள்ளைகள் அப்பாமாரின் செல்லங்கள். இதனால் அவர்களுக்குச் செல்லம் கொடுத்துச் சோம்பேறி ஆக்குவதில் அப்பாமாரின் பங்கு உண்டு.

மிக வறிய குடும்பங்களில் குறிப்பாகக் கிராமப் புறங்களில் பிள்ளைகள் வீட்டு வேலைகளைப் பகிர்ந்து செய்யும் நிலைமை இன்றும் ஓரளவுக்குத் தொடர்கின்றது.

ஆனால், எல்லா இடங்களிலும் இப்படியல்ல. இது பொதுவான ஒரு கருத்து மட்டுமே.

உடற்பயிற்சி தரும் வேலைகளை விடுத்து உடற் பயிற்சிக் கூடங்களுக்குக் கட்டணம் செலுத்தி உடற்பயிற்சி பெறுவோரும் உள்ளனர்.

நாளாந்த வேலைகள் மூலமாக உடற்பயிற்சி பெறாத பெரிய தலைமுறையொன்று வந்து விட்டது. விளைவு பணக்கார நோய்கள் சிறுவர் முதல் பெரியோர் வரையில் தாராளமாக வந்து விட்டது.

உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வுகள் பாடசாலை மட்டத்திலிருந்தே ஊட்டப்பட வேண்டும். வெறும் ஏட்டுச்சுரைக்காயாக அல்லாமல் கறிக்கு உதவக் கூடியவையாக அவை மனிதர்களிடம் விதைக்கப்படல் வேண்டும். மனித வளர்ப்பும் குனிந்து நிமிர்ந்து வளைந்து வளர்ந்த வாழ்வுமே மனிதர்களுக்கு பெரும் ஆரோக்கியத்தைத் தரும்.

■

# இளம் சமுதாயமும் சமூக ஊடகங்களும்

சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



> **"ஆரம்பத்தில் ஒரு சிலரால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த முகப்புத்தகம், ஸ்கைப், டுவிட்டர், வைபர், யுடியுப், கிளப் ஹைஸ் போன்ற பல சமூக ஊடகங்களை இளைஞர்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் அதிகளவு பயன்படுத்து கின்றனர். வலைத்தளப் பாவனையில் இலங்கை 74 ஆவது இடத்தில் உள்ளது. அதாவது, 2017 இல் 6 மில்லியனுக்கும் அதிகமானோர் இணையத்தளங்களைப் பார்வையிடுகின்றனர். அதிலும் இலங் கையில் சமூக ஊடகங்களை 1.4 மில்லி யன் மக்கள் பார்வையிடுகின்றனர்."**

ஒரு இடத்தில் நடைபெறும் சம்பவத்தை மறு நொடியே வேறு எந்த இடத்திலிருந்தும் தெரிந்து கொள்ளக் கூடிய அளவில் உலகம் இன்று நவீனமயமாகிவிட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் மூழ்கிக்கிடக்கும் ஓர் தளமாக சமூக ஊடகங்கள் மாறிவிட்டன. நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நன்மை, தீமை என பயன்களை இந்தச் சமூக ஊடகங்கள் நமது இளம் சமுதாயத்தினருக்கு வழங்குகின்றது.

சமூக ஊடகங்களை பாடசாலை மாணவர்கள் பயன்படுத்துவது இன்று சாதாரண விடயமாகியுள்ளது. உலகளாவிய ரீதியில் மாணவர்களின் சமூக ஊடகப் பயன்பாடு வியாபித்துள்ளது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. ஏனெனில் இலங்கையில் பாடசாலை மாணவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறனர். எனினும் இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதற்கேற்ற வகையில் சரியான முறையில் வழிநடத்துதல் அவசியமாகும்.

இன்றைய அறிவியல் உலகம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் மூலம் மானிட நாகரிகத்தையும் வாழும் முறைகளையும் மாற்றியமைத்திருக்கின்றது. மக்கள் நேருக்கு நேரான உறவுகளை விடுத்து சமூக ஊடகங்களூடான வாழ்க்கைக்குள் நுழைந்துள்ளனர்.

வலைத்தளங்களுள் பாரிய ஒரு பரப்பாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றன.

இன்று சமூக ஊடகங்களை, பெரியவர்கள் மட்டுமன்றி 18 வயதிற்குக் குறைந்த பாடசாலை மாணவர்களும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

ஆரம்பத்தில் ஒரு சிலரால் மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த முகப் புத்தகம், ஸ்கைப், டுவிட்டர், வைபர், யுடியுப், கிளப்ஷைஸ் போன்ற பல சமூக ஊடகங்களை இளைஞர்கள் மட்டுமன்றி பாடசாலை மாணவர்களும் அதிகளவு பயன்படுத்துகின்றனர். வலைத்தளப் பாவனையில் இலங்கை 74 ஆவது இடத்தில் உள்ளது. அதாவது, 2017 இல் 6 மில்லியனுக்கும் அதி கமானோர் இணையத்தளங்களைப் பார்வையிடுகின்றனர். அதிலும் இலங்கையில் சமூக ஊடகங்களை 1.4 மில்லியன் மக்கள் பார்வையிடுகின்றனர்.

இத்தகைய சமூக ஊடகப் பாவனையால் தற்கால இளம் சமுதாயத்தினர் பல்வேறு தீமைகளை எதிர்நோக்குகின்றனர். சமூக ஊடகப் பயன்பாடு வெகுமதியையும், மகிழ்ச்சியின் உணர்வுகளையும் மிக எளிதாக உருவாக்க முடியும் என்பதால் அது போதைப்பொருளாக மாறும் அபாயம் உள்ளது. பதின்ம வயதினர்கள் சமூக ஊடகங்களில் பல மணி நேரத்தை வீணடித்துக் கொள்கிறார்கள். அதாவது இளைய சமூகத்தினர் அதிக நேரத்தை சமூக ஊடகங்களில் வீடியோ பார்த்தல், கருத்து பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகளுக்காக அன்றாடம் பயன்படுத்துவதால் தங்களுடைய கடமைகளை திறம்படச் செய்வதில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.


சமூக ஊடகங்கள் கவனச்சிதைவையும் ஏற்படுத்துகின்றன. அதாவது இளைஞர்கள் படித்துக் கொண்டிருக்கும்போதே ஒன்லைன் விளையாட்டு, நண்பர்களின் அரட்டை போன்றவற்றில் ஈடுபடுவதால் படிப்பில் கவனச்சிதைவு ஏற்படுகின்றது. சமூக ஊடகங்கள் இளைஞர்களின் பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் மற்றும் வீட்டு முகவரி போன்ற தனிப்பட்ட விடயங்கள் விளம்பரதாரர்களுக்குத் தரவை வழங்குகின்றன. இதனால் விளம்பரதாரர்கள் குறிப்பிட்ட நபரை இலகுவாகப் பேசி தங்கள் காரியத்தை சாதித்து கொள்கின்றார்கள். குறிப்பாக பெண்களது தொலைபேசி இலக்கத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துகின்றனர்.

இதனால் பல பெண்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கும் சமூக ஊடகங்கள் துணைபுரிகின்றன. அதாவது உடல், உள ரீதியான மற்றும் கல்வி ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றன. சமூக ஊடகங்களால் தேவையற்ற காதல் தொடர்புகள், துஷ்பிரயோகங்கள், பண்பாட்டுச் சீரழிவுகள் ஏற்படுகின்றது. சரியான வழிநடத்தலின்றிச் சமூக ஊடகங்களை மாணவர்கள் இரகசியமான முறையில் தீமையான விதத்தில் பயன்படுத்துகின்றனர். இதனால் சாதாரண தரம், உயர்தரம் பெறுபேறுகள் குறைகின்றது. இப்போது கைத்தொலைபேசிகளிலேயே இவற்றைப் பார்வையிட முடியும் என்பதால் மாணவர்களிடையே பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.மேலும் பாடசாலை நேரங்களில் மட்டுமே மாணவர்கள் படிக்கின்றனர். ஏனைய நேரங்களில் இவ் வலைத்தளங்களையே பார்வையிடுகின்றனர் எனவே கல்வியறிவில் மந்தகதி, ஞாபகமறதி, தனிமைப்படுத்தப்படுதல் போன்றவற்றிற்கு அவை வழிகோலுகின்றன.

இணையப் பாவனையால் புத்தகத் தேடல் குறைவு, கைத்தொலைபேசி விளையாட்டுகளுக்கு அடிமையாதல், நேர வீண்விரயம், சரியான நேரத்துக்கு தூக்கமின்மை, சரியான நேரத்துக்கு உணவினை உட்கொள்ளாததால் உடல் நலம் பாதிப்படைதல், அதிக நேரம் தொடர்ந்து தொலைபேசி அல்லது கணனிகளைப் பார்ப்பதால் தலைவலி, கண் பாதிக்கப்படல், ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்திருப்பதால் இடுப்புவலி, முதுகு வலி என்பவற்றோடு தூக்கமின்மை போன்ற இன்னும் பல நோய்கள் சமூக ஊடகப் பாவனையால் ஏற்படுகின்றன.

இவ்வாறான பல தீமைகள் இருந்தாலும் இணையம் மற்றும் சமூக ஊடகங்களால் பல நன்மைகளும் உள்ளன. வீட்டிலிருந்தபடியே சமூக ஊடகங்கள் வழியாகத் தங்களது அன்றாடக் கடமைகளை முடித்துவிடும் இளைய சமூகத்தினரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இதன் மூலம் இளையோரின் பணிகள் விரைவாக முடிந்து விடுவதுடன், அவர்களின் காலம், பணம், பயண அலைச்சல் சேமிக்கப்படுவதுடன், மனநிறைவும் ஏற்படுகின்றது. அதாவது வங்கிக் கணக்குகளுக்குப் பணம் பரிமாறுதல், தொலைபேசி கட்டணம் செலுத்துதல், புத்தகம் வாங்குதல் போன்ற தேவைகளை இளம் சமூகத்தினர் செய்வதற்கு சமூக ஊடகங்கள் துணைபுரிகின்றன. இதனால் அவர்களின் தொடர்பாடலைச் சிறந்த முறையில் மேற்கொண்டு தமது நேரத்தை மீதப்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்களின் பாவனையால் பல்கலைக்கழக மாணவர்களது நடத்தையில் தொடர்பாடல் திறன், மொழித்திறன், சமூக உறவுகளை இணைத்தல், சமூக இடைவெளி அதிகரித்தல், உதவிப்பரிமாற்றம், உடனுக்குடன் தகவல்களை அறிதல் போன்ற நேரான தாக்கங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான சமூக ஊடகத் தளங்களினால் இளைய சமூகத்தினரின் திறமை வெளிக்கொணரப்படுகின்றது. இணைய வழிக்கற்றல் பெருகத் தொடங்கியிருப்பதன் மூலம் மாணவர்களுக்கும்,கற்றலின்பால் ஆர்வங்கொண்ட பலருக்கும் சமூக ஊடகங்கள் ஆசானாக விளங்கத் தொடங்கியிருக்கிறது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், அமைப்புக்கள் இணையவழி கற்றலைச் சான்றிதழ்கள் மூலம் அங்கீகரிப்பதால் இதன் மூலம் வீட்டிலிருந்தே கல்வி பயில்வதற்கான வாய்ப்பை ஆர்வமுள்ள எல்லோருக்கும் வழங்குகிறது. பெரும்பான்மையான மாணவர்கள் தங்கள் நண்பர்களையும், வகுப்புத் தோழர்களையும் தொடர்பு கொள்ள சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள்



யார் வேண்டுமானாலும் எழுதலாம். எந்தப் பிரிவின் கீழும் எழுதலாம் நாமே அதனை வெளியிடலாம். நம்முடைய கருத்துகளுக்கு, பதிவுகளுக்கு உடனடியாக எதிர்வினையைப் பெறலாம் என்கின்ற பல்வேறு நல்லியல்புகளைக் கொண்டிருப்பதாலோ என்னவோ வலைப்பதிவுகளின் எண்ணிக்கையும் இயங்குபவர்களின் பங்களிப்பும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போகின்றது. சாமானியர்களும் இதில் பங்களிக்கத் தொடங்கியிருப்பதால், தமிழ்ச் சமூகத்தின் வாசிப்பு வளம் பெருகத் தொடங்கியிருப்பதை உணரலாம். அத்தோடு புதிய எழுத்தாளர்கள் பலரும் உருவாகி வருகின்றனர்.

ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது சமூக ஊடகங்கள் அல்லது சமூக வலைதளங்கள் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று நன்மை, தீமை என இரு பக்கங்களைக் கொண்டது. சமூக ஊடகங்களின் தோற்றம் சிறந்ததாக இருப்பினும் அதனுள் பல தாக்கங்கள் நேர்மறைத் தன்மையுடன் காணப்படுகின்றது. இந்தச் சமூக ஊடகங்களை ஒழுங்கான முறையில் பயன்படுத்த வேண்டும். இதில் கிடைக்கக் கூடிய நன்மைகளை பெற்றுக்கொண்டு நமது அறிவை வளப்படுத்த வேண்டும். இதனால் இளம் சமுதாயத்தினர் மாத்திரமன்றி நமது முழுச் சமூகமும் சிறந்து விளங்கும்.

■



பானு

# தமிழர்களின் வாழ்வியலில் தைப்பொங்கலின் சிறப்பு

செம்மொழியான தமிழ்மொழியைப் பேசும் தமிழர்கள் வருடத்தின் முதல் திருநாளாகப் பொங்கல் விழாவைச் சிறப்பாக கொண்டாடுகிறார்கள். “தை பிறந்தால் வழி பிறக்கும்” என்ற ஒரு எதிர்பார்ப்புடன் உலக தமிழர்களால் கொண்டாடப்படும் விழா தைப்பொங்கல் என்பது யாவரும் அறிந்த விடயம். தமிழர்களுக்குரிய பண்டிகைகள், விழாக்கள், விரதங்கள், சடங்குகள், கலாசாரங்கள் என்பன ஒவ்வொரு தனித்துவமும் வரலாற்று பெருமையும் எடுத்துக் காட்டுவனவாகவும் உலகமே விரும்பி நோக்கும் சிறப்புடையனவாகத் திகழ்கின்றது.

தைப்பொங்கல் பண்டிகை என்பதை விட அதற்கு மேலாக சூரிய வழிபாட்டுக்குரிய விசேட தினமாகவும் நன்றியை நினைவுகூறும் உழவர்களின் ஒரு பொங்கலாகவும் எழுச்சி பெறுகிறது. இந்துக்களால் நவக்கிரக நாயகர்களுள் முதன்மையானவர் சூரிய பகவான். உலகில் சூரியனின் இயக்கம் செம்மையாக அமையப் பெற்றால் மனிதகுலம் மட்டுமல்ல தாவரங்கள், விலங்குகள் என அனைத்து உயிர்களும் செயற்படக் கூடியதாக இருக்கும். உலகம் முழுவதும் உயிர்ப்புடன் செயற்பட சூரிய சக்தி அவசியம். சூரியன் இன்றி எந்த அணுவும் அசையாது. சூரியனை வழிபட்டு அவருக்கு பொங்கல் செய்யும் விழாவாக, தைப்பொங்கல் சிறப்பு பெறுகிறது.

தைமாதமதில் தைத்திருநாள் பொங்கலதில் விடியும் வேளை தமிழ் மக்கள் நீராடி அதிகாலை பொழுதினிலே பொங்கல் விழா தனிப்பெருந்திருவிழாவாகக் கோலம் பூணுகிறது. வீட்டு முற்றத்தைத் துப்புரவு செய்து பசுவின் சாணத்தினால் மெழுகி, மஞ்சள் நீர் தெளித்து, கோலமிட்டு அவ்விடத்தில் புதுப்பானை வைத்து புத்தரிசி கொண்டு சூரியன் உதிக்கும் கிழக்குத் திசையை நோக்கி பொங்கல் செய்வது பாரம்பரிய முறையாகும். பொங்கல் பொங்கி முடித்த பின்பு அதே இடத்திலேயே தலைவாழை இலையில் பொங்கலை சூரிய பகவானுக்குப் படைத்து வழிபாடு செய்யும் நிகழ்வு நன்றி கூறும் ஒரு உன்னத நிகழ்வாகவே கருதலாம்.

தமிழர்கள் பொங்கல் நிகழ்வை உற்றார், உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று சந்தோசமாகக் கழிப்பார்கள். அதை விட அன்றைய தினம் ஏழைகளுக்கு உணவு, உடை கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்துவார். பொங்கல் தினத்தன்று கடற்கரைகளிலும் வயல் வெளிகளிலும் பட்டங்கள் ஏற்றுவார். பட்டம் ஏற்றுவதை வல்வெட்டித்துறையில் ஒரு போட்டியாகவே நடத்துவார். அதில் பல ஆயிரம் மக்கள் இவ் நிகழ்வைக் கண்டு கழிப்பதைக் காணமுடியும். அதை விட முட்டி உடைத்தல், கிறிஸ் கம்பம் ஏறுதல், கயிறிழுத்தல், தென்னோலை பின்னுதல், காளை அடக்குதல் போன்ற தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை நடாத்துவார்கள். தைப்பொங்கல் என்பது சமய விழா என்று கூறுவதை விட அது தமிழரின் பண்பாட்டு விழா என்று கூறுவதே மிகையானது.

சங்க காலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பெய்யவும் நாடு செழிக்கவும் பெண்கள் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் தினத்தில் இந்த விரதத்தை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, சூரியன், விவசாயத்திற்கு உதவிய

> **“தைமாதத்தை எதிர்பார்த்தே பல நல்ல காரியங்களைத் தொடங்குவார்கள். திருமணம், புதுமனைப் பிரவேசம், புதிய கல்வி சார்ந்த நடவடிக்கைகள், வியாபார நிலையங்கள், விவசாய உற்பத்தி எனப் பல்வேறுபட்ட கருமங்களை தொடங்க தைமாதம் சிறப்பு எனவும் பெரும் வெற்றியை ஈட்டித் தரும் எனவும் தமிழ் மக்கள் பெரிதும் கருதுகிறார்கள். தமிழர்க ளால் மட்டும் வேட்டி உடுத்து புது சேலை அணிந்து கொண்டாடப்படும் ஒரு தனிப் பெரும் விழா. இப் பொங்கல் நிகழ்வு இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய ஆசிய நாடுகள், வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, அவுஸ்ரேலியா எனத் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.”**

மாடு போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக சக்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் கொண்டாடும் பொங்கல் திருநாள் கொண்டாட்டமாக மாறியது.

சங்க இலக்கியங்களில் தைப் பொங்கல் தொடர்பாகப் பாடப்பட்டுள்ளது.

“தை இத் திங்கள் தண்கயம் படியும்” என்று நற்றிணை

“தை இத் திங்கள் தண்ணிய தரினும்” என்று குறுந்தொகை

“தை இத் திங்கள் தண் கயம் போல்” என்று புறநானூறு

“தை இத் திங்கள் தண் கயம் போல” என்று ஐங்குறு நூறு

“தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ” என்று கலித் தொகை

போன்ற செய்யுட்கள் தைப்பொங்கலின் சிறப்பைப் புலப்படுத்துகின்றன.

நீர் வளம் கொண்ட இடங்களில் இரண்டு அல்லது மூன்று வேளாண்மை நடக்கும். நீர் வளம் இல்லாத பிரதேசங்களில் மழைநீர் தேக்கத்தால் ஒரு வேளாண்மை மட்டுமே நடக்கும். மார்கழி அல்லது தை மாதங்களில் அறுவடை நடக்கும் உழவுத் தொழிலே உலக மக்களின் பசியைத் தீர்க்கின்றது.

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

உழவுத் தொழிலை செய்து வாழ்பவரே உரிமையோடு வாழ்பவர். மற்றயவர் பிறரைத் தொழுது அவர் பின் சென்று வாழ்பவரே என்று அழகாகத் திருவள்ளுவர் உழவுத் தொழிலின் சிறப்பை உழவு என்றும் அதிகாரத்தினூடாகக் கூறியுள்ளார். தமிழ் மக்கள் தமது உழவுத்தொழிலுக்கு உதவிய இயற்கை சக்திகளுக்கும் தம்மோடு சேர்ந்து உழைத்த கால் நடைக்கும் அதிக விளைச்சலைத் தந்த நிலத்தையும் என்றும் மறக்காமல் நன்றி கூறும் பண்பை தைப்பொங்கல் திருநாள் மூலம் அறியலாம்.

தைமாதத்தை எதிர்பார்த்தே பல நல்ல காரியங்களைத் தொடங்குவார்கள். திருமணம், புதுமனைப் பிரவேசம், புதிய கல்வி சார்ந்த நடவடிக்கைகள், வியாபார நிலையங்கள், விவசாய உற்பத்தி எனப் பல்வேறுபட்ட கருமங்களைத் தொடங்க தைமாதம் சிறப்பு எனவும் பெரும் வெற்றியை ஈட்டித் தரும் எனவும் தமிழ் மக்கள் பெரிதும் கருதுகிறார்கள்.

தமிழர்களால் மட்டும் வேட்டி உடுத்து புது சேலை அணிந்து கொண்டாடப்படும் ஒரு தனிப் பெரும் விழா. இப் பொங்கல் நிகழ்வு இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய ஆசிய நாடுகள், வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, அவுஸ்ரேலியா எனத் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

தைப் பொங்கல் தினத்தை ஒட்டி இந்தியாவில் தமிழர்கள் வசிக்கும் மாநிலமான தமிழ்நாட்டில் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு இடம்பெறும். ஏறுதழுவுவதற்கும் ஜல்லிக்கட்டுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. முல்லை நிலத்து மக்களாகிய ஆயரிடம் மட்டுமே ஏறுதழுவுதல் இடம் பெற்றது. தற்போது ஜல்லிக்கட்டில் ஆயர்மட்டுமன்றி பலரும் பங்கேற்கிறார்கள். ஜல்லிக்கட்டு தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் நாளன்று விழா போல் கொண்டாடப்படுவது வழமை. ஸ்பானியா, போர்த்துக்கல், மெக்சிக்கோ போன்ற நாடுகளில் கூட காளைப்போர் தேசிய பொழுதுபோக்கு விளையாட்டாக இன்னும் நடைபெறுகிறது. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டாக ஜல்லிக்கட்டை அழியவிடக்கூடாது என்பது தமிழர்களின் கருத்துகளாகவும் உள்ளன. தமிழர்களின் பண்டிகைகள், வரலாறுகள், கலாசாரங்கள் எதிர்கால சந்ததியும் அதனை கொண்டாடும் வகையில் அவர்களுக்கு பொங்கல் தொடர்பான விளக்கங்கள் பகிரப்பட வேண்டியது காலத்தின் கடமை. சங்க காலத்தில் தொடங்கி பின்பு சோழர்காலத்தில் பொங்கல் பண்டிகையை “புதியீடு” என்று பெயர் இருந்தது. அதாவது ஆண்டின் முதல் அறுவடை என்று அதற்குப் பொருள். உழவர்கள் தைமாதத்தின் முதல் நாளில் அந்த ஆண்டின் முதல் அறுவடையை மேற்கொள்வது வழக்கம். இதன் பின்பு பொங்கல் பண்டிகை என மாறியது. பொங்கல் பண்டிகை மொத்தம் நான்கு நாட்கள் தமிழ்நாட்டில் கொண்டாடப்படுகின்றது. முதல் நாள் யோகிப்பண்டிகை, அடுத்தநாள் பொங்கலிடும் நாள் மூன்றாவது நாள் மாட்டுப்பொங்கல்கள் நான்காவது நாள் காணும் பொங்கல் எனக் கொண்டாடப்படுகிறது.

தமிழர் பண்பாட்டை பறை சாற்றி நிற்பது இந்த பொங்கல். இலங்கையில் பொங்கல் விழா ஈழத்தமிழர்களால் கொண்டாடப்பட்டு வந்தாலும் கூட எல்லோரும் யுத்த காலத்தின் பின் கொண்டாடுவது குறைவு. காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் மீண்டும் வரும் என பல தாய்மார்கள் ஏங்கிய வண்ணம் உள்ளனர். அதே போல் அரசியல் கைதிகள் நீண்ட வருடமாகச் சிறைகளிலும் வாடுகின்றனர். சொந்த நிலங்களில் குடியமர முடியாத பல குடும்பங்கள், யுத்தத்தில் உயிர்களை இழந்த சமூகம், அடக்கு முறைக்குள் சுதந்திரமின்றி வாழும் சமூகம் எனப் பல துயரங்களையும் வலிகளையும் தமிழ் சமூகம் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் வேதனையை மனதுக்குள் வைத்து வாழும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்ட பின்பு எவ்வாறு பொங்கலை சந்தோசமாகக் கொண்டாடுவார்கள். தமிழ்மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு இந்த நாட்டு மக்கள் போல் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்ந்தால் மட்டுமே பொங்கலை ஈழத்தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாட முடியும். இது நடைபெறுமா அல்லது இந்த விடயங்கள் கானல் நீர் போன்ற வெறும் தோற்றங்களாக மட்டுமே காட்சியளிக்குமா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும்.

உழைப்பின் பயனை நினைவு கூர்ந்து அனைவரையும் மதித்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற திருமூலரின் கருத்துக்கிணங்க தமிழ்ப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடும் காலம் ஈழத்தமிழர்களுக்கு எப்போது வரும் எனப் பொறுத்திருந்து பார்ப்போம். ■



# வெளிநாட்டுப் பணமும் உள்நாட்டு ஆடம்பரமும்

பொலிகை ஜெயா

நாம் பரதேசத்தில் (வெளிநாட்டில்) கடுமை கொண்ட வேலை, சிலவேளை இரண்டு வேலைகள், உடம்பு அங்கங்கள் விறைத்து நிற்கும் அளவு கடும் குளிர், போதிய நித்திரை, உணவு, ஓய்வு அற்று, மொழிப்பிரச்சினை, சில இடங்களின் நிற வேற்றுமை போன்றவற்றுக்கு முகம் கொடுத்து வேறு வழியில்லாது பொறுமையுடன் காசை உழைக்கிறோம்.

உழைக்கும் பணத்தில் வீட்டு வாடகை, வருட வீட்டு காப்புறுதி. இது வெளிநாடுகளில் கட்டாயம். கட்டாய உடல் நலத்திட்ட கட்டணம். சுவிஸ் போன்ற நாடுகளில் இந்தப் பணம் அவசியம் செலுத்தியே ஆக வேண்டும். தண்ணி, எம்மை குளிரிலிருந்து பாதுகாக்கும் Kaitzung என அழைக்கப்படும் வெதுப்பாக்கி, தொலைபேசி, தொலைக்காட்சிக்குரிய கட்டணம், இலங்கைபோல மாதாந்த மின்சாரக்கட்டணம், கார் இருப்பின் அதற்குரிய காப்புறுதி. அத்தோடு! சாலைப் போக்குவரத்து வரி, வருட முடிவில் வீட்டு உரிமையாளர் அல்லது கொம்பனி-குறிக்கப்பட்ட அளவை மீறிய வீட்டுப் பாவனையான தண்ணி, மின்சாரம், Kaitzung போன்ற மேலதிகப் பாவனைக்கான கூடிய கட்டணம், பிள்ளைகளின் படிப்புச் செலவு, குளிரை தாங்கவல்ல குளிர் உள்ளங்கி, மேலங்கி (Jacket), பனியில் சறுக்காத தரமான சப்பாத்து, அப்பப்போ பிறந்த நாள், சாமத்தியம், கலியாணம் போன்ற விழாக்களுக்கான பணம் (மொய்) கொடுப்பனவு, வருடத்துக்கு ஒருதடவை அல்லது இருதடவைகள் நாம் வேறு நாடுகளை பிள்ளைகளுக்கு சுற்றி காட்டும் செலவு, அப்பப்போ அல்லது நிரந்தரமாக தாய்நாட்டில் வசதி அற்றவர்களுக்கு பணம் அனுப்புவது, மிக முக்கியமாக "வருமான வரி" ஒவ்வொரு வேலையாளும் அவசியம் தனது மாத வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்த வேண்டும். இந்த வரி- சுவிஸில் "B" காட் வைத்திருப்பவர்களின் மாதாந்த சம்பளத்தில் கழிப்பார்கள். "C அல்லது Citizen" என்றால் வருடத்துக்கு ஒருமுறை செலுத்த வேண்டும். நான் வருடத்துக்கு இலங்கைப் பணத்தில் 2,125,000.00 செலுத்துகிறேன். சிலர் இன்னும் அதிகமாக செலுத்துவர். சிலர் குறைவாகவும் செலுத்துவர். உலகநாடுகளுடன் ஒப்பிட்டால் சுவிஸில் வாழ்க்கைச்செலவும் வரியும் அதிகம். வெளிநாடுகளில் வரி ஏய்ப்பு செய்ய முடியாது.

இவ்வளவையும் தாண்டியே நாம் உறவுகளுக்கு காசை அனுப்புகிறோம். வெளிநாடுகளில் மரத்தில் நாம் காசு பிடுங்குவதில்லை.

மேற்சொன்ன இவ்வளவு விடயமும் ஊரில் உள்ள உறவுகள், ஏன் கற்றவர்களுக்கே தெரியாது. நாம் தெரியப்படுத்துவதும் இல்லை. ஏனெனில் ஈன்ற தாய், அப்பா, சகோதரங்கள் எங்களை நினைத்துக் கவலை கொள்வார்கள் என்பதற்காகவே. அதிலும் எங்கள் அம்மா எங்களை நினைத்துத் தூக்கத்தைக் கெடுத்து நோய்காறி ஆகிவிடுவாள் என்ற பாசம் தான். ஆனாலும் பலர் சொல்லியுமுள்ளனர்.

எமது வெளிநாட்டு கடும் உழைப்பு பணம், நிலத்து உறவுகளின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப துணை போகிறது. வெளிநாட்டுப் பணம் இல்லாது இருந்திருப்பின் எமது தாயக உறவுகளின் வாழ்வாதாரம் அதலபாதாளத்துக்குப் போய் பலர் மாண்டிருப்பர். ஆனால் இலங்கை தமிழரிடம் முக்கியமாக இளைஞரிடம் வெளிநாட்டு மோகமும் உழைக்காது உல்லாசமாக வாழும் கலாசார நிலையும் தோற்றம் பெற்று நிற்கிறது.

கண்ணை மூடிக்கொண்டு நாம் பணம் அனுப்பவில்லை. பெற்றவர்கள், உறவுகள் பணத்தின் தேவைக்கான காரணத்தைச் சொல்லி கேட்பதால் நாம் அனுப்புகிறோம். அந்தப் பணத்தை சரியான முறையில் தாயக மக்கள் பயன்படுத்துவது அவர்களது கடமை. எம் கடின உழைப்பின் மூலம் அனுப்பப்படும் பணத்தை பெறுபவர்கள் படிப்பு, தொழில் தொடங்கல் போன்ற முன்னேற்றத்துக்கான செயல்களைச் செய்தல் அவசியம். அதே நேரம் எமது இலங்கா புரியின் பொருளாதாரத்தை வெளிநாட்டு செலாவணி மூலம் நாம் அதிகப்படுத்துகிறோம்.

"கண்ணை மூடிக்கொண்டு நாம் பணம் அனுப்பவில்லை. பெற்றவர்கள், உறவுகள் பணத்தின் தேவைக்கான காரணத்தை சொல்லிக் கேட்பதால் நாம் அனுப்புகிறோம். அந்தப் பணத்தை சரியான முறையில் தாயக மக்கள் பயன்படுத்துவது அவர்களது கடமை. எம் கடின உழைப்பின் மூலம் அனுப்பப்படும் பணத்தை பெறுபவர்கள் படிப்பு, தொழில் தொடங்கல் போன்ற முன்னேற்றத்துக்கான செயல்களைச் செய்தல் அவசியம். அதே நேரம் எமது இலங்கா புரியின் பொருளாதாரத்தை வெளிநாட்டுச் செலாவணி மூலம் நாம் அதிகப்படுத்துகிறோம்."

எமது தேவைகளையும் சுருக்கி அல்லது துறந்து, மனிசி, புருசனிடம் மாறி மாறி பேச்சு வாங்கியே காசை அனுப்பி வைக்கிறோம். இதனால் நான் அறிய, பல பரதேச (புலம்) வாழ் குடும்பங்களில் பிளவும் ஏற்பட்டுள்ளது என்பது எம் உறவுகள் அறியாத இரகசியம். ஊரிலுள்ள எமது ஐயா, அம்மா, சகோதரம் மற்றும் உறவுகளுக்கும் அவர்களது வாழ்வாதாரம், கல்வி, திருமணம், முக்கிய தேவைகளுக்குப் பணத்தை அனுப்புகிறோம். இப்படிப் பணம் அனுப்புவதில் உறவுகளற்ற தூர தேசத்தில் வாழும் எமக்கு உளரீதியான மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஆனால் நாம் அனுப்பும் பணத்தால் நிலத்தில் ஒவ்வாத, ஜீரணிக்க முடியாத பல நிகழ்வுகள், செயல்கள் நடைபெறுவது வேதனை.

"முக்கியமாக எந்தத் தொழிலையும் நான் மதிக்கிறேன்" பரதேசத்துக்கு வந்த முதல் சந்ததிகளான நாம் "கக்கூசு கழுவுதல், எச்சில் கோப்பை கழுவுதல், றோட்டுக் கூட்டுதல், கிடைத்த வேலை செய்தல், கடைகளில் பணிபுரிதல், சமையல் காரனாக பணிபுரிதல், வெள்ளைக்காரன் செய்ய மறுக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்தல் இப்படியான அடிமட்ட வேலைகளையே பெரும்பாலும் செய்கிறோம். ஆனால் சிலர் நல்ல வேலைகளிலும் இருக்கிறார்கள்."

ஆனால் நிச்சயமாக வெளிநாட்டுத் தமிழர் சந்தோசமான, தார்மீக வாழ்வு வாழவில்லை என்பது பெரும்பாலான தாயக உறவுகள் அறிந்திடாத வேதனையான உண்மை.

பல வெளிநாட்டு தமிழர் தமது மனைவி, அன்பான பிள்ளைகளை, உறவுகளை துறந்து பரதேசத்தில் வேதனையுடன் வாழுகிறார்கள் என்பதை உங்கிருப்பவர்கள் உணர்வதாக தெரியவில்லை. நான் திருமணம் முடித்த மூன்று மாதத்துள் சுவிஸ் வந்து விட்டேன். என் இளம் மனைவி தனது ஆசைகளை எவ்வளவு நாள் அடக்க முடியும். அவளும் ஒரு உணர்ச்சியுள்ள மானிடம் அல்லவா? இப்படி வெளிநாடுகளில் பலர் காசுக்காக சகல சந்தோசத்தையும் துறந்து வாழ்ந்தபடி ஊருக்குக் காசு அனுப்புகிறார்கள். இதை உணராது எம்மவர் சகல விதமான ஆடம்பரம், பெருமைக்காக நாம் அனுப்பும் பணத்தை வீணடிப்பது வேதனையல்லவா?

நிலத்தில் வேர்வை சிந்தி உழைக்காமல் கையில் வரும் பணத்தின் பெறுமதி உங்கிருப்பவர்களுக்குத் தெரியாதல்லவா? உழைப்பின் கடுமை, மகிமை புரியாதவரை உருப்பட வழியில்லை. அதன் வலி எமக்கேதான் புரியும். பொதுவாக எம் இனத்துக்காக தங்களை கொடையாக கொடுத்த எமது சகல போராளிகளின் இனத்தில் இப்படியும் ஒரு புதிய தலைமுறையா? 2500 ஆண்டுகள் பழமை பூத்த கலாசார, பண்பாடு எங்கே போகிறது? என்ற வேதனை சிந்திக்கத் தெரிந்த பலர் மனதிலும் தொட்டு நிற்கிறது.

ஓர் இளைஞன் கதிரையில் இருந்து நாரி கடுக்க வேலை செய்யினும் அல்லது வெய்யிலுக்குள் நிண்டு கடும் வேலைசெய்து அவன் பெறும் காசுக்குப் பெறுமதி அதிகம். அந்தக் காசில் அவனின் வியர்வைத் துளிகள் சிந்தியிருப்பதை அவனால் உணர முடியும். உழைப்பின் கடுமை, மகிமை புரியாமல் வளரும் எம் புதிய இளம் சமுதாயத்தின் கைகளில் காசு அளவுக்கு மீறி பிளங்குமானால் அவர்களைப் பாதாள உலகத்துக்கு இட்டுச் சென்று விடும். அதுதான் தற்போது எம் தாயகத்தில் நடக்கிறது. இது எதிர்காலத்தில் பல ஒவ்வாத பின் விளைவுகளை கொடுத்து நிற்கும். இதற்கான முழு பொறுப்பும் பெற்றவர்களையே சாரும். சமூகத்துக்கும் இதில் ஓரளவு பங்குண்டு. ஏன் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பும் நாங்களும் ஒருவகையில் பொறுப்பு ஏற்றுத்தான் வேண்டும்.

இருந்த போதும்! எமது நோக்கமும் அவசியமும் மிக சிறப்பானது அல்லவா? நாட்டு நிலைமை காரணமாக எம் உறவுகள் பட்டிணியற்றுத் தொடர்ந்து மூன்று வேளையும் உண்ணவும், ஓலைக்குடிலைக் கல் வீடாக கட்டவும், எம் பிள்ளைகள், சகோதரங்கள் நல்ல கல்வியை கற்கவும், அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுக்கவும் எமது பணம் அவசியமாகிறது. ஆனால் அப்பணத்தை அவசியமற்ற பெருமைகொண்ட ஆடம்பரத்துக்காகத் தாயகத்தில் செலவு செய்வது அவர் களது தப்பு. இந்தச் செயற்பாடு எங்களை நன்றாக வேதனைப்படுத்திச் சிந்திக்கத் தூண்டுகிறது.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய், தந்தை மகற்று உதவி அவையத்தில் முந்தியிருப்ப செயல்

தாயகத்தில் பெற்றவர்கள் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தி, நல்லது, கெட்டது சொல்லிக்கொடுத்து, பொறுப்புக்களை உணர்த்தி, ஒழுங்கு முறையாக வளர்க்க வேண்டியது அவர்களது தலையாயக் கடமை. பிள்ளைகள் கேட்டவுடன் அவசியமற்றதை வாங்கிக் கொடுப்பது புத்திசாலித்தனம் அல்ல. திருத்தமான வாழ்வைக் கற்றுக்கொடுப்பது பெற்றவர் கடமை. இந்தப் பண்பாடு, பண்டைய காலம்தொட்டு இயக்கங்கள் உயிர்ப்புடன் இருக்கும் வரை சிறப்புடன் செயற்பட்டது. பின்பு வெளிநாட்டு மோகம், பணம் என்ற மாய வலைக்குள் சிக்குண்டதும் முற்று முழுவதும் பிறழ்ந்து விட்டது.

"தாயகத்தில் எந்த ஒரு வேலைக்கும் செல்லாது, எதுவித வருமானமும் அற்ற ஓர் இளைஞன்- விதம் விதமான உடுப்பு, விலைகூடிய மோட்டார் சைக்கிள், ஒரு இலட்சம் பெறுமதி வாய்ந்த தொலைபேசி பாவிக்கிறான். அவனைச் சுற்றி ஓர் இளையோர் கூட்டம் எப்பவும் இருக்கிறது. இதைவிடப் பொறுப்பற்ற குடி, கும்மாளம் வேறு. வெளிநாட்டுப் பணம் எம் வரும்கால சந்ததிகளைச் சீரழித்து விட்டது."

நிலத்துப் பெண்கள் நாம் அனுப்பும் பணத்தை வங்கியில் எடுப்பதற்கு பஸ்ஸில் போகாது அதிக காசு கொடுத்து ஓட்டோவில் போகிறார்கள், மீன் வாங்க சந்தைக்கு சென்றால் சொன்ன விலைக்கு மேலால் அன்பளிப்பு வேறு கொடுக்கிறார்கள். அதே நேரம் பிள்ளைகளின் பசிக்கு புசிக்க மீன் வாங்க வந்த ஏழைத் தொழிலாளி போதிய பணம் இல்லாது வெறும்கையுடன், கவலையுடன் வீடு திரும்புகிறான். வெளிக்கிடும் போது! அம்மனுக்கு சாத்தியது போல ஏன் நகை அணிகிறீர்கள்? அடுத்த வீட்டுக்காரனை விடத் தாமே மேலான டாம்பீக வாழ்வு வாழ்வதாக காட்டிக்கொள்ள ஒரு மாயையான வாழ்வுக்காக அதிக பணத்தை விரையம் செய்கிறார்கள். ஊர் சுற்றும் மகன், கேட்ட பணத்தை எடுத்து வீசுகிறார்கள். இவையனைத்தும் நான் பல முறை இராவண தேசத்துக்கு வந்தவேளை நேரடியாக கண்ட காட்சிகள். கஸ்டப்பட்டு காசு அனுப்பும் எமக்கு வலிக்கிறது.

வெளிநாட்டில் பொறுப்புக்களை மனதில் சுமந்து வாழும் நாம் கிட்ட இடத்துக்கு சைக்கிளில் போகிறோம், தூர இடமாகில் பஸ், புகைவண்டி, விலை குறைந்த காரில் போகிறோம். நாட்டில் பக்கத்து கோவிலில் தண்ணி எடுக்க மோட்டார் சைக்கிளில் போவதை கண்டேன். எப்பவோ வாங்கிய போனை மாத்தாது அதையே தொடர்ந்து பாவிக்கிறோம். ஊருக்குக் காசு அனுப்பாத வேளையில் தம்பி ஏன் காசு அனுப்பவில்லையென்ற கேள்வியுடன் தொலைபேசி பறந்து வருகிறது. எங்கே போகிறது எம் தமிழச் சமுதாயம்?


ஒரு காலத்தில் யாழ்ப்பாண சமூகத்தின் கல்வியாற்றல், பொருளாதாரம், சேமிப்புக் கட்டு கோப்பு வாழ்க்கை, பண்பாடு எல்லாம் போரின் பின் அடியோடு மாறி விட்டது. முக்கியமாக இளைஞர்கள் சோம்பேறியாகி சீரழிந்து வருவதற்கு அடிப்படையான முழுக்காரணியும் பெற்றவர்களும், உறவுகளுமே. வெளிநாட்டுப் பணத்தை ஒழுங்குபடுத்தி, தேவைகருதி, கட்டுப்பாடாகத் தூரநோக்குச் சிந்தனையுடன் பயன்படுத்தப்படவில்லை என்பதே எனது ஆணித்தரமான கருத்து. ■

புலோலியூர் வேல்நந்தன்

# வேலணையூர் சுரேசின் மானிடப் பேரிடர்

## கொரோனா காலப் பதிவுகள் குறித்த ஓர் பார்வை

## புதுப்புனல் - 26




ஈழத்துக் கவி வானில் இன்றும் தன் செழுமை மிக்க சந்த ஓசைச் சிறப்பு மிக்க மரபுக் கவிதைகளால், பக்திப் பாடல்களால், கவியரங்கக் கவிதைகளால் கவனிப்புக்குரிய ஒருவராய் யாழ் இந்துக் கல்லூரி தந்த கவி மரபில் வந்தவரே வேலணையூர் சுரேஸ். அவருடைய கவிதைக்குப் பல முகங்கள் எல்லாவற்றின் அடிநாதமாய் இருப்பது விடுதலை என்ற உணர்வே. இதனால்தான் களத்தீயில் தொடங்கிய அவரது கவிதைப் பயணம் இன்றும் கனன்று கொண்டிருக்கிறது. வேலணை மண்ணுக்கும் ஈழத் தமிழ்கவிதை மரபுக்கும் இடையே கூட நீண்ட பாரம் பரிய நவீன கவிதை வரலாறு உண்டு. அந்த வகையில் அம் மண்ணில் இருந்து முழிந்த, வித்துவான் வேந்தனர், தில்லைச் சிவன், வேலணை வேணியன், வேலணையூர் தாஸ், வேலணையூர் ரஜிந்தன் என்ற வரிசையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டிய ஒருவராகவும் கவிஞர் வேலணையூர் சுரேஸ் விளங்குகின்றார். இந்த வகையில் தந்த அண்மையில்சிறுவர் பாடல்கள் உட்படப் பல்வேறு வகையான கவிதைகளைக் குறும்புப்பா 100 என்ற தொகுதியையும் தந்த அவரது கவிதை நூலாகவே இந்நூல் விளங்குகிறது இதனை தீம்புனலின் புதுப்புனலில் அறிமுகம் செய்வதில் அகமகிழ்கிறேன்.

புதிய நதியா வெளியீடாக மலர்ந்துள்ள இந்நூலின் பெரும்பாலான கவிதைகள் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தின் மானிடப் பேரிடரிக் குறிப்பாக எமது நாட்டில் நாம் பட்ட இடரின் பல்வேறுபட்ட முகங்களை அதன் உடன் நிகழ்கால விளைவுகளைப் பேசுவதாக அமைந்துள்ளது. உதயன் சஞ்சீவியில் தொடராக வெளிவந்த இக்கவிதைகள் இன்று தொகுப்பாக வெளிவருகின்றது. எவகிறீன் பதிப்பகத்தின் அழகிய அச்சமைப்பில் வெளிவந்துள்ள இந்நூலின் அட்டைப்படத்தை கொரோனாவில் இருந்து மீண் டெழும் நம்பிக்கையை சித்தரிப்பதாய் ஓவியர் தாஸ் அவர்கள் வரைந்துள்ளார். இந்நூல் கொரோனாவால் களவு கொள்ளப்பட்ட ஈழத்தின் முக்கியமான கலைஞர்களான காவலூர் செல்வம், சதாவேல்மாறன், வர்ணராமேஸ்வரன் ஆகியோருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கான பொருத்த மான அணிந்துரையை அண்மையில் தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள் என்ற நூலைத் தந்த கலாநிதி பண்டிதர். திருநாவுக்கரசு வழங்கியுள்ளார்.பின்னுரைக் குறிப்பை மரபுக் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு மிக்க யாழ் பலா தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா வழங்கியுள்ளார்.

இக்கவிதைத் தொகுதிக்குள் நுழைந்தால் “அஞ்சாதவரும் அஞ்சும் கொரோனா…” என ஈரடியில் தொடங்கி முதல் 100 கவிதைகளில் கொரோனா அவலங்களையும் ஏனைய கவிதைகளில் அங்கர் தட்டுப்பாடு, காஸ் வெடித்தல், நல்லூர் முருகன் மீதானவை. என நீளும் இவரது தொகுப்பில் நகைச்சுவை உணர்வுடனும் அங்கதச்சுவை மேலோங்க எதுகை மோனை ஓசைச்சிறப்புடன் படைத்துள்ள தன்மையானது சிறப்புக்குரியதாய் அமைகிறது.

தனிமையைக் கடைப்பிடித்து கவனமாய்
இருந்தவருள்
கவிதையைக் கைபிடித்து தவனமாய்
இருந்தவன்யான்
நாவினால் சொல்வதற்கும் நடுங்கிடவே; என .பே
னாவினால் எழுதுகிறேன்; வலியதிகம் என்பதால்!

என ஈற்றடிகளில் அஞ்சாவரும் அஞ்சும் கொரோனா என இதன் அவலத்தைப் பாடத்தொடங்கும் கவிஞர். பின்னர்

“உள்ள நோய் போதா தென்றோ; உலகை
உலுப்புது கொரோனா வந்து? இந்த
கொள்ளை நோய் பல்கிப் பெருகி; நெஞ்சும்
கனக்குதே துயரில் வெந்து! ஐயோ!
பல்லிதேள் பாம்பை உண்ணும் சீனாப்
பக்கமாய் வந்த “கொரோனா!” இன்று
உள்ளநா டெல்லாம் இந்நோய்த் தொற்று!
ஊமையாய்ப் போனோம் உணர்திறனற்று.

என எதுகை மோனை அந்த ஓசையோடு துயர் தரு நோயின் தோற்றத்தை பேசுகிறார். பின்னர் எகிறும் நோயும் எரியும் வயிறும் என்பதில் இந் நோயின் வீரியத்தை பேசுகையில்

“ சாவலை வீசிய கொரோனா கூடி
சாலைகள் தோறும் உடல்கள் மூடி
மாமலை ஒத்த மனிதர் செத்தும்
மனிதரை மனிதர் தொடரவும் பீதி!
ஆவலைக்கூட நிறைவேற் றாமல்
அவரவர் பாட்டில் அவரவர் செல்ல
காவோலை எரிவது போலவே எரியக்
கடவுளே மனிதருக்கு ஏனிவ் விதியோ?”

எனப் பாடுகிறார். பின்னர்

“மூடுவாயை மூக்கை என்றால்
மூடா தலைந்தால் என்ன ஆகும்
நாடியிற் கவசம் நழுவ அணிந்தால்
நாடியே நோயும் வராமலா போகும்…”

என்றும்.

அரும்பணிகள் ஆற்றி நாளும்
அயராதுழைத்த கையும் காலும்
‘இரும்’ என்றால் இருக்குமாப்பா
இறைவா இந்த நிலையே னப்பா?

என்றும். விழிப்புணர்வையும் கவலையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

மற்றொரு கவிதையில்

“தொண்டை யுள்ளே நுழைந்த கிருமி
தொடைகால் நடுங்கி இருமி இருமி
அண்டை நாடுகள் இழந்தவர் அதிகம்…” என்கிறார்.

மருத்துவர் பணிக்கு கோடி நன்றி என்பதில்

“அத்தனை தெய்வமும் கைவிட்ட போதும்
உற்ற தெய்வமாய் உடனிருப் பவர்கள்
எத்தனை நேர்த்தி வைத்தாலும் எமக்கு
என்றும் இவர் போல் யார் கிடைப்பார்கள்”

என்கிறார்

“யாருக்கு உண்டு யாருக் கில்லை
யாரும் அறியார் இந்தத் தொல்லை
நேருக்கு நேராய் நின்றால் போச்சு
நின்றவர் மூச்சுப் பட்டால் போச்சு” என்கிறார்.

இதன் பின் கொரோனா நடத்தும் கொரில்லா யுத்தம் என்ற கவிதையில்

“மறைந்து இருந்து தாக்கும் நோய்க்கு
மறைவில் இருத்தல் தானே காப்பு
விரைந்து கொல்லும் கொள்ளை நோய்க்கு
விரைவில் வைக்க வேண்டும் ஆப்பு .
குறைத்து மதித்தால் சாகும் வரையில்
கைகளைக் கழுவ வேண்டும் சோப்பு” என்கிறார்.

இதனைப்போல விரைந்து பெறுவீர் தடுப்பு மருந்து, கல்யாணம் கச்சேரி கனநாளாய் ஒப்பேறி, கொரோனா கற்றுத் தரும் வாழ்க்கைப்பாடம் போன்ற கவிதைகளிலும் கொரோனா காலப் பதிவுகள் பல இடம்பெற்றுள்ளன. கொரோனாவால் வந்த பொருட்தட்டுப்பாட்டுச் சூழலைச் சொல்லுகையில்

“பருப்பு சீனி நெருப்பு விலையில்
பதுக்கிய பொருட்கள் நினைத்த விலையில்
கறுப்புச் சந்தையில் களவாய் மறைவாய்
கஞ்சா போல மஞ்சளும் வருது” என்கிறார்.

பின்னர்

“ஊரடங்கு என்ன உலாவரும் சடங்கா
ஊறுள நோய் பரவுது பலநூறு மடங்கா!

என்கிறார்.

இவை யாவற்றிலும் முன்னும் பின்னுமாய் இவர் கையாளுகின்ற ஓசைச் சொற்களும் அதனைச் சொல்லும் முறையும் எம்மை சலிப்பூட்டாமல் இக் கவிதைகளை ரசிக்க வைக்கின்றன, சிந்திக்கவும் வைக்கின்றன. கொரோனாவினால் கல்வியில் ஏற்பட்ட மாற்றத்தை பற்றிக் கூறும்போது

“பள்ளிக்கூடம் ஆசிரியர் பெயரை
பக்கம் இருக்கும் மாணவர் பெயரை
சொல்லிச் சொல்லிக் கற்றதை மறந்து
‘சோதனை’ என்று துடித்ததை மறந்து
பள்ளிச் சட்டை புத்தகப் பையை
பார்த்துத் தூக்கிப் பலநாள் கடந்து
வெள்ளியா சனியா என்பதும் மறந்து
விடிந்து பொழுது படுகிறது விரைந்து” என்கிறார்.

பின்னர்

“ஒற்றைக் கிருமியும் இல்லாது ஒழிக
ஓட்டு மொத்த உலகமும் விடிக” எனப் பிரார்த்திக்கிறார்

பால்மாத் தட்டுப்பாடு பற்றிக் குறிப்பிடுகையில் .

ஆடை நீக்கிய பால்மா
ஆளை நீக்கிப் போனது மெய்யோ.

தள்ளாடும் நாடும் சனம்படும் பாடும் என்பதில்

“அடுப்பை மூட்ட அடுப்பும் வெடிக்குது
அனல்வாயு அடுப்பு எமனாய் இருக்குது…”

என்கிறார். தள்ளிப்போம் வெண்ணிலா என்ற கவிதையில்

“உள்ளீர்ப்பும் எங்களுக்கு
உத்தரிப்பும் எங்களுக்கு
தள்ளிப்போம் வெண்ணிலாவே
தாங்காதெம் மனமிப்போ!” என்கிறார்.

தேரேறும் நாளில் விழியெல்லாம் நீரில் உனக்குமா முருகா உள்ளீர்ப்பு ஆகிய கவிதைகளில் கொரோனாவால் நல்லூர் முருகன் திருவிழாவுக்கு நடந்த சோதனைகளை எடுத்துக் காட்டியுள்ளார். இறுதியாக வருமாண்டிலாவது வாழும் வரம் வேண்டும் என்ற நம்பிக்கையுடன் கவிதைத் தொகுப்பை முடிக்கிறார். இவரது பாடலாக்க கவியாக்கப் பயணம் இன்னும் தொடர வாழ்த்தி காலம் பொருத்தம் கருதிய இத் தொகுப்பை அறிமுகம் செய்வதில் தீம்புனலின் புதுப்புனல் மகிழ்வெய்கிறது.

■

# ஊடகத்துறையில் பெண்களின்நிலை மாற்றமடைய வேண்டும்

சமூகத்தில் நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் ஊடகங்களுடன் பிணைக்கப் பட்டே இருக்கின்றோம். முன்னைய காலங்களுடன் ஒப்பிடுகையில் பெண்கள் ஊடக வாயிலாக சமூகத்தைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் மென்மேலும் அதிகரித்துள்ளது. அனைத்து துறைகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தும் பெண்கள், ஆண்மையக் கட்டமைப்புள்ள சமுதாயத்தில் தமக்கான இடத்தைத் தக்கவைப்பதற்குச் சற்று கடினமாக உழைக்க வேண்டியிருக்கின்றது.

பெண்கள் தமது துறைசார்ந்த ஆளுமையை வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது. ஊடகத் துறையில் பெண்களுடைய பங்குபற்றுதல்கள் ஆண்களை விட மிகவும் குறைவாகவே உள்ளது. பெண்கள் ஊடகத்துறையில் மட்டும் கால்பதிப்பது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதற்கு எங்களுடைய சமூகக் கண்ணோட்டங்களும் எதிர்மறை விமர்சனங்களும் முக்கிய காரணமாக இருக்கின்றது. எவ்வாறாயினும் இன்றைய ஊடகங்களின் பெரும்பாலான வெற்றியில் பெண்கள் பாரிய பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர்.

கடந்த 25 ஆண்டுகளில் ஊடகங்களில் பெண்களின் வகிபங்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. ஆயினும், ஒப்பீட்டளவில் ஆண்களை விட பெண்களுடைய பங்களிப்புக் குறைவாகவே உள்ளது என்பதை ஆய்வுகள் அடையாளப்படுத்துகின்றன. இலங்கையின் ஊடகத்துறையில் பெண்களின் பங்களிப்புகள் திருப்திகரமாக அமையவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கையில் ஆங்கில, சிங்கள ஊடகங்களில் அதிக பெண்கள் ஊடகவியலாளர்களாகப் பணியாற்றுகின்ற அதேசமயம் தமிழ், முஸ்லிம் பெண்கள் பங்குபற்றுவது குறைவு. இது அதிகரிக்கப்பட வேண்டும். தலைமைத்துவம் எனும்போது ஆண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும் சமூகம் பெண் அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

அதிகாரம் மிக்க பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் பெண்களைத் தவறானவளாகவும் அடாவடி மனப்பாங்கு மிக்கவளாகவும் அணுகின்ற நிலை இன்னும் மாறவில்லை. பெண் என்பவள் மென்மையானவள், கீழ்படிந்து நடக்கவேண்டியவள் என்றே இந்தச் சமூக அணுகுதல்கள் அமைகின்றது.

சாதனை படைக்க பெண்கள் காலடி எடுத்து வைக்கும் போது பிரச்சினைகளும் அவர்களோடு காலடி எடுத்துவைக்கின்றது.



இந்நிலையில், வேறு துறைசார் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட மேலதிகப் பிரச்சினைகளை ஊடகத் துறையிலுள்ள பெண்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பல பெண்கள் ஒரு வேலையைப் பெற்றுக் கொண் டதும் நீண்ட காலத்திற்கு அதிலேயே தங்கிவிடுவதுண்டு. ஒரு இடத்தைவிட்டு அடுத்த இடத்திற்கு நகர்ந்து தமது அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கான தேடலும் அதனை நோக்கிய நகர்தலும் அவர்களிடம் குறைவாக இருக்கின்றது. குடும்பச் சுமை, நேர எல்லை போன்றவை இதற்கான காரணங்களாக இருக்கலாம். இவையே ஊடகத்துறையிலுள்ள பெண்களும் பொதுவாக எதிர்கொள்கின்ற சவால்கள்.

பெரும்பாலான ஊடகங்கள் பெண்களுடன் கருத்துப்பகிர்வை மேற்கொள்வதில்லை. சமாதானம் பற்றியோ அரசியல் பிரச்சினைகள் பற்றியோ பெண்களிடம் கருத்துப் பகிர்வுகளை மேற்கொள்வது குறைவாகவே உள்ளது. ஆண்கள் எல்லா நேரத்திலும் பணியாற்றத் தயாராக இருக்கின்ற போது பெண்கள் ஒரு குறிப்பிட்ட நேரம் மாத்திரமே தம்முடைய பணிகளை முன்னெடுக்க முடிகின்றது. ஆண்கள் பெண்களைப் போன்று தொடர்பாடலுக்கோ கலந்துரையாடலுக்கோ தயங்குவதில்லை.

இந்நிலையில் தலைமைத்துவப் பொறுப்புக்கள் பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. பெண்கள் தொடர்பாக வரக்கூடிய நிகழ்ச்சிகள், செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற வற்றில் பெண்ணின் குடும்ப அலகு பற்றி மட்டுமே அழுத்தம் கொடுத்துப் பேசப்படுகின்றது. அழகுக்கலை, சமயற்கலை, கலை, கலாசாரம் போன்றவை சம்பந்தமான உள்ளடக்கங்களைத்தான் வெகுஜன ஊடகங்களில் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்குகிறார்கள்.

அரசியல் மற்றும் பொருளாதாரம் சம்பந்தமான நிகழ்ச்சிகளிலோ, ஆய்வுகளிலோ, கட்டுரைகள், விமர்சனங்கள், நேர்காணல்கள் போன்ற கனதியான விடயங்களில் பெண்களின் பங்கு கேள்விக்குறியாகவே இருக்கிறது. நேர்காணல்களை செய்பவர்களாகவும் நேர்காணப்படுபவர்களாகவும் பெரும்பாலும் ஆண்களே இருக்கிறார்கள்.

ஊடக நிறுவனங்களில் பாலியல் ரீதியான சுரண்டல்கள், வன்முறைகள் போன்றவற்றை பெண்கள் எதிர்கொள்ள நேரிடுகிறது. பெரும்பாலான பெண்கள் தமது தொழில் பாதுகாப்புக் கருதித் தமக்கெதிரான வன்முறைகளையும் நிராகரிப்புக்களையும் சகித்துக்கொண்டு வாழப் பழகியுள்ளனர்.

ஊடகங்கள் சமூகத்தின் விம்பங்கள். ஊடக நிறுவனங்களிலேயே பால்நிலைச் சமத்துவம் இல்லாத போது அவர்கள் எவ்வாறு பால்நிலைச் சமத்துவம் பற்றிய புரிதலை சமூகத்திற்கு வழங்க முடியும். பால்நிலைச் சமத்துவம் மற்றும் பெண் கல்வி என்பன அடிப்படை மனித உரிமையாகும். ஊடகத்தொழில் துறையில் மாத்திரமல்லாது ஊடகக் கல்வியிலும் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் சவாலைப் பெண்கள் துணிச்சலோடு எதிர்கொள்ள வேண்டும்.

பெண்கள் தமது துறைசார்ந்த ஆளுமையை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

செய்தி அறைகளில் சமத்துவம் நிலவவேண்டும். காலங்காலமாக ஊடகங்களில் நடைபெறும் ஒடுக்கு முறைகளைச் சகித்துக் கொண்டால் மாற்றம் ஏற்படவாய்ப்பில்லை.

எனவே, செய்தி அறைகளில், ஊடக நிறுவனங்களில் பெண்கள் தமது உரிமைகள் நிராகரிப்புக்கு எதிராகத் தாமே குரல்கொடுக்க வேண்டும். தமது பிரச்சினைகளுக்காகப் பேசவேண்டும். ஊடகத்துறையில் ஆணாதிக்கத்தை மீறிச் சில பெண்களால் மாத்திரமே சாதிக்க முடிந்துள்ளது. ஆணாதிக்கவாத சமுதாயத்தால் நிராகரிக்க முடியாதவர்களாகப் பெண்கள் மாற வேண்டும்.

இலங்கை ஊடகங்கள் ஊடகத்துறையில் பன்மைத்துவத்தைப் பேணவேண்டும்.

> பெரும்பாலான ஊடகங்கள் பெண்களுடன் கருத்துப்பகிர்வை மேற்கொள்வதில்லை. சமாதானம் பற்றியோ அரசியல் பிரச்சினைகள் பற்றியோ பெண்களிடம் கருத்துப் பகிர்வுகளை மேற்கொள்வது குறைவாகவே உள்ளது. ஆண்கள் எல்லா நேரத்திலும் பணியாற்றத் தயாராக இருக்கின்ற போது பெண்கள் ஒரு குறிப்பிட்ட நேரம் மாத்திரமே தம்முடைய பணிகளை முன்னெடுக்க முடிகின்றது. ஆண்கள் பெண்களைப் போன்று தொடர்பாடலுக்கோ கலந்துரையாடலுக்கோ தயங்குவதில்லை.



செ.எழிலன்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஊடகத்துறையில் தமது கால்தடங்களை பதித்துள்ள பெண்கள் மிகச் சிறந்த முறையில் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர் அதே வேளை அதே திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய ஏராளமான பெண்கள் திரை மறைவில் இருக்கின்றனர்.

இலத்திரனியல் ஊடகத்துறையில் பெண்களின் அடைவுகள் குறைந்த மட்டத்தில் காணப் படுவதில் ஆணாதிக்க கருத்தியல்கள், குடும்பம், மற்றும் பெண் தொடர்பான சமூகப் பார்வைகள், கலாசார எண்ணக் கருக்கள் ஆகிய காரணங்கள் பிரதானமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே, பெண்கள் ஊடகத்துறையில் அடைவுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடைமுறைச் சாத்தியக் கொள்கைகளை உருவாக்கவேண்டும் என்பது புலப்பட்டு நிற்கின்றது.

சர்வதேச ரீதியில் ஊடகத்துறையில் பெண்கள் எப்படி தங்களது பங்களிப்பைச் செய்கின்றார்கள் என்று 2014 இல் சர்வதேச பெண்கள் ஊடக அமைப்பு (IWMF), ஊடகத்தில் பணிபுரியும் 1000 பெண்களிடம் கருத்து கேட்ட போது, அதில் 350 இற்கு மேற்பட்ட ஊடகப் பெண்கள், "நாங்கள் எமது ஊடகப் பயணத்தில் நிறைய சாவல்களைச் சந்தித்திருக்கிறோம்" என்பதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

பெண்ணுரிமை தொடர்பான சிறந்த கருத்துக்கள் பெண்களைச் சென்றடையச் செய்வதன் மூலம் ஊடகத்துறையிலுள்ள பெண்கள் ஏனைய பெண்களுக்கு உதவ முடியும். ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலம் நாம் அவர்களை விழிப்பூட்டலாம். ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சிக்கின்றபோது அந்தக் கருத்து சென்றடைபவர்கள் அதனைச் சிறப்பாக ஏற்றுக்கொண்டு செயற்படுத்த முன்வர வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால் இந்த முயற்சி மட்டுமன்றி பொதுவாக எந்தவொரு முயற்சியுமே தோல்வியடையும். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்தெற்கு" என்ற விதண்டாவாதங்களை விட்டெறிந்து வீறுநடை போட்டு வரும் பெண்களுக்கு எத்தகைய சவால்களும் சாதாரணமானவையே. பாரதி கண்ட புதுமைப் பெண்கள் பாரினில் வலம் வருகையில் முட்டுக்கட்டைகளும் தடைக்கற்களும் தகர்த்தெறியப்படும்.

# கல்யாணக்கனவு

யாழ் சத்யா

**“எப்படி மறந்தாள் இதை? முரளி பற்றி அறியும் சஞ்சயன் என்ன சொல்வான்? இவன் என்ன புதுசாகச் சொல்லி விடப் போகிறான்? மற்றவர்கள் போலதானே இவனும் இருப்பான். தலவாக்கலை வந்ததிலிருந்து தனிமையின் கொடுமையையும் வேண்டாத சிந்தனைகளின் வலியையும் மட்டுமே இவள் அனுபவித்தாளே தவிர, வேறு மனக் கசப்புகளோ, வேண்டாத பேச்சுக்களோ அற்று மிகவும் நிம்மதியாகவே இருந்தாள் எனலாம்.”**

‘வைஷூ சொன்னது போல நம்ம மூஞ்சி ரொம்பக் கண்றாவியாகத்தான் இருக்கு என்ன’ என்று எண்ணமிட்டவன் கோயிலை விட்டுப் புறப்பட்டுச் சென்று நின்ற இடம் ஒரு ஆண்களுக்கான சிகை அலங்கரிப்பு நிலையம்.

தலை முடியையும் கொஞ்சம் குறைத்து வெட்டச் சொல்லி விட்டுத் தாடி மீசையை முற்றாக ஷேவ் செய்யச் சொன்னான். இப்போது கண்ணாடியில் பார்க்க அவனுக்கே தன் தோற்றப் பொலிவு மனதில் ஒரு மகிழ்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

பிடித்த ஒரு சினிமாப் பாடலை சீட்டியடித்தபடி மோட்டார் சைக்கிளை எடுத்தவன் நேராக வைஷாலி வேலை செய்யும் இலங்கை வங்கிக்குச் சென்றான். பணத்தைக் கொடுத்து நகையைத் திருப்பியவன், அங்கிருந்த உத்தியோகத்தரிடம் வைஷாலியைப் பார்க்க வேண்டும் என்று சொல்லவும் அவர், அவள் அறையைக் காட்டினார்.

அறைக் கதவில் ‘உதவி வங்கி முகாமையாளர்’ என்ற பெயர்ப் பலகையைப் பார்த்ததும் இவனுக்கு ரொம்பவே பெருமையாகத் தான் இருந்தது. சிறு வயதிலிருந்தே கூடப் படித்தவள் இந்த இளம் வயதிலேயே அரச வங்கி ஒன்றில், இவ்வளவு பெரிய பதவி வகிக்கும் போது அதில் பெருமிதம் வருவது இயல்புதானே.

கதவை மெதுவாய் தட்டவும், பைல்களுக்குள் புதையல் எடுத்துக் கொண்டிருந்த வைஷாலி தலையை நிமிர்த்தாமலே உட்காரும் படி பணித்து விட்டு, இரு நிமிடங்களில் தன் வேலையை முடித்து நிமிர்ந்து பார்த்தவள் அவன் கோலம் கண்டு பேச்சற்றுப் போயிருந்தாள்.

சஞ்சயன், அவள் முன்னே கையை நீட்டி விரல்களால் சொடக்குப் போடவும் தன் நிலைக்கு வந்தவள்,

“அப்படியே ஏஎல் படிக்கேக்க பார்த்த போலவே இருக்கிறாயடா. என்ன கொஞ்சம் உடம்பு தான் அப்ப இருந்ததை விடக் கூடியிருக்கு. சத்தியமா என்னால நம்பவே முடியலைடா சஞ்சு...”

முகத்திலே உண்மையான மலர்ச்சியும் சந்தோசமுமாகச் சொன்னவளையே இவனும் மகிழ்ச்சியாகப் பார்த்தான்.

“ரொம்ப ஓட்டாதடி... வெட்கமா இருக்கு...”

என்றவனை அடிக்கக் கை ஓங்கினாள் இவள்.

“அடச்சீ... பாரன் ஆளை... எனக்கு வருது வாயில நல்லா... இப்பிடித் தாடி மீசையில்லாம மனுசர் மாதிரி இரு இனியாவது...”

என்றவளின் முன்னால் இருந்த கைபேசியை எடுத்துத் தனது இலக்கத்தைப் பதிந்தவன், அதில் அவனது இலக்கம் பதியப்பட்டு இருக்கவே தனது கைபேசிக்கு அழைப்பை எடுத்து அவளது கைபேசி இலக்கத்தைத் தன்னுடையதில் பதிந்து கொண்டான்.

“என்ர நம்பர் ஆல்ரெடி சேவ் பண்ணிட்டாய் போல. ஒகே டி... நீ வேலையைப் பாரு. நான் பிறகு கதைக்கிறன். நீ முரளிட நம்பரை அனுப்பு... நான் அவனோடயும் எடுத்துக் கதைக்கிறேன். என்னை அண்டைக்குக் கண்டதைச் சொன்னியா அவனுக்கு?

சரிடி... நானும் ஒபிஸ்க்குப் போக வேணும். லேட்டாகுது. நாளைக்கு உனக்கு வேலையில்லை தானே. முரளியும் வீட்டதானே நிப்பான். நான் டின்னருக்கு வீட்டுக்கு வாறன். நல்ல மரக்கறியாய் சமைச்சு வை... கடைச் சாப்பாடு சாப்பிட்டு நாக்குச் செத்துப் போச்சுடி... சரிடி... நேரம் போகுது... நான் போய்ட்டு வாறன்...”

சொல்லி விட்டு எழுந்து போனவனை பிரமை பிடித்தவளாய் பார்த்திருந்தாள் வைஷாலி.

‘அப்போ இவனுக்கு என்னைப் பற்றி எதுவுமே தெரியாதா?’

சிந்தித்தவளின் மனதில் சஞ்சயன் எந்தவித சமூக வலைத் தளங்களிலும் இல்லாமல் இருப்பது நினைவுக்கு வந்தது. இவளும் பெரிதாக யாரோடும் பேசுவதில்லை.

ஒதுங்கி இருந்து விட்டால் தேவையற்ற பேச்சுக்களிலிருந்து விடுதலை என்று எண்ணி, இவள் இப்போது பழைய நண்பர்கள் யாரோடும் பெரிதாக நட்புப் பாராட்டுவதில்லை. அதனால் பழைய பள்ளித் தோழர்களிடம் சஞ்சயனைப் பற்றிய பேச்சுக்கும் இடமற்றுப் போயிருக்கவே, உண்மையில் இவள் இவனை நேரில் காணும் வரை மறந்தே போயிருந்தாள் என்றேதான் சொல்ல வேண்டும்.

தனிமையின் உச்ச நிலையில் இருந்தவளுக்கு சஞ்சயனை நேரில் கண்டதும், தனது சூழ்நிலை எல்லாம் மறந்து அந்தப் பள்ளிப் பருவத்திற்கே மனம் சென்றிருக்க அதே ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் பேசியிருந்தாள். ஆனால், அவன் முரளி பற்றிக் கேட்கவும்தான் இவள் இப்போது சுய நிலைக்கு வந்தாள்.

எப்படி மறந்தாள் இதை? முரளி பற்றி அறியும் சஞ்சயன் என்ன சொல்வான்? இவன் என்ன புதுசாகச் சொல்லி விடப் போகிறான்? மற்றவர்கள் போலதானே இவனும் இருப்பான். தலவாக்கலை வந்ததிலிருந்து தனிமையின் கொடுமையையும் வேண்டாத சிந்தனைகளின் வலியையும் மட்டுமே இவள் அனுபவித்தாளே தவிர, வேறு மனக் கசப்புகளோ, வேண்டாத பேச்சுக்களோ அற்று மிகவும் நிம்மதியாகவே இருந்தாள் எனலாம்.

ஆனால் இப்போது அதற்குத் தானாகவே வலியச் சென்று ஆப்படித்துக் கொண்டோமே என்று தன் மீதே ஆத்திரப்பட்டாள் வைஷாலி.

“சே... சஞ்சு கண்டும் காணாமலும் தன்ரபாட்டில தானே இருந்தான். நான் தானே தேவையில்லாமல் வலியப் போய் கதைச்சது. அப்படிப் போய்க் கதைச்சாலும் சும்மா சுகம் விசாரிச்சிட்டு விட்டிருக்கலாம்.

இப்படி நான் ஓவராய் வளவளக்கவும் தானே அவனும் வீட்டுக்கு வாறன் என்று சொல்லிட்டுப் போறான். அவனைச் சொல்லிக் குற்றமில்லை. நான் இப்பிடி அந்தக் காலம் போலவே உரிமையோட கதைச்சால் அவனும் கதைப்பான் தானே. குரங்கு ஆப்புக்கு மேலே தானே போய் இருந்துச்சாம் என்றது இதுதான் போல” என்று தன்னைத் தானே கடிந்து கொண்டவள் செய்த முதல் காரியம், சஞ்சயனிடமிருந்து இனி முற்றாக விலகியிருப்பது என முடிவெடுத்துத் தனது கைபேசியை அணைத்து வைத்தது. வேலை தலைக்கு மேல் குவிந்து கிடக்கவே அப்போதைக்கு சஞ்சயனின் நினைவுகளுக்கு ஓய்வு கொடுத்துத் தனது வேலைகளைக் கவனிக்கலானாள்.

இவள் விலகல் புரிந்து அவன் விலகுவானா? இல்லை மேலும் நெருங்குவானா?




**இவள் கனவு நனவாகுமா?**

# சி. ரமேஷ் கவிதைகளில் மதத்தொன்மம்

அபிநாத்

சொல் புதிது பொருள் புதிது எனும் சோதி மிக்க நவீன கவிதைகள் அண்மைக் காலமாக கொஞ்சம் கொஞ்சமாக வாசிக்கக் கிடைத்தன. அவ்விதம் என் ஆசிரியர்களின் கவிதைகளையும் நண்பர்களின் கவிதைகளையும் வாசிக்கும் போது தமிழாசிரியரும் படைப்பாளியுமான சி.ரமேஷ் அவர்கள் எழுதிய உதிரிக் கவிதைகள் சிலவற்றை படிக்கின்ற வாய்ப்பும் கிட்டியது. எனது மாணவ அறிவிற்கேற்ப நுனிப்புல் மேய்தலாக சில விடயங்களை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சிதம்பரநாதன் ரமேஷ் இலங்கையின் விமர்சகர்களில் சிறப்பிற்குரியவர். புத்தகங்களைச் சேகரிப்பதிலும் நிறைய வாசிப்பதிலும் தொடர்ந்து எழுதுவதிலும் ஆர்வமுடையவர். மறுபாதி, நடுகை, வெள்ளிமலை போன்ற சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவிலும் பங்களிப்புச் செய்தவர். தற்போது வெளிவரும் அனைத்து சஞ்சிகைகளையும் நூல்களையும் உடனடியாக வாசித்து அவை பற்றிய கருத்துக்களையும் வெளிப்படுத்தி வருகிறார். பிறரது படைப்புக்களை தீவிரமாக விமர்சிப்போர் படைப்பாளிகளாக மாறுவதிலே தயக்கம் காட்டும் சூழலில் ஆக்க கர்த்தாவாகவும் அமைந்துள்ளார். எது விதமான தயக்கமோ, அச்சமோ இன்றி விமர்சனங்களைச் செய்வதோடு படைப்புக்களை சிருஷ்டிப்பவராகக் காணப்படுகிறார். அனைத்து மனத் தடையினை உடைத்து கவிஞராகவும் வெளிக் கிளம்பியுள்ள சி. ரமேஷ் சொல்லடுக்கினைச் சிறப்பாய் கையாண்டுள்ளார்.

நம்முடைய வலிகளை யும் வேதனைகளையும் களைய கர்த்தர் வந்ததான கிறிஸ்தவ தொன்மத்தைப் பேசுவதாக


“ஒப்பனையற்ற வெளிச் சிறுத்த எதை தம்
குடுவைக்குள் நிறைந்திருக்கும் வைனை போல
காயங்களால் படிந்திருந்தது.
அன்று அழுக்குப் படிந்த எனது சரீரத்தை
பரமபிதா கண்ணீரால் கழுவினார்
தூய ஆவியாக இரட்சிக்கப்பட்ட தருணத்தில்
அந்தியின் ஒளி என்மேல்கவியத் தொடங்கியது”

என அமையும் இக் கவிதையில் அந்தி கடந்து இருள் வரத்துவங்குவது போல் இயேசு வந்து என்மீது இரக்கப்படினும் அது பூரணமாகாது போனதை உள்ளுறுத்தி கவிஞர் பாடியிருப்பதைக் காணமுடியுமாயுள்ளது.

உலகிலுள்ளவர்களின் பாவங்களைத் தீர்க்க பரமபிதா உலகத்தவர்களுக்காகவும் தனது உடலையும் குருதியையும் தர எண்ணி வைனை தன் குருதியாயும் அப்பத்தைத் தன் உடலாயும் கருதி அளித்தது பற்றி பைபிள் கூறும் விடயமானது யூதாஸின் செயற்பாட்டால் பிசகிய தன்மையைப் பேசுவதான,

“வேதனையின் ரொட்டிகளாலும்
பாவத்தின் குருதிகளாலும்
நிரம்பி வழிந்த ஆண்டவரின்
குடில்களில் இருந்து
விஷவித்துக்கள் முளை கொள்ள
தேதியிடப்படாத நாட்குறிப்பேட்டின்
கவிச்சையின் வாடையில்
என் சுயம் தொலைந்து போனது”

எனும் இக் கவிதை அதர்மத்தின் தலை தூக்குதலிலும் நாட்டின் அநீதியாலும் தன் சுயம் தொலைந்திருப்பதை உள்ளடக்கிய தன்மையை வெளிப்படுத்துகின்றது.



தலைவர் ஒருவரின் மரணத்திற்கு உடனிருந்தவனின் துரோகம் காரணமாகிய நிகழ்வினை கிறிஸ்தவ தொன்மத்தினைக் கொண்டு உணரச் செய்கிறார். இயேசுவும் யூதாஸ் காரியோத்தும் குறியீடுகளாய் அமைந்து ஈழப் போரின் முக்கியமான இருவரை எளிதாகச் சுட்டும் வண்ணமாக

“மீண்டும் ஒரு தடவை பரிசேயரின் காவலரிடம்
காட்டிக் கொடுத்தான் யூதாசு இஸ்காரியோத்து
அப்போது அவன் முப்பது வெள்ளிக் காசுகளுக்கு
அதிபதியல்ல
விறைத்த பிணத்தின் விழிகளுக்குள்
உறையும் மௌனத்தில்
கட்டுவிரியன் படமாய்
துரோகத்தின் நிழற்கோடுகள்
அடையாளம் இழந்த
வேட்டையாடப்பட்ட மாமனிதனாய்
குருதி வடிய அவரைக் கண்டேன்
துண்டிக்கப்பட்ட அவர் நாவில்
சொல்லாமல் போன வார்த்தைகள்
சிதறிக்கிடந்தன”

பௌத்த மதத்திற்குரித்தான தாரா எனும் பெண் தெய்வம் காசியப்பன் விருப்பத்திற்குரியதாகும். தன் தந்தையைக் கொன்று சாம்பலை சிகிரியாவிற்கு அருகிலுள்ள நதியில் கரைத்த காசியப்பன் செயலை படம் பிடித்து பௌத்த தொன்மத்தை வெளிக் கொணரச் செய்வதாகக் கீழ்வரும் கவிதை அமைகின்றது.

“விதிக்கப்பட்ட போர் முனையில்
துரோகத்தின் நிழல் கூர்வாளாய்த் துலங்க
தாராவுக்குத் தன்னைப் பலி கொடுத்தான்
காசியப்பன்”

இனவெறியால் பௌத்த சிங்கள வரலாறு பொய்களையும் புரட்டுக்களையும் தன்வசப்படுத்தி உண்மைகளை இரட்டடிப்புச் செய்து வருகின்றது. பல்வேறு நிஜங்கள் இழுத்துச் சாத்தப்படுகின்றன. தமிழரின் பூர்விக உரிமைக்கும் பூட்டுப் போடப்படுகின்றது. அனைத்துச் சாவிகளும் பௌத்த பீடத்தின் பாதங்களில் அரச இயந்திரத்தால் காணிக்கையாக்கப்படும் தன்மையை

“துட்டகைமுனுவின் பேரர்களால்
புனையப்பட்ட பழுப்பேறிய பக்கங்களில் இருந்து
பாலி எழுத்துக்கள் மெல்ல மெல்ல
வெளியேறிய நிலையில்
பூட்டுக்கள் தங்கள் சாவிகளைத்
தேடத் தொடங்கின”

என்னும் மேற்கூறிய கவிதை துல்லியமாக புலப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

இவ்விதம் கவிஞர் சி.ரமேஷின் கவிதைகளில் இந்துத்தொன்மம், கிறிஸ்தவத்தொன்மம், பௌத்தத் தொன்மம் முதலியவை அர்த்த அடர்த்தியோடு கையாளப்பட்டிருப்பதனைக் காண முடிகின்றது.

கவிதைகள் சொற்களைச் சொற்களால் கூர்மைப்படுத்தும் தன்மையோடு உள்ளன. மதத் தொன்மத்தினை நல்லமுறையிலே உள்வைத்து கவிதைகளை எழுதி வருகிறார்.

பாலையாக வறண்ட வாழ்விலும் அன்பின் துளிர்ப்பு ஈர்ப்புடனே அமைகின்றது. அரூபத்தின் இசை என்ற இவரது கவிதையில் இத்தகைய உள்ளீட்டினைப் பார்க்க முடிகின்றது.



“திருநீல கண்டத்தில்
இறங்கும் நாகத்தின்
இச்சையில் கடல்
வண்ணமாய் சிதைந்து
கிடக்கிறது உடல்”

என்ற இந்துத் தொன்மம் வாழ்வின் மீதான பிடிப்பு – வாழ்வின் மீதான மாயை என்ற இருவகை வாசிப்பினையும் தரும் முரண் அழகோடு அமைகின்றது. ஒவ்வொருவரின் தரிசனத்திற்கும் ஏற்ற வகையில்

■

---

# ‘மம்மி’க்கு ‘சி.டி.ஸ்கான்!’


எகிப்திய பிரமிடுகளில் ‘மம்மி’ எனப்படும், பாடம் செய்யப்பட்ட மனித உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கும். இன்று தொல்லியலாளர்கள் முன் அவை பெரும் சவால்களாக உள்ளன. அவற்றைப் பிரிக்காமல் முழுமையாக ஆராய்ச்சி செய்ய முடியாது.

பிரித்தால், வரலாற்றுச் சான்றுகள் நிரந்தரமாகச் சிதைக்கப்படும் ஆபத்து உண்டு. இந்த இடத்தில்தான் முப்பரிமாண ‘சி.டி. ஸ்கான்’ தொழின்நுட்பம் உதவிக்கு வந்துள்ளது. கெய்ரோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இதை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர். சி.டி.ஸ்கான் கருவி, மனித உடலை அடுக்கடுக்காகப் படம் பிடித்துக் காட்டும் திறன் கொண்டது.

அந்தக் கருவியைப் பாடம் செய்த சடலத்திற்கும் பயன்படுத்துவது புத்திசாலித்தனமான ஒரு அணுகு முறைதான். கி.மு., 1500 களில் எகிப்தை ஆண்ட பாரோ அமென்ஹோடெப் - 1 என்ற மன்னரின் மம்மி, அகழாய்வு செய்வோரால் 1881 இல் கண்டெடுக்கப்பட்டது. அதை 2019 இல் ஆராய்ச்சியாளர்கள் ஸ்கான் செய்து ஆய்வு செய்துள்ளனர். அந்த ஆய்வின் முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

மன்னரின் உடலை, 12 ஆம் நூற்றாண்டில் கொள்ளையர்கள் தோண்டி எடுத்து தங்க அணிகலன்களை பிரித்தெடுப்பதற்காக, சேதப்படுத்தியிருந்தனர். அதை சீர் செய்து அக்கால ஆட்சியாளர்கள் பாதுகாத்துள்ளதாக, சி.டி.ஸ்கான் செய்த ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அந்த மன்னரைப் பற்றி இன்னும் பல புதிய செய்திகள் வெளிவரக்கூடும்.

■





02

# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

ரமணி

மிகப்பெரிய தயாரிப்பு நிறுவனமான ஏ.வி.எம்மும், ரசிகர்களின் பேரன்பைப் பெற்ற எம்.ஜி.ஆரும் முதன் முதலில் இணைந்த திரைப்படம் "அன்பே வா." திரையுலகில் கொடிகட்டிப் பறந்த சிவாஜி, ஜெமினி, ஜெய்சங்கர், எஸ்.எஸ்.ஆர், ரவிச்சந்திரன் ஆகியோரை நடிப்பில் படங்களைத் தயாரித்த ஏ.வி.எம். முதன்முறையாக எம்.ஜி.ஆரை கதாநாயகனாக்கி எடுத்த படம்தான் அன்பே வா. ஏ.வி.எம் நிறுவனத்தில் எம்.ஜி.ஆர் நடித்த ஒரே படமும் இதுதான். 1966 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி தைத்திருநாளில் (பொங்கல் நன்னாளில்) வெளியாகி மிகப்பெரிய வெற்றியைப் பெற்ற படம் அன்பே வா.

ஏ.வி.எம் நிறுவனத்தின் படத்தில் எம்.ஜி.ஆர் நடித்ததற்குப் பின்னால் ஒரு கதை உள்ளது. " ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்" எனும் பாடலுக்குப் பின்னால் இன்னொரு கதை உள்ளது. எம்.ஜி.ஆருக்கும், சிவாஜிக்கும் ரசிகர்கள் உள்ளது போல அவர்களுடன் நடிப்பதற்கும் சிலர் உள்ளனர். எம்.ஜி.ஆரின் மீது மிகுந்த விசுவாசமுள்ளவர் அசோகன். பிரமாண்டமான ஏ.வி.எம்மின் படத்தில் எம்.ஜி.ஆர் நடிக்காதது அவருக்கு வருத்தமாக இருந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் எம்.ஜி.ஆரை வைத்து படமெடுங்கள் என சொல்வார்.

ஏ.சி.திருலோகச்சந்தரின் கதையை சின்ன பட்ஜெட்டில் ஜெய்சங்கரை வைத்து எடுக்கலாம் என ஆலோசனை செய்தபோது எம்.ஜி.ஆரை றை பண்ணலாமா என சரவணன் கேட்டார். தகப்பன் சம்மதம் தெரிவித்ததும் எம்.ஜி.ஆரைச் சந்திப்பதற்காக சரவணனும் முருகனும் சென்றனர். அவர்களை வரவேற்று உபசரித்த எம்.ஜி.ஆர் ஸ்கிரிப்ட் ரெடி பண்ணீடுங்க நாம ஒரு படம் சேர்ந்து பண்ணீடுவோம் என்றார்.

எதிரே அமர்ந்திருந்த சகோதரர்களின் முகம் மலர்ந்தது. அது ராமாவரம் தோட்டம். மாநிலத்தின் முக்கிய முகமான மக்கள் திலகத்தின் உறைவிடம். முகம் மலர்ந்த சகோதரர்கள் ஏ.வி.எம்மின் வாரிசுகள். உங்க கூட ஒர்க் பண்ண ஃபாதர் பிரியப்படுறாரு. நாகிரெட்டிக்கு செய்தது போல் எங்க பேனருக்கும் ஒரு படம் பண்ணித் தரணும் எனக் கேட்க வந்த இடத்தில் தான் உடனடியாக பச்சைக் கொடி காட்டினார் மக்கள் திலகம். ஸ்கிரிப்ட் ரெடியா இருக்கு எனக் கொடுத்தார்கள்.

அதனைப் பார்த்த எம்.ஜி.ஆர் ஆச்சரியப்பட்டார். அப்படியொரு ஸ்கிரிப்டை அதற்கு முன்பு எம்.ஜி.ஆர் பார்த்ததே இல்லை. பக்காவாக பைண்ட் செய்யப்பட்டிருந்தது. அதில் நேர்த்தியான எண்களைப் போட்டு எடுக்கப்போகும் காட்சிகள் சீன் வாரியாகப் பிரிக்கப்பட்டு பேச வேண்டிய வசனங்கள் பங்கு பெறும் பாத்திரங்கள் எனப் பக்காவான ஸ்கிரிப்ட்.

அந்தக் கதையை தனது ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்களோ என்ற சந்தேகம் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது. பெரிய நிறுவனத்துக்கு மறுப்புச் சொல்லவும் மனம் இல்லை. இது எம்.ஜி.ஆரின் கதை அல்ல. அம்மா, தங்கச்சி சென்ரிமென்ற், பழிவாங்கல், சண்டை எதுவுமே இல்லை. ஆனாலும் ஒப்புதலளித்துவிட்டார். எம்.ஜி.ஆர் உள்ளே வந்ததும் தயாரிப்பின் போக்கு மாறிவிட்டது. ஈஸ்ட்மன் கலர். சிம்லா லொகேஷன். அபிநய சரஸ்வதி சரோஜாதேவி. நாகேஷ், மனோரமா, டி. ஆர். ராமச்சந்திரன், அசோகன் என்று அருமையான நடிகர்கள். பழைய டிரெண்டில் இருந்து சற்றே விலகி, புதுமையான இசைச் சேர்க்கையில் ஜாலம் காட்டினார் எம்.எஸ்.விஸ்வநாதன். அன்பே வா படத்தின் கதாநாயகன் எம்.ஜி.ஆர். ஆனால், படத்தை நகர்த்துபவர் நாகேஷ். இதனை எம்.ஜி. ஆர் பெரிதாக எடுக்கவில்லை. வெளிப்புறப் படப்பிடிப்பு. அதுவும் சிம்லாவில் இந்த அளவுக்கு எவரும் படமாக்காத நிலை. கண்ணுக்குக் குளிர்மையான காட்சிகள். கதையை விட்டு மீறாத காட்சிகள் என ஓர் படத்துக்கு என்ன நியாயம் சேர்க்க முடியுமோ அவை அனைத்தையும் சேர்த்துக்கொண்டு, வித்தை காட்டியிருப்பார் இயக்குநர் ஏ.சி.திருலோகச்சந்தர் .



எம்.எஸ்.விஸ்வநாதன் படத்துக்கு இசை அமைத்தார். ஆனால், பாடல்களில் குமரனின் ஆதிக்கம் பலமாக இருந்தது. உயர்ந்த மனிதனில் கூட குமரனின் டேஸ்ட் இருக்கும். அப்படித்தான் அன்பே வாவிற்கும் இருவரும் அமர்ந்தார்கள். அட்டகாசமான பாடல்கள் கிடைக்க காரணம் குமரனின் பங்களிப்புதான். ஒன்ஸ் ஏ பப்பா இலங்கை பைலா பாடலில் கூட அவரது பங்களிப்பு இருந்தது. ட்விஸ்ட் டான்ஸ் டெஸ்ட் மேட்ச் என பார்த்துப் பார்த்து அவர் செய்தார். எந்த பாடலுக்கும் எம்.ஜி.ஆர். நேரடி தொடர்பில் இல்லை. ஓகே வாங்குவதற்கு மட்டும் போட்டுக் காட்டியதோடு சரி. எம்.எஸ்.வி.க்கே இது ஆச்சரியம். அவர் வந்து உட்கார்ந்தா என்னை ஒரு வழி பண்ணிடுவாரு. எதுக்கும் நீங்க கொஞ்சம் கேர்ஃபுல்லா இருங்க. கடைசி நேரத்தில கூட பாட்டை மாத்திடுவார் என அவரது அனுபவத்தைச் சொல்ல குமரன் பயந்தது என்னவோ உண்மை. செட்டியாரு கேட்டாரா?. கேட்டாருங்க என்ன சொன்னாரு? நல்லாயிருக்கப்பா இதையே வெச்சுக்கலாம்னு சொல்லீட்டாரு. செட்டியாருக்கு பிடிச்சிருந்தா எனக்கும் ஓகே தான். இப்படித் தான் ஒவ்வொரு பாடலுக்கும் அவர் ஏ.வி.எம்மிற்கு மரியாதை தந்தார். உங்க நிறுவனம் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. நீங்க எது செய்தாலும் கரெக்டா இருக்கும். எங்கிட்ட ஒப்பீனியன் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நேரா சூட்டிங் போயிடலாம். அவுட்டோரில் இருக்கும்போது டேப்பில் ஒலிக்கும் பாடலை இயக்குநர் டேஸ்டிற்கு நடித்துக் கொடுத்த எம்.ஜி.ஆரை அது வரை திரையுலகம் கண்டதே இல்லை. அதிலொரு பாடல் பட்டி தொட்டியெங்கும் பட்டையைக் கிளப்பிய ராஜாவின் பார்வை ராணியின் பக்கம். இதிலும் குமரனின் ஆதிக்கம் இருந்தது.

நாயகனும் நாயகியும் மிக நெருக்கத்தில் கனவு காணும் பாடல் காட்சிக்கு எம்.எஸ்.வி 15க்கும் மேற்பட்ட பல மெட்டுகளைப் போட்டுக் கட்டினார். குமரனுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. என்னதா எதிர்பாக்கிறீங்க என விஸ்வநாதன் கேட்டார்.

நேத்து ஒரு படம் பார்த்தேன். பாரீஸ் ஷாம்பெய்ன். அதில ரெண்டு குதிரை பூட்டின கோச்சில லவ்வர்ஸ் உட்கார்ந்து போறாங்க. அப்போ ஒரு மியூசிக் குடுக்கிறான். சும்மா ஜில்லுனு இருக்கு. நமக்கே குதிரைல போற ஃபீலிங் கிடைக்குது. அது மாதிரி ஒரு ஃபீலிங் இந்த பாட்டிலும் இருந்தா பெட்டரா இருக்கும். அவ்வளவு தானே. ஆர்மோனியத்தை மூடிவிட்டு பியானோவுக்கு மாறினார். எம்.எஸ்.வி போட்ட முதல் ரியூனைக் கேட்டதும் குமரன் துள்ளிக் குதித்தார். உடனே வாலிக்கு அழைப்பு விடுத்தார்கள். வாகினியில் இருக்கும் வாலிக்குத் தகவல் விடுக்கப்பட்டது. ஏ.வி.எம் முக்குச் சென்ற வாலி அதிர்ச்சியடைந்தார். ஆர்மோனியம் இல்லாமல் பியனோவுடன் இருக்கும் எ.எம்.எஸ்.வியைப் பார்த்தால் யார்தான் ஆச்சரியப்பட மாட்டார்கள். கனவுக் காட்சி, குதிரை வண்டி என்றதும் வாலியின் கற்பனை ராஜா, ராணி என விரிந்தது ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் வாலி சொன்னதும் குமரன் முகம் மலர்ந்தது. பியானோவில் விஸ்வநாதன் வாசிக்க கண் தேடுதே சொர்க்கம் கை மூடுதே வெட்கம் பொன் மாலை மயக்கம் பொன் மாலை மயக்கம் வாலியின் வரிகளில் அனைவரும் மயங்கினர். ரி.எம்.எஸ்ஸூம் சுசீலாவும் பாடலுக்கு உயிர் கொடுத்தனர்.

ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் எனும் பாடலை எப்படிப் படமாக்க வேண்டும் என்ற ஐடியா எதுவுமே இயக்குநர் திருலோகச்சந்தருக்கு இருக்கவில்லை. ஏதோ ஒரு தெலுங்கு படத்திற்காகப் பயன்படுத்திவிட்டு அக்கு வேறு ஆணி வேறாகக் குவித்து வைக்கப்பட்டிருந்த கிடந்த சாரட்டை ஆர்ட் டைரக்டர் சேகர் பொருத்திக் கொடுத்தார். அழகான வெள்ளைக் குதிரையைக் கொண்டுவந்து புல்லுக் கட்டைக் காட்ட அது தலையை அப்படியும் இப்படியும் ஆட்டியது. இது போதும் என்றார் இயக்குநர்.

ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் எனும் பாடல் காட்சியைப் பார்க்கும்போது ராஜா எம்.ஜி.ஆரும், ராணி சரோஜாதேவியும் குதிரை வண்டியில் வேகமா கச் செல்வது போலவும் வண்டியின் வேகத்துக் கேற்ப குதிரை தலையை ஆட்டுவது போலவும் இருக்கும். அது மட்டுமல்லாது அந்தக் குதிரை வண்டியில் நாம் செல்வது போன்ற உணர்வும் ஏற்படும். ■

## நூல் வெளியீடும் புத்தகக் கண்காட்சியும்




யாழ்/குடத்தனையில், கவிஞர் சிவசேகரனின் குறும்பாக்களின் தொகுப்பான 'ஒரு கூடை குறும்பூ' புத்தக வெளியீடும் ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சியும் நடைபெற்றுள்ளது.

குடத்தனை, செல்வா சனசமூக நிலையத்தின் தலைவர் யாழ் முத்து ஆ. இராமநாதன் அவர்கள் தலைமையில் இந்நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது.

மருதங்கேணி பிரதேச கலாசார உத்தியோகத்தர் சேனாதிராசா செல்வசுகுணா அவர்கள் புத்தகத்தை வெளியிட்டுவைக்க 'எங்கட புத்தகங்கள்' குலசிங்கம் வசீகரன் முதலாவது பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

தமிழ்த்திரையிசையில் கோலோச்சிய மாபெரும் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் திரையிசைப் பயணத்தின் வரலாற்றை ஒரு ரசிகனின் பார்வையில் கண்டு, கானா பிரபா எழுதிய "SPB பாடகன் சங்கதி" எனும் நூல் வெளியிடபட்டுள்ளது. பயணிக்கும் நூலாக வெளிவந்துள்ளது. இந்த நூலின் முதற்பிரதியை எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் வாழ்நாள் சகா கங்கை அமரன் (இசையமைப்பாளர், பாடகர் மற்றும் இயக்குநர்) பெற்றுக் கொண்ட சம்பிரதாயபூர்வ நிகழ்வு கடந்த ஜனவரி 8 ஆம் திகதி கங்கை அமரனின் அவர்களது இல்லத்தில் "அகநாழிகை" பதிப்பாசிரியர் திரு. பொன். வாசுதேவனுடன், திரைப் படைப்பாளி அஜயன் பாலா வெளியிட்டு வைக்க இனிதே நிகழ்ந்தது. தற்போது நிகழும் அசாதாரண நிகழ்வுகளால் நூல் வெளியீடு தள்ளிப் போடப்பட்டாலும், எதிர்வரும் காலத்தில் இந்த நூலின் வாசிப்பு அனுபவ நிகழ்வை நடத்தத் தீர்மானித்திருக்கின்றார்கள்.



# இலங்கையைச்...




(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவடைவதை கொண்டாடும் வகையில், சீன வெளிவிவகார அமைச்சரின் ஒரு நாள் விஜயமாக இங்கு வந்தார்.

சோவியத் ரஷ்யா,ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளுடன் நெருக்கமாக இருந்த இலங்கை இப்போது சீனாவை நேசிக்கும் நாடாக மாறிவிட்டது. நட்பு நாடு என இரண்டு நாட்டுத் தலைவர்களும் முகமன் கூறி உரையாடினாலும் தேவையான நேரங்களில் இலங்கையின் தலையில் குட்டுவதற்கு சீன தயங்கியதில்லை.

இலங்கைக்கு அதிகளவான கடன் வழங்கிய சீனா பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த சில மாதங்களாக இரு நாடுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் விவசாயப் பணிகளில் இரசாயன உரங்களுக்குப் பதிலாக முழுதும் இயற்கை உரங்களை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.அதைப் பயன்படுத்தி இயற்கை உரங்களை சீனா ஏற்றுமதி செய்தது. தரமில்லாததால் அது நிராகரிக்கப்பட்டது. சீன கப்பல் திருப்பி அனுப்பப்பட்டது.இதனால் கோபமடைந்த சீனா இலங்கைக்கு கடும் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன் எதிரொலியாக இலங்கை மத்திய வங்கியை கறுப்புப் பட்டியலில் சேர்த்தது சீனா. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க பல சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

இறகுமதி செய்யப்படாத உரத்துக்குப் பணம் கொடுக்கப்பட்டது. இது இலங்கைக்கு அரசியல் தோல்வியாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள சிறிய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான அடித் தளத்தை சீன வெளிவிவகார அமைச்சர் இட்டுள்ளார்.இந்தியப் பெருங் கடல் தீவு நாடுகளுக்கிடையில் பொது வளர்ச்சியை ஊக்குவிக்கும் அமைப்பொன்றை உருவாக்க இலங்கை அரசிடம் சீனா யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

இந்து சமுத்திரப் பிராந்தியம் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என இந்தியா விரும்புகிறது.இந்தியப் பெருங்கடலில் உள்ள சிறிய நாடுகளை இந்தியாவுக்கு எதிராக அணி திரட்டும் மறைமுகத் திட்டமாக இது முன் மொழியப்பட்டுள்ளது. இலங்கையைச் சிக்க வைக்கும் சீனாவின் வலையாகவே இந்தத் திட்டம் நோக்கப்படுகிறது.

சீன ,இலங்கை உரவில் மூன்றாம் தரப்பு தலையிடக் கூடாது எனவும் வாங் யீ தெரிவித்துள்ளார். அந்த மூன்றாம் தரப்பு இந்தியாதான் என்பதை அனைவரும் அறிவர். இலங்கையின் வட பகுதியில் இருக்கும் யாழ்ப்பாணம் இன்னொரு நாட்டின் தென் பகுதியில் இல்லை எனச் சொல்வதன் அர்த்தம் ஒன்றும் இரகசியமானதல்ல. இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவை மலைபோல் நம்பி உள்ளார்கள். இந்தியா அவர்களை கடைக்கண்ணால் கூட பார்ப்பதில்லை. தமிழ் மக்களின் மனதை வென்றால் அவர்கள் இந்தியாவை வெறுப்பார்கள் என சீனா நம்புகிறது.

ஐ.நாவில் இலங்கையைக் காப்பாற்றும் நாடு சீனாதான். ஆகையால் , சீனாவின் எண்ணம் தவறானது. இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா பல உதவிகளைச் செய்தது. ஆனால், இறுதி யுத்தத்தில் போரைத் தவிப்பதற்கு இந்தியா முன் வரவில்லை என்ற கோபம் இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு. இருந்த போதிலும் இந்தியா தமக்கு உதவும் என்ற நம்பிக்கையில் இலங்கைத் தமிழர்கள் இருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்தின் கூட்டாளியான சீனாவை நம்புவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

சீனா,மாவோ, சீன கம்யூனிஸ்ட் போன்ற அனைத்து வரலாறும் அனைத்தும் இலங்கைத் தமிழர்களுக்குத் தெரியாததல்ல. கம்யூனிஸ்ட் எனும் போர்வையில் சீனா நடத்தும் ஜனநாயக நாடகம் தமிழ் அரங்கில் எடுபடாது.


யாழ்பாணத்துக்கு உதவி செய்யும் நோக்கில் இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க சீனா முயற்சிக்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியாவுக்கு சீனாவிடுக்கும் எச்சரிக்கைக்கு இலங்கை அரசாங்கம் கருத்தெதுவும் தெரிவிக்கவில்லை. உலக அரசியல் அரங்கில் சர்ச்சைகள் எதிலும் சிக்காத இலங்கை இப்போது சீனாவின் பக்கம் சரியத்தொடங்கி விட்டதோ என்ற எண்ணம் தோன்றியுள்ளது. இலங்கையில் நடந்த இறுதி யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர அனைத்து நாடுகளும் உதவி செய்தன. இந்தியாவைத் தன்பக்கம் இழுப்பதற்காக சீனாவையும், பாகிஸ்தானையும் இலங்கை முன்னிறுத்தியது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு பொருளாதார உதவிகளை சீனா வழங்கியது. சீனாவிடம் இருந்து அதிகளவான கடன் வாங்கிய இலங்கை வட்டி கட்ட முடியாமல் தடுமாறுகிறது.அடகு வித பணமும் சொத்தும் மீள முடியாது மாண்டு போவதைப்போல கொடுத்த கடனுக்கு ஈடாக அந்த நாட்டுகளின் பொருளாதார வளங்களை சீனா கைப்பற்றி விடும். அதன் பொறியில் இருந்து மீள்வது கடினம். இலங்கையும் அப்படியான ஒரு நிலையை நோக்கியே செல்கிறது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவில் மூன்றாவது நாடு தலையிடக்கூடாது என சீன வெளிநாட்டமைச்சர் தெரிவித்தது இந்தியாவுக்கான எச்சரிக்கையே. வடக்குத் தீவுகளில் சீனா கால் பதிக்க முயன்றபோது இந்தியாவின் அழுத்தம் இருந்ததால் அந்தச் சம்பவம் நடைபெறவில்லை. அதனை மனதில் வைத்தே மூன்றாவது நாடு எனும் சொற்பதம் பிரயோகிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு அமெரிக்கா பக்க பலமாக இருக்கிறது. இந்திய சீன எல்லைப் பிரச்சினையை அமெரிக்கா கூர்ந்து கவனிக்கிறது. சிறிய நாடுகளை சீனா மிரட்டக்கூடாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. சீன வெளிநாட்டமைச்சர் இலங்கையில் நிற்கும் போது இதனை அமெரிக்கா இப்படிச் சொல்லியுள்ளது. வல்லரசுகளின் பனிப்போருக்குள் தெரிந்தோ தெரியாமலோ இலங்கை சிக்கி விட்டது. ■

**யாழ்நகரில் 03 மாடி கட்டடம் வாடகைக்கு**




சூப்பர் மார்க்கெட், டெக்ஸ் டைல்ஸ், ஷோ ரூம்கள், நிதி அலுவலகம், கல்வி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு இடம் தேடுபவர்களா நீங்கள்! யாழ் நகரில் 03 கடைகள் கொண்ட வணிகக் கட்டடம் 1000 சதுர அடி கொண்ட வாகனத் தரிப்பிடம், தண்ணீர் வசதி, மின்சார வசதி, cctv வசதி உள்ளது.
தரைத்தளம் 200 சதுர அடி இதில் 2 அலுவலக அறைகள் மற்றும் 02 குளியலறைகள் உள்ளன. முதலாவது தளத்தில் 1000 சதுர அடியுடன் கூடிய ஒரு குளியலறை உள்ளது.
இரண்டாவது தளத்தில் 1000 சதுர அடியுடன் கூடிய மூன்று குளியலறைகள் உள்ளன.

**உடனே தொடர்பு கொள்ளுங்கள்**
**0779876922, 0707876922**

Derana startup - 2021 தொழில் முயற்சியாளர்களுக்கான போட்டியில்

**மண்ணின்றிய பயிர்ச் செய்கை முறை (Hydroponic)**



சாத்தியம் என நிரூபித்து யாழ் மாவட்டத்தின் ஒரே ஒரு போட்டியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளேன்.

**அர்ச்சனா உதயகுமாரன்**

ஜனவரி 15-20 வரை வாக்குகளைப் பதிவு செய்யுங்கள்.

**ஜனவரி 15 இரவு 9.30 – ஜனவரி 20 வரை**

DS 25 என type செய்து 9900 என்ற இலக்கத்துக்கு அனுப்பி

தமிழ் மக்கள் சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள விவசாயத்தில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்திய எமது முயற்சிக்கு வாக்களித்து ஆதரவு தாருங்கள்.

உங்கள் வாக்குகளே விவசாய மாற்றத்தின் வெற்றி

# சரிந்துகொண்டிருக்கும்...

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பெரும்பாலான பாடங்களில் 100% சித்தியுடன் உச்சப் பெறுபேறுகளை வழங்கியிருந்தாலும் அதிக சதவிகிதம் "A" மற்றும் "B" பெறுபேறுகளைப் பெற்ற தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கிட்டத் தட்ட 10-20 சதவிகித இடைவெளியில் யாழ் இந்துக் கல்லூரியை விட முன்னிலை வகிப்பதை நீங்களும் பார்க்கலாம். இது கணிசமான ஒரு இடைவெளி. ஒரே விதமான பந்தயக் குதிரைகளைக் கொண்ட இரு கல்லூரிகளில் யாழ் இந்துக் கல்லூரியின் அடைவு மட்டங்கள் சற்று பின் தங்கி இருப்பது கசப்பான உண்மைதான்.

| School: J/Kokuvil Hindu College | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt | | | | | | | | | | | | | | | | | |
| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | N/A | Pass | Passing Percentage (%) |
| 12 | Saivanery | 240 | 240 | 116 | 48.3% | 44 | 18.3% | 59 | 24.6% | 18 | 7.5% | 3 | 1.3% | 0 | 237 | 98.8% |
| 14 | Catholiciam | 5 | 5 | 3 | 60.0% | 0 | 0.0% | 1 | 20.0% | 1 | 20.0% | 0 | 0.0% | 0 | 5 | 100.0% |
| 15 | Chritianity | 5 | 5 | 0 | 0.0% | 1 | 20.0% | 1 | 20.0% | 2 | 40.0% | 1 | 20.0% | 0 | 4 | 80.0% |
| 22 | Tamil Language & Lit | 250 | 250 | 30 | 12.0% | 70 | 28.0% | 116 | 46.4% | 31 | 12.4% | 3 | 1.2% | 0 | 247 | 98.8% |
| 31 | English | 250 | 250 | 19 | 7.6% | 31 | 12.4% | 72 | 28.8% | 98 | 39.2% | 30 | 12.0% | 0 | 220 | 88.0% |
| 32 | Mathematics | 250 | 250 | 106 | 42.4% | 43 | 17.2% | 67 | 26.8% | 23 | 9.2% | 11 | 4.4% | 0 | 239 | 95.6% |
| 33 | History | 250 | 250 | 82 | 32.8% | 44 | 17.6% | 92 | 36.8% | 30 | 12.0% | 2 | 0.8% | 0 | 248 | 99.2% |
| 34 | Science | 250 | 250 | 26 | 10.4% | 28 | 11.2% | 79 | 31.6% | 91 | 36.4% | 26 | 10.4% | 0 | 224 | 89.6% |
| 60 | Business & Acc | 164 | 164 | 31 | 18.9% | 41 | 25.0% | 52 | 31.7% | 33 | 20.1% | 7 | 4.3% | 0 | 157 | 95.7% |
| 61 | Geography | 39 | 39 | 8 | 20.5% | 8 | 20.5% | 19 | 48.7% | 3 | 7.7% | 1 | 2.6% | 0 | 38 | 97.4% |
| 62 | Citizenship Education & Governance | 32 | 31 | 8 | 25.8% | 2 | 6.5% | 13 | 41.9% | 6 | 19.4% | 2 | 6.5% | 1 | 29 | 93.5% |
| 63 | Entrepreneurship Studies | 15 | 15 | 2 | 13.3% | 5 | 33.3% | 6 | 40.0% | 2 | 13.3% | 0 | 0.0% | 0 | 15 | 100.0% |
| 42 | Music (Carnatic) | 38 | 38 | 22 | 57.9% | 12 | 31.6% | 3 | 7.9% | 1 | 2.6% | 0 | 0.0% | 0 | 38 | 100.0% |
| 43 | Art | 26 | 26 | 2 | 7.7% | 6 | 23.1% | 15 | 57.7% | 3 | 11.5% | 0 | 0.0% | 0 | 26 | 100.0% |
| 45 | Dancing (Bharatha) | 16 | 16 | 6 | 37.5% | 5 | 31.3% | 5 | 31.3% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 16 | 100.0% |
| 46 | Appreciation Of English Literary texts | 4 | 4 | 0 | 0.0% | 2 | 50.0% | 1 | 25.0% | 1 | 25.0% | 0 | 0.0% | 0 | 4 | 100.0% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 104 | 104 | 36 | 34.6% | 29 | 27.9% | 26 | 25.0% | 10 | 9.6% | 3 | 2.9% | 0 | 101 | 97.1% |
| 51 | Drama & Theater (Tamil) | 62 | 61 | 19 | 31.1% | 23 | 37.7% | 17 | 27.9% | 2 | 3.3% | 0 | 0.0% | 1 | 61 | 100.0% |
| 80 | Information & Communication Tecnology | 106 | 106 | 28 | 26.4% | 25 | 23.6% | 36 | 34.0% | 14 | 13.2% | 3 | 2.8% | 0 | 103 | 97.2% |
| 81 | Agriculture & Food Technology | 12 | 12 | 6 | 50.0% | 1 | 8.3% | 4 | 33.3% | 0 | 0.0% | 1 | 8.3% | 0 | 11 | 91.7% |
| 85 | Home Economics | 1 | 1 | 0 | 0.0% | 0 | 0.0% | 1 | 100.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 1 | 100.0% |
| 86 | Health & Physical Education | 131 | 131 | 59 | 45.0% | 39 | 29.8% | 27 | 20.6% | 6 | 4.6% | 0 | 0.0% | 0 | 131 | 100.0% |

2) மேற்குறித்த இரண்டு பாடசாலைகளிலும் ஆங் கிலப் பாடத்தில் "A" பெற்ற வர்களின் சதவிகிதம் தாய் மொழியான தமிழ் பாடத் தில் "A" பெற்றவர்களை விட 16-20 சதவிகிதம் அதிகம்.

அதோடு மட்டுமல்லாமல், ஹாட்லி மற்றும் மெதடிஸ்த கல்லூரிகளின் "A" தர அடைவு மட்டங்களை விடவும் குறைவானது.

யாழ் இந்து, வேம்படி ஆகியவற் றில் ஆங்கில மொழியில் கற்பவர்க ளின் ஆதிக்கம் சற்று இருந்தாலும் இன் னொரு மொழியில் புலமை பெறுவது வரவேற்கலாம் என்றாலும், தாய் மொழி மீதான புலமை இம்மியளவும் குறைந்து விடாமல் எடுத்துக் காட்டாக இருக்க இந்த மாபெரும் கல் லூரிகள் கவனம் எடுக்கவேண்டியது அவசியம் என நினைக் கிறேன்.

3) கொக்குவில் இந்துக் கல்லூரியை பொறுத்த அளவில் பொது வில் நல்ல பெறுபேறுகள் இருந்தாலும், சற்று உன் னிப்பாக அவதானித்தால், தாய் மொழியான தமிழின் அடைவு மட்டம் கிட்டத் தட்ட 60 வீதமானவர்களில் "C" மற்றும் "S" சார்ந்தே காணப்பட்டது. அதே போல விஞ்ஞானப் பாடத்தில் 10 வீதமானவர்கள் சித்தியடையத் தவறியதோடு 37 வீதமானவர்கள் "S" சித்தி மட்டும் பெறமுடிந்தது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கவனம் எடுப்பது நல்லது.

4) யாழ் இந்து மகளிர் கல்லூரி முடிவுகளை

| School: J/HINDU Ladies COLLEGE | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Subject wise performance G.C.E O/L -2019- All medium Students - 1st Attempt | | | | | | | | | | | | | | | | |
| Subject No | Subject | Number of Applied | Number of Set | A | % of A | B | % of B | C | % of C | S | % of S | W | % of W | + | Pass | Passing Percentage (%) |
| 12 | Saivanery | 244 | 241 | 126 | 52.3% | 64 | 26.6% | 36 | 14.9% | 15 | 6.2% | 0 | 0.0% | 3 | 241 | 100% |
| 14 | Catholiciam | 4 | 4 | 2 | 50.0% | 0 | 0.0% | 2 | 50.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 4 | 100% |
| 15 | Chritianity | 3 | 3 | 0 | 0.0% | 2 | 66.7% | 0 | 0.0% | 1 | 33.3% | 0 | 0.0% | 0 | 3 | 100% |
| 22 | Tamil Language & Lit | 251 | 248 | 35 | 14.1% | 72 | 29.0% | 108 | 43.5% | 31 | 12.5% | 2 | 0.8% | 3 | 246 | 99% |
| 31 | English | 251 | 248 | 22 | 8.9% | 30 | 12.1% | 78 | 31.5% | 82 | 33.1% | 36 | 14.5% | 3 | 212 | 85% |
| 32 | Mathematics | 251 | 248 | 57 | 23.0% | 46 | 18.5% | 81 | 32.7% | 43 | 17.3% | 21 | 8.5% | 3 | 227 | 92% |
| 33 | History | 251 | 248 | 79 | 31.9% | 44 | 17.7% | 75 | 30.2% | 36 | 14.5% | 14 | 5.6% | 3 | 234 | 94% |
| 34 | Science | 251 | 248 | 18 | 7.3% | 21 | 8.5% | 74 | 29.8% | 85 | 34.3% | 50 | 20.2% | 3 | 198 | 80% |
| 60 | Business & Acc | 151 | 151 | 42 | 27.8% | 29 | 19.2% | 39 | 25.8% | 22 | 14.6% | 19 | 12.6% | 0 | 132 | 87% |
| 61 | Geography | 28 | 28 | 6 | 21.4% | 4 | 14.3% | 14 | 50.0% | 4 | 14.3% | 0 | 0.0% | 0 | 28 | 100% |
| 62 | Citizenship Education & Governance | 67 | 64 | 5 | 7.8% | 16 | 25.0% | 19 | 29.7% | 18 | 28.1% | 6 | 9.4% | 3 | 58 | 91% |
| 63 | Entrepreneurship Studies | 3 | 3 | 0 | 0.0% | 1 | 33.3% | 1 | 33.3% | 1 | 33.3% | 0 | 0.0% | 0 | 3 | 100% |
| 64 | Second language (Sinhala) | 2 | 2 | 0 | 0.0% | 1 | 50.0% | 1 | 50.0% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 2 | 100% |
| 42 | Music (Carnatic) | 40 | 40 | 14 | 35.0% | 14 | 35.0% | 10 | 25.0% | 2 | 5.0% | 0 | 0.0% | 0 | 40 | 100% |
| 43 | Art | 17 | 17 | 2 | 11.8% | 5 | 29.4% | 8 | 47.1% | 2 | 11.8% | 0 | 0.0% | 0 | 17 | 100% |
| 45 | Dancing (Bharatha) | 23 | 23 | 19 | 82.6% | 2 | 8.7% | 2 | 8.7% | 0 | 0.0% | 0 | 0.0% | 0 | 23 | 100% |
| 46 | Appreciation Of English Literary texts | 6 | 6 | 2 | 33.3% | 2 | 33.3% | 1 | 16.7% | 1 | 16.7% | 0 | 0.0% | 0 | 6 | 100% |
| 48 | Appreciation Of Tamil Literary texts | 156 | 153 | 68 | 44.4% | 31 | 20.3% | 32 | 20.9% | 18 | 11.8% | 4 | 2.6% | 3 | 149 | 97% |
| 51 | Drama & Theater (Tamil) | 9 | 9 | 2 | 22.2% | 4 | 44.4% | 2 | 22.2% | 1 | 11.1% | 0 | 0.0% | 0 | 9 | 100% |
| 80 | Information & Communication Tecnology | 120 | 120 | 38 | 31.7% | 24 | 20.0% | 29 | 24.2% | 23 | 19.2% | 6 | 5.0% | 0 | 114 | 95% |
| 81 | Agriculture & Food Technology | 32 | 30 | 1 | 3.3% | 3 | 10.0% | 10 | 33.3% | 13 | 43.3% | 3 | 10.0% | 2 | 27 | 90% |
| 85 | Home Economics | 8 | 8 | 0 | 0.0% | 1 | 12.5% | 4 | 50.0% | 3 | 37.5% | 0 | 0.0% | 0 | 8 | 100% |
| 86 | Health & Physical Education | 58 | 58 | 11 | 19.0% | 17 | 29.3% | 20 | 34.5% | 9 | 15.5% | 1 | 1.7% | 0 | 57 | 98% |
| 87 | Communication & Media Studies | 33 | 32 | 1 | 3.1% | 1 | 3.1% | 12 | 37.5% | 12 | 37.5% | 6 | 18.8% | 1 | 26 | 81% |

பார்த்தால் தமிழ்மொழியின் அடைவு மட்டங்கள் மேல் நோக்கி நகர்த்தப்படவேண்டிய தேவை அவ தானிக்கப்பட்டதோடு, பரீட்சைக்குத் தோற்றிய 248 மாண வர்களில் 50 மாணவர்கள் (20%) விஞ்ஞான பாடத்தில் சித்தியடைவில்லை. இது ஒரு கணிச மான சரிவு. அத்துடன் வர்த்தகமும் கணக்கியலும் பாடத்திலும் ஒப்பீட்டு அளவிலான சரிவு அவதா னிக்கப்பட்டதோடு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

**அத்தியாயம் தொடரும்...**

# யாரிடமிருந்து...

(04 ஆம் பக்கத்தொரடர்ச்சி)

இங்கு கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில் இரண்டு சங்கங்களிலும் சமகாலத்தில் ஒரு பெண் அங்கத்தவராக இருக்க முடி யாது என்பதே. இது நிர்வாக குளறு படிகளையும் நலன்களின் முரண்பாடு களையும் தோற்றுவிக்கும் என்பதால் இறுக்கமான விதியாக பின்பற்றப்பட வேண்டியுள்ளது.

கிராம அபிவிருத்தி சங்கங்கள் தங்களது கிராமத்திலுள்ள அனைத்து குடும்பங்களையும் தங்களது செயற்படு அங்கத்தவர்களாக மாற்றுவதுடன் தங்களது கிராமத்திற்கான அபிவி ருத்தி திட்டமிடலை முன்னெடுக்க வேண்டும். அத்திட்ட முன் மொழிவு களையே பிரதேச சபைகளுக்கும் பிர தேச செயலகங்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும்



முன்னிலைப்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து கிராமத்தின் அபிவிருத் திக்கு தலைமை தாங்க வேண்டும். உபகொந்தராத்து வேலைகளில் ஈடுப டுவதும் இலாபம் உழைப்பதும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் முதன்மை யான நோக்கமல்ல என்பதனை கிராம அபிவிருத்தி சங்கங்களும் அதன் தலை வர்களும் புரிந்து கொள்ளவேண்டும்.

கிராமங்களில் சமூகமட்டத்தில் முதன்மையான கடமையும் பொறுப் பும் கொண்டுள்ள மற்றுமொரு அமைப்பாக சனசமூக நிறுவனங்கள் இருக்கின்றன. மக்களை சமூகமாக ஒன்று திரட்டி அவர்களின் நலன்களை மேம்படுத்துவதற்கான அச்சாணியாக இவை செயலாற்ற வேண்டியுள்ளது. மக் களின் அறிவினையும் சிந்திக்கும் அணு குமுறையினையும் வளம்படுத்தி பரந்த பார்வையும் பொறுப்புணர்வும் கூட் டுப்பொறுப்பும் கொண்டவர்களா கவும் ஒருங்கிணைக்கும் முதன்மை யான பாத்திரம் சனசமூக நிலையங்க ளுக்கு உரியது.

சமூக அங்கத்தவர்களின் உள உடல் நலம், சுற்றுப்புறச் சூழல் ஆரோக்கியம், வாழ்வாதார மேம்பாடு, அறிவூட்ட லும் வாழ்க்கை வழிகாட்டலும் விழு மியங்களின் மேம்பாடு, சமூக அமை தியும் ஒழுக்கமும் இளையோரின் ஆற் றல்கள் மேம்படும் பொழுது போக்கும் அறிவியல் மேம்பாடும் சமூகத்தின் நலிந்தோர் எல்லை நிலைப் படுத்தப் பட் டோர் ஏதி லிகள் ஆகியோ ரின் இடர்களைதல் என இன்னோரப்பட்ட விடயங் களை முன்னிலைப்படுத்தி பேசுவதற் கும் செயற்படுத்துவதற்கும் ஏற்றவகை யில் மக்கள் கூட்டாக சமூகமளித்து கலந்துரையாடும், தீர்மானங்களை மேற்கொள்ளும், வளங்களைக் கண்ட றியும், செயற்படுத்தும் நிலையமாக சனசமூக நிலையங்களை அன்று மீட்டெடுத்து வலுப்படுத்த வேண்டி யுள்ளது.

இவ்விடயங்களை விபரமாக எதிர் வரும் வாரங்களில் நாங்கள் பார்க்க முடியும்.


## வேலைக்கு ஆள் தேவை

கிளிநொச்சியிலுள்ள பண்ணை ஒன்றைப் பராமரிக்க ஆள் தேவை.

சம்பளம் - 40,000.00

தங்குமிடம் வசதி வழங்கப்படும்

தொடர்பு:

077 168 6895

## காணி தேவை

30 - 35 பேர்ச் அளவுள்ள தொடர்மாடிக் கட்டடம் கட்டுவதற்கு உகந்த காணி தேவை. தரகர்கள் வேண்டாம்.

தொடர்பு:

077 713 3542



# பீபாவின் சிறந்த வீரர் யார்?

பீபாவின் சிறந்த வீரர், வீராங்கனை, ஆண் கோல்கீப்பர், பெண் கோல்கீப்பர், ஆண் பயிற்சியாளர், பெண் பயிற்சியாளர் ஆகியோருக்கான விருதுப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனவரி 21 ஆம் திகதி சூரிச்சில் விருது பெறுபவர்களின் பெயர் அறிவிக்கப்படும். ஒவ்வொரு துறையிலும் 25 க்கு மேர்பட்ட வீரர்களின் பெயரி பரிந்துரைக்கப்பட்டு மூவரின் பெயர் கொண்ட இறுதிப் பட்டியலில் வெளியிடப்பட்டுள்ளது.

**சிறந்த மகளிர் வீரராங்கனை**

ஜெனிபர் ஹெர்மோசோ (ஸ்பெயின் / எஃப்சி பார்சிலோனா)

சாம் கெர் (அவுஸ்திரேலியா / செல்சியா எஃப்சி பெண்கள்)

அலெக்ஸியா புடெல்லாஸ் (ஸ்பெயின் / எஃப்சி பார்சிலோனா)

**சிறந்த ஆண்கள் வீரர்**

ராபர்ட் லெவன்டோவ்ஸ்கி (போலந்து / எஃப்சி பேயர்ன் முன்சென்)

லியோனல் மெஸ்ஸி (ஆர்ஜென்ரீனா / எஃப்சி பார்சிலோனா / பாரிஸ் செயின்ட் ஜெர்மைன்)

முகமது சலா (எகிப்து / லிவர்பூல் எஃப்சி)

**சிறந்த மகளிர் கோல்கீப்பர்**

ஆன்-கேட்ரின் பெர்கர் (ஜேர்மனி / செல்சியா எஃப்சி பெண்கள்)

கிறிஸ்டியன் எண்ட்லர் (சிலி / பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் / ஒலிம்பிக் லியோனைஸ்)

ஸ்டெபானி லின் மேரி லேபே (கனடா / எஃப்சி ரோசன்கார்ட் / பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன்)

**சிறந்த ஆண்கள் கோல்கீப்பர்**

ஜியான்லூகி டோனாரும்மா (இத்தாலி / ஏசி மிலன் / பாரிஸ் செயிண்ட்-ஜெர்மைன்)

எட்வார்ட் மெண்டி (செனகல் / செல்சியா எஃப்சி)

மானுவல் நியூயர் (ஜெர்மனி / எஃப்சி பேயர்ன் முன்சென்)

**மகளிர் பயிற்சியாளர்**

லூயிஸ் கோர்டெஸ் (ஸ்பெயின் / எஃப்சி பார்சிலோனா)

எம்மா ஹேய்ஸ் (இங்கிலாந்து / செல்சியா எஃப்சி பெண்கள்)

சரினா வீக்மேன் (நெதர்லாந்து / டச்சு தேசிய அணி ஃ இங்கிலாந்து தேசிய அணி)

**ஆண்கள் பயிற்சியாளர்**

பெப் கார்டியோலா (ஸ்பெயின் / மான்செஸ்டர் சிட்டி எஃப்சி)

ராபர்டோ மான்சினி (இத்தாலி / இத்தாலிய தேசிய அணி)

தாமஸ் துச்செல் (ஜேர்மனி / செல்சியா எஃப்சி) ■

# விபத்துக்குள்ளான ஒலிம்பிக் வாகனங்களுக்கு உதவத் தடை




குளிர்கால ஒலிம்பிக் வாகனம் விபத்தில் சிக்கினால் எந்தவித உதவியையும் செய்ய வேண்டாம் என பீஜிங் காவல்துறை மக்களை எச்சரித்துள்ளது.

சீனாவின் தலைநகர் அடுத்த மாத ஒலிம்பிக் போட்டிகளை “மூடிய வளையத்தில்” நடத்தும், இதனால் விளையாட்டு வீரர்களும் மற்ற பங்கேற்பாளர்களும் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ள மாட்டார்கள். அதிகாரிகள் கடந்த வாரம் குமிழியை மூடிவிட்டனர், அதாவது ஆயிரக்கணக்கான ஊழியர்கள், தன்னார்வலர்கள், துப்புரவுப் பணியாளர்கள், சமையல்காரர்கள் மற்றும் பயிற்சி ஓட்டுநர்கள் வெளி உலகத்துடன் தொடர்பு இல்லாமல் வாரக்கணக்கில் தனிமைப்படுத்தப்பட்டிருப்பார்கள்.

கொரோனா பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகக் கடுமையான முன்னேற்பாடுகளை சீனா நடைமுறைப்படுத்த உள்ளது. பீஜிங் காவல்துறை ஒரு அறிக்கையை வெளியிட்டது, “ஒலிம்பிக் வாகனம் விபத்துக்குள்ளானால் உள்ளூர் வாசிகள் உதவ அவசரப்படக்கூடாது.” குளிர்கால ஒலிம்பிக்கிற்கான சிறப்பு வாகனங்களுடன் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்பட்டால், பாதுகாப்பான தூரத்தை பராமரிப்பதில் கவனம் செலுத்துங்கள்” என்று பீஜிங்கின் போக்குவரத்து மேலாண்மை பணியகம் ட்விட்டர் போன்ற வெய்போவில் ஒரு இடுகையில் தெரிவித்துள்ளது. “வாகனங்கள் அல்லது அவற்றில் உள்ள பணியாளர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம் மற்றும் நிபுணர்கள் சம்பவ இடத்திற்கு வரும் வரை காத்திருக்கவும்.” என பதிவிட்டுள்ளது. இதனால் அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள்.

உலகளாவிய ஊடகங்கள் மற்றும் சுமார் 3,000 விளையாட்டு வீரர்கள் சீன தலைநகருக்கு எதிர்வரும் வாரங்களில் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது, மேலும் அவர்கள் தரையிறங்கிய தருணத்திலிருந்து அவர்கள் நாட்டை விட்டு வெளியேறும் வரை குமிழியில் இருப்பார்கள்.

குமிழிக்குள் நுழையும் எவரும் முழுமையாக தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் கீழே தொடும்போது 21 நாள் தனிமைப்படுத்தப்பட வேண்டும், மேலும் உள்ளே இருக்கும் அனைவரும் தினமும் சோதிக்கப்படுவார்கள் மற்றும் எல்லா நேரங்களிலும் முகமூடிகளை அணிய வேண்டும்.

இந்த அமைப்பில் இடங்களுக்கிடையில் பிரத்தியேக போக்குவரத்தை உள்ளடக்கியது, மூடிய-லூப் அதிவேக இரயில் அமைப்புகள் பொதுமக்களுக்குத் திறந்திருப்பதற்கு இணையாக இயங்குகின்றன.

விளையாட்டுகளுடன் இணைக்கப்பட்ட சாத்தியமான கொரோனா வைரஸ் வெடிப்பைத் தடுப்பதற்கான சீனாவின் கடுமையான விதிகள் மிகவும் தொற்றுநோயான ஓமிக்ரோன் மாறுபாட்டின் வெளிப்பாட்டின் மூலம் சோதிக்கப்படும்.

நாட்டில் இதுவரை ஒரு சில ஓமிக்ரோன் வழக்குகள் மட்டுமே பதிவாகியுள்ளன, ஆனால் பல நகரங்களில் வைரஸ் கிளஸ்டர்களை அகற்ற அதிகாரிகள் போராடி வருகின்றனர், பல்லாயிரக்கணக்கானவர்கள் சோதிக்கப்படுகிறார்கள் மற்றும் மில்லியன் கணக்கானவர்கள் பூட்டப்பட்டுள்ளனர். ■

# ஏழு வருடங்கள் கழித்து ஐ.பி.எல்க்கு வரும் வீரர்

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நட்சத்திர வீரர் அதிரடி வேகப்பந்து வீச்சாளரான மிட்சேல் ஸ்டார்க் ஐ.பி.எல் ஏலத்தில் பங்கேற்கப் போவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

இதுபற்றி கிரிக்கெட் அவுஸ்திரேலியா இணையதளத்தில் அவர் கூறுகையில்,

ஐ.பி.எல் 2022 மெகா ஏலத்தில் பங்கேற்பதற்கான ஆவணங்களில் விரைவில் கையெழுத்திட போவதாகவும், இந்த முறை கிரிக்கெட் அட்டவணை எப்படி இருந்தாலும் ஐ.பி.எல் தொடரில் பங்கேற்கப் போவது உறுதி எனவும் தெரிவித்துள்ளார். “கடந்த 6 வருடங்களாக நான் பங்கேற்கவில்லை, கடந்த காலங்களில் குறிப்பிடும் அளவுக்கு அதிகப்படியான ரி-20 போட்டிகள் இருந்ததாலும் இந்த வருடத்தின் இறுதியில் ரி-20 உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுவதாலும் இதை கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. எங்களைப் போன்ற பல வகையான கிரிக்கெட் வீரர்களுக்கு அட்டவணையைப் பொறுத்து திட்டமிடல் வேண்டியுள்ளது என்று தெவித்துள்ளார்.”

இது பற்றி மேலும் தெரிவித்த அவர், வரும் ஒக்டோபர் மாதம் தங்களது சொந்த மண்ணில் நடைபெற உள்ள 2022 ஐசிசி ரி-20 உலகக் கிண்ணப் போட்டிக்குத் தயாராகும் வண்ணம் இந்த வருடம் ஐ.பி.எல் தொடரில் பங்கு பெற உள்ளதாக தெரிவித்துள்ளார்.



நவீன கிரிக்கெட்டில் உலகின் தலை சிறந்த பந்து வீச்சாளராக வலம் வரும் அவுஸ்திரேலியாவை சேர்ந்த ஸ்டார்க் கடந்த 2012 முதல் ஐ.பி. எல் தொடரில் தொடர்ந்து விளையாடி வந்தார், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக 2015 வரை விளையாடிய அவர் ஐ.பி.எல் தொடரில் இதுவரை 27 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். இருப்பினும் கடந்த 6 வருடங்களாக அதிகப்படியான பணிச்சுமையை குறைத்துக் கொண்டு தனது சொந்த நாட்டுக்காக அதிகம் விளையாட வேண்டும் என்பதற்காக ஐ.பி.எல் தொடரை புறக்கணித்து வந்தார். ஆனால் அடுத்த ஆறு மாதங்களுக்கு பின் தங்களின் சொந்த ஊரில் 20 ஓவர் உலகக் கிண்ணப் போட்டி நடைபெறுவதை ஒட்டி அவர் இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிகிறது. இடது கை வேகப்பந்து வீச்சாளராக இருக்கும் காரணத்தால் இவரை ஐ.பி.எல் 2022 மெகா ஏலத்தில் அதிக விலைக்கு வாங்க அனைத்து அணிகளும் விரும்பும் என எதிர்பார்க்கலாம். ■

# இணைய மயமாகும் 'பறவை பார்த்தல்!'

பறவை பார்த்தல் என்பது உலகின் மிகப் பெரிய பொழுதுபோக்குகளுள் ஒன்று. ஆனால், இதற்கென கானகத்திற்குப் போக வேண்டுமே என்று நினைப்போருக்கு உதவ வருகிறது




அமெரிக்காவைச் சேர்ந்த 'பேர்ட் பட்டி' (mybirdbuddy.com). இயற்கைக்கும் ஆர்வலர்களுக்கும் நேரடி தொடர்பை ஏற்படுத்துவதுதான் நோக்கம் என்கின்றனர் இதனை நிறுவியவர்கள்.

பேர்ட் பட்டி என்பது ஒரு நவீன பறவைக்கூண்டு. அதில், பறவைகளுக்கான இரையை வெளியேற்றும் வசதி உண்டு. மேலும், இரை உண்ண வரும் பறவைகளை புகைப்படம் அல்லது வீடியோ எடுக்கும் வசதியுள்ள கமெராவும் இந்தக் கூண்டோடு இணைக்கப் பட்டுள்ளது.

பறவை ஆர்வலர் இந்தக் கூண்டை வாங்கி, தனது வீட்டு மாடி அல்லது பின்புற தோட்டத்தில் நட்டுவைத்து விடலாம். பறவைகள் வந்து அமர்ந்ததும், கூண்டே புகைப்படம் எடுத்து ஆர்வலரின் மொபைலில் உள்ள பேர்ட் பட்டி செயலிக்கு அனுப்பிவிடும். அருகே இருந்தால், ஆர்வலர் சத்தமில்லாமல் வந்து, கூண்டில் தீனி தின்னும் பறவையை ரசிக்கலாம்.

வீடு தேடி வரும் பறவைகளின் புகைப்படங்களை சேகரிப்பதை ஒரு வீடியோ கேம் போலவே பேர்ட் பட்டியின் நிறுவனர்கள் வடிவமைத்துள்ளனர். 'போகேமான் கோ' வீடியோகேம் போலவே இதிலும், ஒவ்வொரு புதுமையான பறவையின் புகைப்படத்துக்கும் கூடுதல் புள்ளிகள், பேட்ஜுகள் போன்றவற்றை வெல்ல முடியும்.

வழக்கமாக பறவை பார்த்தலில் ஆர்வமுள்ளவர்களால் புகைப்படங்களை எடுக்க முடியாது. ஆனால், பேர்ட் பட்டியை வாங்கி வைப்பவர்களால், வந்து செல்லும் ஒவ்வொரு பறவையின் படத்தையும் தவறாமல் எடுக்க முடிவதோடு, அவற்றை சேமிக்கவும், பிறருக்குக் காண்பிக்கவும் முடியும்.

பேர்ட் பட்டி வைத்திருப்போர், சமூக வலைத்தளங்களில் தங்கள் வீட்டுக்கு வந்த பறவை விருந்தாளிகளைப் பற்றி பெருமையுடன் பகிர முடியும். அதே விருந்தாளி இன்னொரு பேர்ட் பட்டி வைத்திருப்பவரின் வீட்டுக்கும் வந்திருந்தால் அதையும் உடனே கண்டுகொள்ள முடியும். விரைவில், செயலியே அரிய பறவைகளை இனம் கண்டுபிடிக்கும் வசதியை அறிமுகப்படுத்தவுள்ளனர்.




## மனிதன் பாதி மிருகம் பாதி

முன்னொரு காலத்தில் ஓர் அழகிய தீவை ஒரு மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் தனது நாட்டு மக்களை அறநெறியில் ஆட்சி செய்து வந்தான். தீவின் ஒரு பகுதி நாடென்றால் இன்னொரு பகுதி அடர்ந்த காடு. அந்தக் காட்டை ஒரு சிங்கம் ஆண்டு வந்தது. காட்டிலும் சரி நாட்டிலும் சரி நல்லாட்சியே நிலவியது.



ஆனால், ஓர் இடைப்பட்ட காலத்தில் மன்னன் தனது நாட்டை நிர்வகிப்பது தொடர்பில் மிகவும் குழப்பமடைந்தான். தன்னைச் சுற்றியிருப்பவர்களில் உண்மையானவர்கள் யார்? பொய்யானவர்கள் யார்? என அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இவ்வாறு இருக்கையில் ஒரு நாள், அரசன் காட்டின் அரசனான சிங்கத்தைப் பார்க்கச் சென்றார். போகும் வழியெல்லாம் பறவைகளும் விலங்குகளும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டன. சிங்கத்தின் குகையை அடைந்தும் சிங்கராஜா, நரி மற்றும் குரங்கு வந்து அரசரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றது. விருந்து கொடுத்து அரசரை உபசரித்தனர். விருந்து முடிவடைந்த பின்னர் அரசரும் சிங்கராஜாவும் சாவகாசமாகக் காட்டில் காற்று வாங்கியவாறு உலாவினார்கள். அப்போது அரசர் தனது மனக்குழப்பங்களைப் பற்றிக் கூறிக் கவலைப்பட்டார். பின்னர், அரசர் சிங்கராஜாவிடம் "நரி இனங்கள் பொதுவாக தந்திரம் மிகுந்தவை, அவைகளை உயர்ந்த பதவிகளில் அமர்த்துவதை விட குரங்குகளை அமர்த்தினால் அவை விசுவாசமாகச் செயற்படுமே?" எனக் கேட்டார். அதற்கு சிங்கராஜா ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுக் கூறினார். "அரசே! நாடோ அல்லது காடோ அதைச் சிறப்பாக ஆட்சி செய்வதற்கு அனைத்து விதமான சேவையாளர்களும் தேவை. தந்திரமான எதிரிகளுக்கு முகங்கொடுப்பதற்குத் தந்திரமுள்ள வீரர்கள் தேவை. ஒரு நாட்டிற்கு நரியும் தேவை குரங்கும் தேவை; ஆமையும் தேவை குதிரையும் தேவை; ஆகவே நமக்குத் தேவையான சேவகர்களை நாம்தான் கண்டு பிடிக்க வேண்டும்.



மாலை அரசர் தனது சந்திப்பை முடித்து விட்டு ஒரு தெளிந்த மனதுடன் அரண்மனைக்குச் சென்றார். அதன் பின் அவர் தனது ஆட்சி நிலைமை பற்றி குழப்பமடையாமல் சிறந்த நல்லாட்சியை நடாத்தி மக்களால் சிறந்த அரசன் எனப் போற்றப் பட்டார்.

**ஞா.ஸாகரி**
தரம்-09
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## விடுகதைகள்

1. அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன?
   **நிலா**
2. பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன?
   **பெட்ரோல்**
3. இரவும் பகலும் ஓய்வு இல்லை, படுத்தால் எழுப்ப ஆள் இல்லை அது என்ன?
   **இதயம்**
4. அண்டமென்ற பெயரும் உண்டு, அடைகாத்தால் குஞ்சுமுண்டு. அது என்ன?
   **முட்டை**
5. ஒற்றைக் காலில் ஆடுவான், ஓய்ந்து போனால் படுப்பான். அவன் யார்?
   **பம்பரம்**



## பள்ளி




நமக்குக் கல்வி கொடுத்திடும்
நன்மைகளும் கொடுத்திடும்
ஒழுக்கத்தையும் தந்திடும்
ஒற்றுமையைப் பழக்கிடும்
நல்ல ஆசான் தந்திடும்
நல்ல நண்பர் தந்திடும்
நன்றி என்றும்
சொல்லுவோம்
எங்கள் நல்ல பள்ளிக்கு

**ஷபின்**

**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
**கனகசபை கட்டடத் தொகுதி**
**பருத்தித்துறை வீதி, நெல்லியடி.**
தொ.பே.: 0777 133 542





## ஆளை மயக்கும் காற்றாலை!

சில சமயம், வடிவமைப்பாளர்களே விஞ்ஞானிகள் போலவும் செயற்படுவதுண்டு. நியூயோர்க்கைச் சேர்ந்த ஜோ டூசெட், ஏன் வீட்டில் பொருத்தும் காற்றாலைகள் அழகு பொருட்கள் போலவும் இருக்கக்கூடாது என்று சிந்தித்தார். அதன் விளைவாக உருவானது தான் 'சுழலும் சுவர்' என்ற கைனெடிக் வால். பெயருக்கு ஏற்றபடி சுவர் போலவும், அதில் சுழலும் விசிறிகளும் பொருத்தப்பட்டுள்ளன. லேசான காற்றடித்தாலே இந்த சுழல் விசிறிகள் இயங்குகின்றன. அப்படி இயங்குவதை வேடிக்கை பார்ப்பதே ஆளை வசீகரிப்பது போல் உள்ளது. காற்றாலையை வீட்டில் பொருத்த வேண்டாம் என்று நினைப்பவர்கூட, இந்த சுழல் சுவரின் அழகைப் பார்த்தால், மாற்று எரிசக்திப் பிரியர் ஆகிவிடுவார். ஒரு சுவரில் 25 செங்குத்துடர்பைன்கள் இருக்கும் ஒவ்வொன்றும் 400 வாட் அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும். மொத்தம் 10 கி.வாட் மின்சாரம் இதன் மூலம் தயாரிக்க முடியும். வீட்டுச் சுவர்கள் மேலேயோ, மொட்டை மாடியிலோ இந்த சுழலும் சுவர் காற்றாலையை மாட்டிவைக்கலாம்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 15.01.2022 அன்று வெளியிடப்பட்டது.